கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



தமனா
-பயணக் குறிப்புகள்

KALKI • 31.08.2008 • ரு.10.00 • 96 பக்கங்கள்



பள்ளிப்
பாடங்களில்
ரயில்வே
நியூஸ்?

- இணை அமைச்சர்
வேலு பேட்டி

கடலில்
மூழ்கும்
சென்னை!

- எச்சரிக்கும்
நம்மாழ்வார்



ஏராளமான டிசைன்கள்,
தாராளமான ஷாப்பிங் வசதிகள்,
கனிவான சேவை,
மிக நிறைவான தரம்,
என
அனைத்திலும்
BEST!
Shop online at www.sktm.in
கடையுடன் கூடிய விசாலமான கார் பார்க்கிங்
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகைகள்
தி சென்னை சில்க்ஸ்
ஜுவல்லரி மஹால்
ஸ்ரீ குமரன்
தங்கமாளிகை
(தி சென்னை சில்க்ஸ் அருகில்)
தி.நகர். சென்னை-17.போன்: 044-24330888
கோவை • திருப்பூர் • ஈரோடு • திருச்சி

சமீபத்தில் மறைந்த மராத்தி நாடக ஆசிரியர் விஜய் டெண்டுல்கரின் நினைவாக, வங்காள நாடக ஆசிரியர் பாதல் சர்க்காரின் 'போமா' என்ற நாடகத்தை, தமிழில் 'முனியன்' என்ற பெயரில் வழங்கினார் பரீக்ஷா ஞாநி.

'முத்ரா' சபா ஏற்பாடு செய்திருந்த இந்நாடகம் மனிதனின் மொழி, அவனின் உடல் இந்த இரண்டை மட்டுமே கவனத்தில்கொண்டு வீதியில் நடத்தப்படும் நாடக வகையைச் சார்ந்தது.

சென்னை, தி.நகர், ராமகிருஷ்ணமிஷன் ஸ்கூலில் அழகான அரங்கத்தில் நாடக மேடை இருந்தாலும், பார்வையாளர்களை வட்டமாக உட்கார வைத்து, நடுவில் நாடகம் நடந்தேறியது.

அணுஅணுவாய் அழியப்போகும் இந்தப் பூமியை முனியனால்தான் காப்பாற்ற முடியும். எனவே, ஒவ்வொருவரும் அவனைத் தேடி அலைய, முனியனோ கிராமத்தைவிட்டு நகரத்துக்கு இடம்பெயர்கிறான். முனியன் வேறுயாருமில்லை. முனியன் தான் காதல்; கிராமம்; மானுட சக்தி. ஒவ்வொருவருக்குள்ளும் அவன் இருக்கிறான். அழியப் போகும் அவனை நீங்கள் காக்க வேண்டும். அப்போதுதான் பூமி



காப்பாற்றப்படும் என்று நேரடியாகச் சொல்லாமல், மறைமுகமாகச் சொல்லிச் செல்கிறது இந்நாடகம்.

'முனியன்' நாடகத்தில்...

★ அணுகுண்டு பரிசோதனையால் உடல் உறுப்பு பாதிக்கப்பட்ட ஒருவனுக்குப் பிச்சையிடும்போது, ''உன் குழந்தையாவது முழுசா, அழகா பொறக்கட்டும் சாமி'' என்று பிச்சைக்காரன் வாழ்த்துவது.

★ ''தண்ணி இல்ல, கரண்ட் இல்ல, விதையில்ல, உரமில்ல, கிராமத்தவிட்டு நகரத்துக்குப் போயிடலாம்... சித்தாள் வேலை பாத்து





சிவனேன்னு பிளாட்ஃபாரத்துல படுக்கலாம்'' என்று புலம்பும் கிராமத்தான்.

★ அமெரிக்காவைக் கடவுளாக்கி மந்திரம் ஓதி, 'பாலம் கட்ட, குடிநீர் கொடுக்க குழிதோண்ட, படிப்பு கொடுக்க டாலரா கொடு சாமி' என வேண்டுகிற சாதுர்யக் காட்சி.

நடிகர்கள் கறுப்பு வெள்ளையில் முகமூடி போல முகத்தில் வரைந்து பொதுத் தன்மையைப் புரிய வைத்தனர். ஞாநி அணுசக்தியால் பாதிக்கப்பட்ட மனிதராக நடித்தார். 'முனி' என்றால் தமிழில் காற்று ' என்று பொருள். முற்றிலும் புதிய நாடக

அனுபவத்தைத் தந்த இக்காற்றை இயக்கிய இயக்குநர் பரீக்ஷா ஞாநி நம்மிடம் பேசுகையில்...

''1954ல் எம்.ஆர்.ராதாவுக்காகப் போடப்பட்ட நாடகத் தடைச் சட்டம்,அவரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் இக்காலத்தில், இன்னும்கூட தமிழகத்தில் நீக்கப்படவில்லை. இம்மாதிரியான வீதி நாடகங்களைப் பயிற்றுவிக்க 'பரீக்ஷா' குழு தயாராக உள்ளது'' என்றார்.

காத்தாடி ராமமூர்த்தி உட்பட நிறைய நாடகக் கலைஞர்களும் முன்னூறுக்கு மேற்பட்டவர்களும் ஆவலோடும் ஆச்சரியத்தோடும் ரசித்துக்கொண்டிருக்கையில், ''காலம் இன்னும் கொஞ்சம் தான் இருக்கு! பூமி அழியப் போகுது, ஏதாவது செய்யுங்க'' என்று புலம்பியபடியே ஒரு நாடகக் கலைஞர் துண்டுப்



ஒவ்வொருவருக்குள்ளும் 'முனியன்'

பிரசுரங்களை விநியோகித்தார். அதில் பதினெட்டு தகவல்கள் அச்சாகி இருந்தன. அதில் ஒன்று: ''இமயமலையில் அமெரிக்கா திருட்டுத்தனமாக வைத்த அணுசக்தி உளவுக் கருவி காணாமல் போய், அதிலிருந்து கதிர்வீச்சுக் கசியத் துவங்கியுள்ளது. கங்கைக் கரை, இந்தியர்களின் நிலை கேள்விக் குறிதான். கெட்ட கனவு கண்டு நடுசாமத்தில் விழித்தவனின் நிலையில் இருந்தது பார்வையாளர்களின் முகங்கள்.

- அமிர்தா

படங்கள் : **மணிமேகலை நாகலிங்கம்**

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர் : **கதிர்பாரதி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.2,700/-


Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

சத்தியமூர்த்தி பவனில் மீண்டும் கலகலப்பு முகாம் போட்டிருக்கிறது. ராஜீவ் பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் பிஸியாக இருந்தார் தங்கபாலு. அவரிடம் சில கேள்விகளும் அவரது நறுக் பதில்களும்:

எப்படியிருக்கிறது தமிழக காங்கிரஸ்?

''கட்சி மிக எழுச்சியோடு புதிய நடை போடுகிறது. காங்கிரஸ் தொண்டர்கள் கட்சிக்குள் ஒற்றுமையை விரும்புகிறார்கள். நான் போகும் இடங்களில் எல்லாம், தொண்டர்களின் உற்சாகத்தைப் பார்க்கிறேன். இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு தமிழக காங்கிரஸ் பிரமுகர்கள், ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்பதே என் ஆசை. அதற்காகவே முயன்று வருகிறேன். என் முயற்சி நிறைவேறி வருகிறது. நாற்பது



''என்னை யாரும்

ஆண்டுகளாகக் கட்சியில் இருக்கிறேன். எல்லோரது ஆலோசனையும் கேட்டு கட்சிக்கு எது நல்லது, எது உகந்தது என பகுத்தறிந்து, தலைமை கட்டளைப்படி செயல்படுவேன்.''

உங்கள் மதுரை பயணத்தின்போது, வாசன் கோஷ்டி தனித்துச் செயல்படுவது பளிச்சென தெரிந்தது. ராஜீவ் பிறந்த நாளில், தனியாக சென்னையில் கூட்டம் நடத்தியிருக்கிறார்களே?

''பத்திரிகைகளில் மதுரைச் சம்பவத்தைப் பற்றித் தவறான செய்தி வந்துள்ளது. நான் மதுரைக்குச் சென்றபோது ராம்பாபு, ராஜேந்திரன் (வாசன் ஆதரவாளர்கள்) என்னை வரவேற்றார்களே தவிர, தனித்து எந்தக் கூட்டமும் நடத்தவில்லை. நிகழ்ந்த ஒரே கூட்டம் என் தலைமையில்தான் நடந்தது. எனக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்றால், சோனியா காந்திக்கு எதிராகச் செயல்படுவதாகத்தான் அர்த்தம். எனக்கெதிராக யாரும் செயல்பட முடியாது.''

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி... தமிழகத்தில் உங்கள் தோழமைக் கட்சியின் ஆட்சி. இந்நிலையில் நீங்கள் எந்த ஒரு விஷயத்துக்கும் போராட முடியுமா?

''இலங்கை ராணுவத்தால், நமது மீனவர்கள் தாக்கப்படும் பிரச்னையில் நாங்கள் பிரதமரிடம் முறையிட்டோம். சார்க் மாநாட்டுக்குச் சென்றபோது பிரதமர் இந்தப் பிரச்னை குறித்து, இலங்கை

எதிர்க்க முடியாது!”

- தங்கபாலு பேட்டி



ஜனாதிபதியுடன் பேசி உரிய நிவாரணம் கிடைக்க வழி செய்திருக்கிறார். இதே போல் விவசாயிகள், நெசவாளர்கள் என்று எந்தப் பிரச்னையிலும் தெருவில் இறங்கிப் போராடத் தயார்.''

ஆட்சியில் பங்கு என்னவாயிற்று?'

''இது கொள்கை ரீதியான விவகாரம். தலைமை மட்டுமே முடிவுசெய்ய வேண்டும். கட்சிப்பிரமுகர்களோ அல்லது சட்டமன்ற - பாராளுமன்ற உறுப்பினர்களோ கூட, இதைப் பற்றியும் கூட்டணி பற்றியும் பேசக் கூடாது. கட்சி செய்த சாதனைகளைப் பற்றி மட்டுமே பேச வேண்டும். மீறினால் நடவடிக்கை கட்டாயம் உண்டு.''

விலைவாசி பிரச்னை காங்கிரஸ் வோட்டு வங்கியைப் பாதிக்கும் போலிருக்கிறதே?

''சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வின் காரணமாக, விலைவாசி பிரச்னை உலக அளவில் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. சோனியா வழி காட்டுதலுடன் பிரதமர் மன்மோகன் சிங் எடுத்துவரும் நடவடிக்கைகளால், அடுத்த இரண்டு, மூன்று மாதங்களில் நிலைமை சீராகும்.''

காங்கிரஸ் நொண்டிக் குதிரை என்று கம்யூனிஸ்டுகள் சொல்கிறார்களே?

''காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு அணி அரசுக்கு, ஆதரவு அளித்தமைக்காக அவர்களிடம் நன்றி பாராட்டுகிறோம். ஆனால், அணு ஒப்பந்தம் விஷயத்தில் நொண்டிச்சாக்குச் சொல்லி விலகியவர்கள் அவர்கள்தான். சைனாவையும், ரஷ்யாவையும் துதிபாடும் அவர்களுக்குக் காங்கிரஸைப் பற்றிக் குறை சொல்ல உரிமை இல்லை. காங்கிரஸ் தலைமையில் உள்ள அணியால் மட்டுமே மதவாதக் கட்சிகளை எதிர்க்க முடியும்.''

மாவட்டத் தலைவர்கள் மாற்றம் உண்டா?

''கட்சியில் மாற்றம் என்பது ஒரு தொடர் நடவடிக்கை. கடந்த பத்தாண்டுகளில் தமிழக காங்கிரஸுக்கு ஆறு தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள். எனவே, புதியவர்களுக்கு இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும் வகையிலும், அதேசமயம் நன்றாகப் பணியாற்றியவர்களை அங்கீகரிக்கும் வகையிலும், மாவட்டத் தலைவர்கள் மாற்றம் கட்டாயம் உண்டு.''

- ப்ரியன்

படம் : **ராஜன்**

உங்களுக்குப் இப்படியெல்லாம் கேள்வி கேட்டா எப்படிப்பா?

● **லலிதா செல்லப்பா, சென்னை**

ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்கிறார்களே, அதில் பாதியான முப்பத்தி மூன்றில் என்ன?

ஆறோ, நூறோ இல்லை. முப்பத்தி மூன்றோ ரெடியாய் இருங்கள்.... நாம் எமனுக்கு சாவு - கிராக்கி!

● **என்.பாலசுப்பிரமணியன், அண்ணாநகர்**

விலைவாசி ஏற்றம் சராசரி மக்களை எப்படி பாதித்துள்ளது?

இப்போதெல்லாம் சராசரி மக்களே கிடையாது. என்ன விலை ஏறி னாலும் க்யூவில் காத்திருக்கும் ''சாரிசாரி'' மக்கள்!

● **அமிர்தா, டெல்லி**

பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்வது எப்படி கிரேஸி...?

கடமையாக பாதி கிணறு தாண்டுங்கள். பலனாக மீதி கிணறு உங்களைத் தாண்டிச் செல்லும்.

● **பாக்யஸ்ரீ, குடந்தை**

சமீபத்தில் உங்களை அதிசயப்பட வைத்தது எது...?

ஓவியர் கேசவ் (ஹிண்டு கார்டூனிஸ்ட்) வரைந்த கிருஷ்ணர் ஓவியங்கள்... வீட்டில் விதவிதமாக கண்ணனின் லீலைகளை வரைந்து தினமும் கோகுலாஷ்டமி கொண்டாடுகிறார் கேசவ்...

கண்ணனைக் கட்டிப் போட்டது இருவர்... உரலில் அன்னை... விரலில் கேசவ்.

● **எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**


உங்களுக்குப் பிடித்த 'பிசினஸ்' எது...?

'மைண்ட் யுவர் பிஸினஸ்' இந்த பிஸினஸில் மூலதனம் 'MIND'

● **ப.காளிதாசன், நீர்விளங்குளம்**

வஞ்சிப்பா, கலிப்பா, ஆசிரியப்பா... இதில் உங்களைக் கவர்ந்தது எது?

ஆசிரியப்பா..



இதில்தான் ஆவென்று வாய் விட்டு சிரியப்பா வருகிறது.

● சாவித்திரி, செஞ்சி

நிறம் மாறும் 'பச்சோந்தி', மனிதனைப் பார்த்தால் என்ன நினைக்கும்?

''இவன் True - Colour என்னவென்றே தெரியவில்லையே?'' என்று பச்சாதாபத்தோடு பார்க்கும் பச்சோந்தி!



கிரேஸியைக் கேளுங்கள்

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

லஞ்சம் - வரதட்சணை என்ன ஒற்றுமை?

இரண்டுக்கும் தண்டனை ''மாமியார் வீடு''

● ரேவதி, வில்லிவாக்கம்

டி.வி.யில் வரும் சமைத்துப் பார் நிகழ்ச்சிகளைப் பார்த்து உங்கள் மனைவி சமைப்பதுண்டா...?

சமையலைப் பொறுத்த வரையில் என் மனைவிக்கு "Menu நீதி சோழி and தோழி'' ஜெயா டி.வியில் வரும் அறுசுவை நேரம், திருமதி மல்லிகா பத்ரிநாத் அவர்கள்தான்.

● வி.ஸ்ரீதரன்,
நாட்டரசன் கோட்டை

''அழுத்திச் சொன்னால் அற்ப விஷயமும் அரிய பொருளாகும்'' என்பதற்குச் சான்று தருக?

படித்த பிசினஸ்?

''தூணில் இருக்கிறான்'' என்று மட்டும் சொல்லியிருந்தால், ''குழந்தையின் பேச்சு'' என்று பிரகலாதனை இரணியன் சும்மா விட்டிருப்பான். அற்ப விஷயமான ''துரும்பிலும் இருக்கிறான்'' என்று அழுத்திச் சொன்னதால்தான் அவன் ஆவேசமாகி தூணை உதைக்க, அரிய பொருளாம் அந்த ''அரி-பரம்பொருள்'' வெளிவந்தது.

● ரா.நரசிம்மன், சென்னை

'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்கிறார்களே... ஆண் பேய்தானே?

பெண் பேய் 'இரங்கும்'... ஆண்-பேய் வேப்பமரத்தை விட்டுக் கீழே 'இறங்கும்'!

● வி.ஜி.சத்தியநாராயணராவ்,
நங்கநல்லூர்

நல்ல எண்ணம், நல்ல செயல், நல்ல சிந்தனை இருந்தால் கோயிலுக்குக்கூட போக வேண்டாம் என்கிறார்களே?

நல்ல எண்ணத்தோடு கோயிலுக்குப் புறப்பட்டு, போகும் வழியில் நல்ல செயல் புரிந்து, கோயிலில் தெய்வத்திடம் உலக நன்மைக்காக நல்ல சிந்தனையோடு பிரார்த்திப்பவர்கள் வீட்டுக்குப் போனாலே நமக்குக் கோயிலுக்குச் சென்ற புண்ணியம் கிட்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளில் ஒன்றான உலக சுகாதார நிறுவனம், உலகெங்கும் நடைபெறும் மருத்துவ மற்றும் சுகாதாரப் பணிகளை மேற்பார்வை யிட்டு, நெறிமுறைகளை வகுத்து வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இந்தியாவில் நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகளுக்கானப் பொறுப்புகளை, குழந்தை யின்மைப் பிரச்னைகளுக்கான சிறப்பு மருத்துவர் டி. காமராஜ் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

விந்தணுக்கள் பற்றிய அவரின் ஆய்வுக்காகச் சமீபத்தில் ஜெனீவாவில் உள்ள பிரமாண்ட மான மருத்துவ நூலகத்துக்குச் சென்ற அனு பவத்தைச் சிலிர்ப்போடு பகிர்ந்துகொண் டார்.


* டி. காமராஜ்

''நூறு ஏக்கர் பரப்பளவில் விரிந்து பரந் திருக்கும் அந்த நூலகத்தில் அனைத்து வித மான மருத்துவநூல்களும் இருக்கின்றன. மருத்துவத் துறையைச் சார்ந்த நிபுணர் களோடு கலந்துரையாடும் வாய்ப்பும் அங்கு இருக்கிறது. முன்பே பதிவு செய்து கொண் டால் விரிவாகப் பேசலாம். மெடிக்கல் பிராக் டீஸ் சம்பந்தமான சிக்கலானப் பிரச்னை களுக்கும்கூட, அங்கு உடனடியாகப் பதில் கிடைத்து விடுகிறது.

மெடிக்கல் டூர்

"சந்துக்கு சந்து ஸ்டார் ஹோட்டல்!"

சுவிட்ஸர்லாந்தை ஒரு ரவுண்ட்ஸ் சுற்றிப் பார்த்துவிட் டுத்தான் ஜெனிவா வுக்குக் கிளம்பினோம். அங்கு உள்ள ஆறுகளும் ஏரிகளும் 'பளிச்'சென்று அப்படியொரு தூய்மை. ரயிலிலேயே எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் ஊர் சுற்றிப் பார்க்கலாம்.

சுவிஸில் இலங்கைத் தமிழர்கள் நிறைய பேர் வேலை செய்கிறார்கள். அதில் சிலர் இந்தியா வந்து, எங்கள் மருத் துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்கள்.

இன்டர்லூக்கிங் என்கிற இடத்துக்குச் செல்லும் மலை உச்சிப் பயணம் சுவிட்ஸர்லாந்தில் வெகு பிரபலம். எழுபது சதவீத தூரம் ரயிலிலும், பின்னர் ரோப் காரிலும் போக வேண்டும். மலை உச்சிக்குப் போனால் ரெஸ்ட் டாரெண்ட், ஷாப்பிங் என்று பிரமாதமாக இருக்கிறது 'டாப் ஆஃப் தி ஐரோப்பா' என்று அவர்கள் அடிக்கும் தம்பட்டத்தைப் பார்த்து, இந்தியனான எனக்கு வருத் தம்தான். அதைவிடவும் உயரமான வானைமுட்டும் மலைகள் உள்ள நாடு நமது நாடு. 'டாப் ஆஃப் தி



✱ டி. காமராஜ் மனைவியுடன்...

வேர்ல்ட்' என்று நாமும்கூட இமயமலையில் ஒரு சுற்றுலாத் தளத்தை அமைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஆசைப்பட்டேன்.

ஜெனிவா உலக சுகாதார மையத்திற்குப் போய்விட்டு அங்கிருந்து ரயிலிலேயே பாரீஸ் வந்தோம்.

ஈஃபிள் டவருக்குப் போனது சுவாரஸ்யமான அனுபவம். அதன் உச்சி வரைக்கும் லிப்ட் வசதி இருக்கிறது. விருப்பப்பட்டவர்கள் படிகளையும் பயன்படுத்தலாம். நான் படிகளில்தான் ஏறி - இறங்கினேன். இடையிடையே ஷாப்பிங், ரெஸ்ட்டாரண்டுகளும் உண்டு.

அந்தப் பிரம்மாண்டமான டவரைக் கட்டிய ஈஃபிள், தாம் தங்குவதற்காகக் கட்டிக் கொண்ட அறையில், அவரைப் போலவே அச்சுஅசலாக ஒரு மெழுகுச் சிலையை வைத்திருக்கிறார்கள். ஈஃபிளைப் பார்க்க தாமஸ் ஆல்வா எடிசன் ஒரு தடவை வந்திருக்கிறார். அவரும் ஈஃபிளும் உரையாடுவது மாதிரி இரண்டு சிலைகளை வடிவமைத்திருக்கிறார்கள்.

பாரீஸில் இருக்கும் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களைப் பார்த்தால், இந்தியாவிலிருந்து போகிறவர்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். நம்ம ஊர் மாதிரி பிரமாண்ட ஸ்டார் ஹோட்டல்கள் பாரீஸில் கிடையாது. எந்தச் சந்தில் நுழைந்தாலும் ஸ்டார் ஹோட்டல்கள்தான். இடநெருக்கடி காரணமாக இந்த ஏற்பாடாம்.




✱ ஜெனிவா சுகாதார மையத்தில்...

சுவிட்ஸர்லாந்து, ஜெனீவா, பாரீஸ் எல்லாம் சுற்றிப் பார்த்தபிறகு, எனக்கு இன்னொரு விதத்தில் மகிழ்ச்சி. அங்கெல்லாம் இருக்கும் குழந்தையின்மை சிகிச்சை மையங்களைவிட இந்தியாவில் எவ்வளவோ முன்னேறிவிட்டோம். அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகளைவிட கொஞ்சம் நாம் பின் தங்கியிருக்கிலாம். அவ்வளவுதான்'' என்கிறார் டாக்டர் டி. காமராஜ்.

- எஸ்.பி.என்

நீங்கள் கேட்டவை

தராசு



● க.நா.இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்

? 'குசேலன்' படத்தில் இடம்பெற்றிருந்த அரசியல் தொடர்பான வசனங்களை நீக்கியிருப்பது ஏன்?

! ரசிகர்கள் அதிருப்தி அடைந்ததால் நீக்கியதாகச் சொல்லப்பட்டாலும், உண்மையான காரணம் வியாபார நோக்கமே. ஆனால், டூ லேட்! படம் ஏற்கெனவே 'குசேலன்' ஆகிவிட்டது!

● த.பரதன், திருவாரூர்

? சுதந்திர தினத்தன்று 'காந்தி' திரைப் படத்தை 'பொதிகை'யில் ஒளிபரப்பினார்களே... எவ்வளவு பேர் பார்த்திருப்பார்கள்?

! காந்தியக் கொள்கையில் நம்பிக்கையற்றவர்கள்கூட கலைநயத்துக்காகப் பார்க்க வேண்டிய படம். எந்த இடத்திலும் சலிப்பே ஏற்படுத்தாமல் சீரான வேகத்தில் சென்ற 'காந்தி' படத்தைப் பார்க்கத் தவறியவர்களுக்குத்தான் இழப்பே தவிர, பார்த்தவர்கள் எண்ணிக்கை குறைவால் படத்துக்கு எந்த இழப்பும் இல்லை.

✱ எவர்க்ரீன் திரைப்படம்

பா.ஜ.க.வின்



✱ டூ லேட் நடவடிக்கை!

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி

? முஷாரஃபை பதவி நீக்க, பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளதாமே?

! அதற்கு முன் அவரே பதவி விலகியது சாமர்த்தியம்; நாட்டின் கௌரவத்தைக் காப்பதற்காக அவ்வாறு செய்ததாகச் சொல்வதோ சாதுர்யம்!

● அனன்யா, திருச்சி

? வாழ்வில் எப்போதுமே பாஸிடிவ்வாகச் சிந்திப்பது சாத்தியம்தானா?

! இல்லை. ஆனால், நெகடிவ் சிந்

துணைகள் வருகிறபோது அவற்றுக்குத் 'தடா'போட அறிவையும் மனத்தையும் பழக்கி வைப்பது நிச்சயம் சாத்தியம்.

● அ. மல்லிகா,
சென்னை - 78

? "தலித் என்பதால்தான் என்னைப் பிரதமராக விடாமல் தடுக்கிறார்கள்!" என்று மாயாவதி பயமுறுத்துகிறாரே?

! யாரும் பயப்படத் தயாரா இல்லீங்க! இதற்கு முன் ஒரு தலித் குடியரசுத் தலைவராக இருந்திருக்கிறார். மாயாவதி முதலமைச்சர் ஆனதைத் தடுக்காத ஜனநாயகம், அவர் பிரதமராவதையும் தடுக்காது.



★ ஸ்பீட் கேடயம்!

★ வேஸ்ட் பயமுறுத்தல்!



அமர்நாத் ஆர்ப்பாட்டம்?

● ச.நாகரத்தினம், திருப்பூர்


? கொல்கத்தாவில், தேசிய நூலகத்தில் நாற்பது சதவிகிதம் நூல்கள் காணாமல் போயிருப்பது குறித்து...?

! நூறு சதவிகித மோசடி!

● கருப்பம்புலம் சித்திரவேலு,
நெய்விளக்கு


? என்னதான் கலைப்பயணம் என்றாலும் ஐஸ்வர்யா ராயை அபிஷேக் பச்சன் கட்டிப்பிடிப்பது இருக்கட்டும், மாமனார் அமிதாப் பச்சனும் அதையே செய்வது டூ மச்தானே?

! இது மேலை நாகரிகத்தின் தாக்கம். இதன் அர்த்தம் சரியாகப் புரியாதவர்களுக்கு, இது விபரீதமாகவே தோன்றும். அதற்காகவேனும், பொது வாழ்வுக்கு வருவோர் இது போன்ற செய்கைகளைத் தவிர்ப்பது நல்லது; சுயக்கட்டுப்பாடுகளை மேற்கொள்வது நல்லது.



★ டேஞ்சர் நாகரிகம்!

★ ஃபைல் அம்புகள்!



● என்.காளிதாஸ், சிதம்பரம்

? அமர்நாத் விவகாரத்தில், பா.ஜ.க. நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதே?

! ஆர்ப்பாட்டங்கள் வன்மம், விரோதத்தைத்தான் வளர்க்கும்; மதநல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை அல்ல. வோட்டுக்காக பா.ஜ.க. நாட்டைக் காவுகொடுக்கத் தயாராகி விட்டது. தொலை நோக்குப் பார்வையைத் தொலைத்துவிட்டு நிற்கிறது.

● கே.கே.வெங்கடேசன்,
சென்னை - 37

? அரசாங்கம் எடுக்கும் எல்லா முடிவுகளையும் குறைகூறுவது சரிதானா?

! சரியில்லைதான். ஆனால், வாழ்த்துவதற்கு அதிக வாய்ப்பை அரசு வழங்குவதில்லையே!

● அகிலா அன்புமணி,
ஈரோடு ★

? நம்பிக்கை வாக்கெடுப்புக்குப் பின் மாறிவரும் சூழ்நிலையில், மாநிலத்திலும் மத்தியிலும் எந்தவிதமான கூட்டணி மாற்றங்கள் ஏற்பட



★ மெடல் மன்னர்!

லாம் என்று கணிக்கிறீர்கள்?

! நம்பிக்கை வாக்கெடுப்பையே நம்ப முடியாதபோது, அதன் பின்விளைவாக ஏற்படும் கூட்டணி மாற்றங்கள் நம்பிக்கை அளிப்பவையாகவா இருக்கப் போகின்றன? ☐

● **ஏ.அனிதா, அகஸ்தீஸ்வரம்**

? பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த ஒரு ஆயின்ட்மென்ட்கூட இல்லையா?

! இருக்கே! 'வரவுக்கேற்ற செலவு' என்ற நிறுவனத் தயாரிப்பான 'சிக்கன' ஆயின்ட்மென்ட். இதைப் பூசிக்கொண்டால், தண்டச் செலவுகள் - இலவசங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, அநாவசிய மானியங்கள் - கடன் தள்ளுபடிகள் குறைய, பண வீக்கம் மறையும்.

● **கே.துரைசாமி, மங்கலப்பட்டி**

? போலித்தனம் என்பதற்கும் பந்தா என்பதற்கும் உள்ள வேறுபாடு?

! பந்தா - ஆயிரம் கார் பவனி; போலித்தனம் - அதே அரசியல்வாதியின் பாத யாத்திரை!

● **மு. தமிழ்ப்பாண்டியன், சென்னை - 49**

? தொலைக்காட்சித் தொடர்களால் பெண்ணியம் போற்றப்படுகிறதா? தூற்றப்படுகிறதா?

! அவமானப்படுத்தப்படுகிறது!

● **ஆர்.ராஜதுரை, சீர்காழி**

? பத்திரிகையின் முதல் பக்கத்திலேயே விளம்பரம் வெளியிட்டால் வாசகர்களுக்குப் பயங்கர சலிப்பு ஏற்படுகிறது. கல்கி உள்பட அனேகம் இதழ்கள் இத் தவறைச் செய்வது ஏன்?

! பத்திரிகைக் காகிதத்தின் விலையை ஒப்புநோக்க, பத்திரிகைகளின் விலை மிகக் குறைவு. நஷ்டமடையாமல் காப்பது விளம்பர வருமானம்தான். அதிலும் முதல் பக்கம், அட்டைப்படம் போன்றவற்றால் வரக்கூடிய வருமானம் அதிகம். வாசகர்கள் இதைப் புரிந்து கொண்டால் சலிப்பு எழாது.



★ ஸ்டைல் ராஜினாமா!

● **ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்**

? கோட்டையில் ஒரு லட்சம் கோப்புகள் தேங்கியிருப்பதாக டாக்டர் ராமதாஸ் புகார் சொல்ல, கருணாநிதி மறுத்து, "லட்சியக் கோப்புகள்தான் என்னிடம் தேங்குமே தவிர, வேறு எந்தக் கோப்புகளும் அல்ல" என்று கூறியுள்ளார். இந்தப் பதிலடி எப்படி...?

! கோட்டையில் தேங்கியுள்ள கோப்புகள் முதல்வருடைய மேஜையில் இருப்பதாக ராமதாஸ் சொல்லவில்லையே! பிற அமைச்சர்கள், அதிகாரிகள் முதல்வரது சுறுசுறுப்பிடம் பிச்சை வாங்க வேண்டும்!

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

? அமெரிக்கத் தங்க மீன் மைகேல் ஃபெல்ப்ஸின் உலக சாதனை பற்றி...?

! எட்டு தங்க மெடல்கள் பெற்று, முப்பத்தியாறு வருட ரெக்கார்டை முறியடித்த அவருக்கு, ஒலிம்பிக் தங்கம் 'தண்ணி பட்ட பாடு' என்று நிரூபணமாயிற்று! ○

☐ ரூ.100/- பரிசு பெறுபவர்:
ஏ.அனிதா, அகஸ்தீஸ்வரம்

★ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
அகிலா அன்புமணி, ஈரோடு

உலகத் தரத்தில் ஒரு கனவு!

ஒலிப்பதிவாளர் நீரவ்ஷா, இந்தியாவில் இதுவரை இல்லாத அளவுக்கு ஹைடெக் படப்பிடிப்பு நிலையத்தை, சென்னையின் பழைய மகாபலிபுரம் சாலையில் அமைக்க விருக்கிறார். படப்பிடிப்பு நிலையத்தின் வசதி குறித்து நம்மோடு பேசினார்..

''இது உலகத் தரத்தில் நான் கண்டிருக்கும் கனவு. பதினான்கு ஏ.சி. அரங்கங்கள் இந்த ஸ்டுடியோவில் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த அரங்கங்களில் படப்பிடிப்பு நடத்தும்போது, லைட்டிங்கில் நேர விரயம் ஏற்படாத அளவுக்கு, அரங்கத்திலேயே நிரந்தரமாக லைட்கள் பொருத்தப்படவிருக்கின்றன. அனைத்தும் ரிமோட் கன்ட்ரோல் மூலம் தேவைக்கேற்றபடி இயக்கப்படும். படப்பிடிப்புக்கு இடையூறு ஏற்படாத வகையில், சத்தமில்லாத ஜெனரேட்டர்கள், ஒவ்வொரு அரங்கத்துக்கும் தனித்தனியாக புரொடக்ஷன் ஆபீஸ், டைரக்டர் ஆபீஸ் என்ற ஸ்பெஷல் வசதிகள் உண்டு. கூடவே ஃபேக்ஸ், இண்டர்நெட், தொலைபேசி போன்ற நவீன வசதிகளும் இருக்கும். தவிர, டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய, அதி நவீன ஒலிப்பதிவுக் கருவிகளைக் கொண்ட டப்பிங் தியேட்டரும் இந்த ஸ்டுடியோவில் அமையவிருக்கிறது. தூசுகள் இல்லாத அளவுக்கு ஏர் ஃப்ரீ முறையில் நவீன தொழில்நுட்பத்தில், இந்த நவீன ஸ்டுடியோ அமைகிறது. இந்த நவீன ஸ்டுடியோவில் எழுபது மேக்கப் ரூம்கள் அமைக்கப்படுகின்றன.

அதோடு, ஓய்வு நேரத்தில் நட்சத்திரங்கள் பயன்படுத்துவதற்காக, அதி நவீன உடற்பயிற்சி நிலையமும் அமைக்கப்படுகிறது. துணை நடிகர்கள், இதர பணியாளர்கள் உணவு உண்பதற்காக ஐந்நூறு பேர் அமர்ந்து சாப்பிடுமளவுக்கு விசாலமான அறையும் இந்த ஸ்டுடியோவில் உண்டு. அதே அறை ஏ.சி. வசதியுடன் திரைப்பட விழாக்கள் நடத்துவதற்கான அரங்கமாகவும் பயன்படுத்தத்தக்க அளவில் அமைக்கப்படுகிறது. கூடவே மல்ட்டிபிளக்ஸ் திரையரங்கமும் கட்டப்படவிருக்கிறது. படப்பிடிப்பில் பயன்படுத்திய ஆடைகளைச் சலவை செய்து, மறுபடியும் பயன்படுத்த ஏதுவாக மிகப்பெரிய லாண்டரியும் அமைக்கப் படவிருக்கிறது.

நூறு கோடி மூதலீட்டில் உருவாகும் இந்த ஸ்டுடியோ, உலகிலேயே அதி நவீன ஸ்டுடியோக்களில் ஒன்றாக இருக்கும். இதன் துவக்கப் பணிகள் செப்டெம்பர் மாதம் தொடங்குகிறது. அடுத்த ஆண்டு திறக்கப்படவிருக்கிறது'' என்கிறார் ஒலிப்பதிவாளர் நீரவ்ஷா.

- சாவித்ரி



* நீரவ்ஷா



கல்கி




2008 ஆகஸ்ட் 31
ஸர்வதாரி ஆவணி 15
மலர் : 67
இதழ் : 5


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

இன்னொரு முஷாரஃப்!

முஷாரஃபின் ராஜினாமா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தானிய அரசின் பலத்துக்கு அடையாளம் என்றுதான் முதலில் தோன்றும். ஆனால், மிகச் சாமர்த்தியமாக அரசின் நடவடிக்கையை முந்திக்கொண்ட முஷாரஃபின் ராஜினாமா முடிவு, ஆளும் கூட்டணியிலுள்ள பிணக்குகளையும் அதன் பலவீனத்தையும் வெளிப்படுத்திவிட்டது. எட்டாண்டு காலம் சர்வாதிகாரம் செலுத்திய முஷாரஃபின் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குவது, அதன் பிறகு அவரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மறுநியமனம் செய்வது, என்று ஒரு வரிசைக் கிரமத்தில் செயல்பட ஒப்புக்கொண்டன பாக். அரசின் கூட்டணி கட்சிகளான பி.பி.பி. மற்றும் பி.எம்.எல்(என்). இப்போதோ, முஷாரஃப் ராஜினாமா செய்துவிட்டார். ஆனால், நீதிபதிகள் மறுநியமனம் குறித்து, கூட்டணி கட்சிகளிடையே கடுமையான கருத்துவேறுபாடு நிலவுகிறது! இதற்கிடையே அரசு மருத்துவமனை ஒன்றில், தற்கொலைப்படைத் தாக்குதலால், பலர் அநியாயத்துக்கு உயிரிழந்துள்ளனர்; காயமுற்றுள்ளனர். சந்தடி சாக்கில் பாகிஸ்தானில் பயங்கரவாதம் மேலும் தீவிரமடைந்து வாலாட்டிக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானில் ஜனநாயகம் வலுவாக இல்லை என்பதற்கு இவையெல்லாம் சான்றுகள். கூட்டணி ஆட்சி அமைக்கப்பட்ட





சிறிது காலத்துக்குள்ளாகவே, நவாஸ் ஷரீஃபின் பி.எம்.எல். கட்சி, ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டது. இதுவே பலவீனத்தின் அறிகுறி. தற்போது, தமது விருப்பப்படி நீதிபதிகள் மறுநியமனம் 24 மணி நேரத்துக்குள் நடைபெற வேண்டும் என்று அக்கட்சி அழுத்தம் கொடுக்கிறது.

முஷாரஃப் பதவியிலிருந்து நீக்கிய நீதிபதிகளை, மறுநியமனம் செய்வது குறித்து கருத்து வேற்றுமை ஏன் எழவேண்டும்? பி.பி.பி. கட்சி, அதே நீதிபதிகளை ஏற்க ஏன் தயங்க வேண்டும்? இந்த நிகழ்வுகள் எல்லாமே, நீதித் துறையைத் தம் பிடியில் வைத்துக் கொள்ள ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

இதுபோன்ற ஒற்றுமையற்ற, ஜனநாயக விரோத சூழலில், பயங்கரவாதமும் தழைத்துக் கொண்டிருக்கையில், சர்வாதிகாரம் வெகு எளிதாக உட்புகுந்து பதவி ஏற்றுவிடும். ராணுவ அதிகாரி முஷாரஃபை, நாட்டின் சர்வாதிகாரியாக உருமாற்றியது இத்தகைய பலவீனமான ஜனநாயக சூழல்தான். இது நீடித்தால், இன்னொரு முஷாரஃப் தோன்ற வெகுகாலம் ஆகிவிடாது!

பாகிஸ்தானில் நடப்பவற்றை நம் நாட்டுக்கும் எச்சரிக்கையாகக் கொள்வது அறிவுடைமை. இங்கும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், சதா பரஸ்பர குற்றச்சாட்டுப் பரிமாற்றத்தில் காலம் கழிக்கிறார்கள். தங்களது குறுகிய கால அரசியல் ஆதாயத்துக்காக, அனைத்துக் கட்சியினரும் ஜாதி, மத, இன, மொழி அடிப்படையிலான பிரிவினைகளை வளர்க்கிறார்கள். இங்கேயும் தீவிரவாதமும் பயங்கரவாதமும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. இவற்றுக்கான வலைப்பின்னல்கள் தொழில் ரீதியாக இயங்க ஆரம்பித்துவிட்டன. குறிப்பாக, காஷ்மீரில் உணர்வுரீதியான கொந்தளிப்பு மிகுந்து காணப்படுகிறது. பாகிஸ்தானை மறுபடியும் ஆட்கொள்ளக் காத்திருக்கும் சர்வாதிகார அச்சுறுத்தல், இந்தியா நோக்கி விழி திருப்பி, கரம் நீட்டிக் கவ்விக்கொள்ள அதிக காலம் ஆகிவிடாது. தலைவர்கள் சுயநலன் - கட்சி நலன்களை ஒதுக்கி, தேசநலனை மட்டுமே கருத்தில்கொண்டு, இந்திய ஜனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும். ●

தமிழ் சினிமாவை சமீபகாலமாக காப்பாற்றிக்கொண்டிருக்கும் ஆங்கிலப் படங்கள், இந்தப் படத்தையும் காப் பாற்றி இருக்கிறது. முதல் கால் மணி நேர ரித்தீஷின் அதிரடிகள் அப்படியே ஜீன் ரேனோவின் 'வசாபி'யிலிருந்து வார்த்தெடுக்கப்பட்டவை. சரி, அடுத் தடுத்த நிமிடங்களாவது சொந்தச் சரக் காக இருக்குமா என்றால், அட! ஏற் கெனவே பலரால் பந்தாடப்பட்ட 'செல் லுலார்'!



நாயகன்



ஆனால், சுவாரஸ்யமாகக் கதை சொல்லி இருக்கிறார்கள். விறுவிறுப்பு, வேகம் எதுவும் மிஸ்ஸிங் இல்லை. ரமணாவின் காப்பாற்றும் வேட்கை யும், அதற்காக அவர் மேற்கொள்ளும் முயற்சிகளும் வேகம்... வேகம்! போலீஸ் அதிகாரியாக வரும் ரித்தீஷுக்காகவே கதை பல இடங்களில் வளைக்கப்பட் டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. சண்டை சமாச்சாரங்களில் மனிதர் பின்னி எடுக்கிறார். கடத்தப்பட்ட சங் கீதா, தன் குழந்தைக்காகவும் கணவருக் காகவும் கதறித் தவித்து கண் கலங்க வைக்கிறார். சந்தானபாரதி அண்ட் கோவின் கிச்சு கிச்சுக்கு சிரிக்க முடி கிறது.

டபுள் ஆக்ஷன் ஆனந்தராஜ். அண் ணனுக்கு ஏன் இத்தனை கொடூர டயலாக் மாடுலேஷன்?

மரியா மனோகரின் இசைப் பாடல்கள் குத்தி விட்டு உடனேயே மறந்து விடுகின்றன. உறுத்தாத ஒளிப்பதிவு ஓ.கே. திடீர் திருப்பங்களுக்குப் பஞ்ச மில்லாத திரைக்கதை. ரமணா யாரிடமோ பேசு கிறோம் என்று நினைத் துக்கொண்டு தன் காதலி யிடமே பேசிக் காதலைச் சொல்லும் யுக்தி ப்யூட்டி. சாக்கடையிலிருந்து குழந் தைகளை எடுப்பதும், போலீஸே எல்லாவற்றை யும் நிகழ்த்துவதும் அதிர்ச்சி வைத்தியங் கள். என்றாலும், அங் கங்கே நாடகத்தனமாய் காட்சிகள் நகர்வதைத் தவிர்த்திருக்கலாம்.

செல்லுலாரை மைய மாக வைத்து இதற்கு முன் வந்த படங்களைவிட நாய கன் பெட்டர்! இனியாவது செல்லுலாரைத் தமிழ் சினிமா மறக்கட்டும்! வேறு புதிய படம் தேடட் டும்!

– அசாருதீன்

இலக்கு

– வெ.ராம்குமார்



"அப்பா! நான் எழுதிய சிறுகதைக்கு முதல் பரிசு கிடைச்சிருக்குப்பா!" சந்தோஷமாய் தந்தையிடம் இதழை நீட்டினான் ரமேஷ்.

"முதல்ல, நல்லா படிச்சு, நல்ல வேலையில சேர வழியப்பாரு. எழுத்து சோறு போடாது." அப்பாவின் கோபப் பேச்சால் ரமேஷ் முகம் வாடினான்.

இரவில், "ஏங்க! காலையில பையனைத் திட்டிட்டு, இப்ப அவன் எழுதிய கதையை சுவாரஸ்யமா படிச்சிட்டு இருக்கீங்களே..." என்றாள் அம்மா.

"நானும் இலக்கியத்தை நேசிச்சு எழுதினவன்தான். இலக்கு இல்லாமலிருந்ததால, என் பாதை மாறிடுச்சு. இதுவரை எந்த வேலையும் சரியா அமையலை. அன்னைக்கு நான் செஞ்ச தவறை இவனும் செய்யறான். அதனாலதான் அப்படிப் பேசினேன்."

இதழை எடுக்க வந்த ரமேஷ், புத்தி தெளிந்தவனாய், வேலை தேடியபின் எழுத்தைத் தொடர தீர்க்கமாய் முடிவெடுத்தான்.

காலை நேரப் பரபரப்பு. வழக்கம்போல் சலிப்போடு வேலைக்குக் கிளம்பினேன்.

பஸ் ஸ்டாப் நோக்கி விரைந்தபோது, ஒரு முதியவரைக் கை பிடித்து அழைத்துச் சென்று கொண்டு இருந்த ஓர் இளைஞர், "மேடம், பஸ் ஸ்டாப்தானே போறீங்க? இவரைக் கொஞ்சம் அங்க விட்டுடுங்க" என்றார்.

"சரி" என்று அவரின் கைத்தடியைப் பிடித்து மெதுவாக ஸ்டாப்புக்கு அழைத்துச் செல்கையில், அந்த வயதிலும், வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றும் அவரின் தன்னம்பிக்கை வியப்பை அளித்தது.

பஸ் வந்ததும், படியில் ஏறும்போது அவர் சிறிது தடுமாறினார். என்னையறியாமல் "பாத்து... பாத்து..." என்று பதற்றத்தில் வார்த்தைகள் உதிர்ந்தன.

எவ்வித சலனமுமின்றி பூத்த அந்தப் பார்வையிழந்த முதியவரின் சிறு புன்னகை, என் க்ஷணநேர மனக்குருடை எனக்குக் காட்டியது. •



மனக்குருடு

– மித்ரா

லக்ஷ்மி மோகன்

'முதல்நாள் சரியான நேரத்துக்குப் போயிடணும். ஐந்து நிமிஷம் முன்னாடியாவது போய் நிக்கணும்.' டென்ஷனில், அலாரம் அடிப்பதற்கு முன்பே முழிப்பு வந்துவிட்டது.

அடுத்தத் தெருவில் இருக்கும் பிள்ளையார் கோயிலுக்கு வந்தாயிற்று. மணியைப் பார்த்தாள் அருணா. 5.45தான். பொலபொலவென்று விடியத் தொடங்கியது. இன்னும் யாரும் வந்தபாடில்லை. அது மெயின் ரோட்டை ஒட்டியிருக்கும் கோயில். வரிசையாக ஆட்டோ வந்து, ''சவாரியா மேடம்?'' என்று விசாரித்துவிட்டுச் சென்றது. ஒவ்வொருவருக்கும், ''இல்லை'' என்று சொல்லியே அலுத்துப் போனாள்.

அதேசமயம், அருணாவுக்கு எதிர்வரிசையில், ட்ராக் சூட்டும் டீ ஷர்ட்டும் காலில் ஷூவுமாய் ஓர் இளம்பெண் நின்றுகொண்டிருந்தாள். அவளைத் தாண்டிய ஆட்டோ டிரைவர், அவள் காலைப் பார்த்தபடி மெதுவாக வண்டியை உருட்டிக்கொண்டு சென்றார். ''அட, இதுதான் காரணமா, ஷூவுடன் வந்தால் சவாரியா என்று கேட்க மாட்டார்களாக்கும்'' என்று எண்ணிக்கொண்டிருந்தபோது, 'சர்ர்...' என்று ஒரு ஆட்டோ இவளருகில் யு டர்ன் எடுத்து நின்றது.

''குட்மார்னிங் அருணா'' என்று அதிலிருந்து இறங்கினாள் சுபா.

''என்னடி இது? ஆட்டோல வாக்கிங் வர்ற முதல் ஆளு நீயாதான் இருப்ப.''

''என்ன செய்யறது, எப்பவும் 7 மணிக்குக் குறைஞ்சு எழுந்துக்காத என் மாமனார் இன்னைக்குனு எனக்கு முன்னால எழுந்து உட்கார்ந்துருக்காரு. காஃபி போட்டுக் கொடுத்துட்டு வந்தேன். சரி, எனக்காக வெயிட் பண்ணுவீங்களேன்னு ஆட்டோ பிடிச்சு வந்தேன்.''

இவர்கள் பேசிக்கொண்டிருந்த போதே மற்ற இருவரும் வந்தார்கள். ''சாரிடி. படுக்கும்போது லேட். கார்த்தால கொஞ்சம் அசந்துட்டேன்'' என்றாள் மீனா.

''எங்க வீட்டு அலாரம் கிளாக் ரிட்பேர். அதான்'' என்றாள் ரம்யா. கோயிலைச் சுற்றிவிட்டு நடையை ஆரம்பித்தார்கள்.

பல்வேறு சானல்களில் வரும் சீரியல்கள், வாங்கிய டிரெஸ்கள், இன்றைய நகை விலை, போய்ச் செய்ய வேண்டிய சமையல், புதுப்புது ரெஸிபிகள்... என்று எல்லாம் அலசப்பட்டன. நேரம் போனதே தெரியவில்லை.

''ஏய், ஏழு ஆச்சுடி'' என்றாள் அருணா.



''பேசிட்டே ரொம்ப நடந்துட்டோம் போல, சரிடி. நாளைக்குப் பார்க்கலாம்'' என்று அங்கங்கே கழன்றுகொண்டார்கள்.

வீட்டுக்குள் நுழைந்தாள் அருணா. 'டெஸ்ட்டும் அதுவுமா இன்னும் தூங்கறா பாரு' என்று இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கும் ஸ்வேதாவை, அதட்டி எழுப்பினாள்.

இப்படியாக இரண்டு நாட்கள் கழிந்தன. அன்று வாக் போக எழுந்தவளுக்குப் பாதமெல்லாம் ஒரே வலி. இரண்டு காலிலும் செருப்பின் வார் அழுத்திப் புண்ணாகியிருந்தது.

அதனைக் குறைத்தாலே நல்ல ரிசல்ட் தெரியும்.

துரித நடைப்பயிற்சி எனும் பிரிஸ்க் வாக் மிகச் சிறந்த உடற்பயிற்சியாகும். மிக எளிமையான, செலவில்லாத ஒன்று. எல்லோராலும் முடியும். தினசரி 2-4 கி.மீ. வரை நடக்க வேண்டும். இதுவும் ஒருவித தியானம்போல்தான். பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சாப்பிட்டுக்கொண்டும் நடப்பது நடைப்பயிற்சி அல்ல. மனத்தை ஒருநிலைப்படுத்தி மௌனமாக நடக்கவேண்டும். கூன் போடாமல் முதுகை நிமிர்த்தி நடக்கவேண்டும்.

சீரான நடைப் பயிற்சி இதயத்துடிப்பை சீராக வைத்துக்கொள்ள உதவுகிறது. எலும்புகள் நன்கு வலுவடைகின்றன. தசைச் சுதி நன்கு முடுக்கி விடப்படுகிறது.

தியான வாக்கிங்

திரும்பவும் செருப்பைப் போட்டுக்கொண்டு நடந்தால், ரணம் ஜாஸ்தியாகிவிடும். என்ன செய்வது? எல்லோருக்கும் மெஸேஜ் அனுப்பினாள், 'தான் வர முடியாது' என்று. அத்துடன், அன்று ஷூ வாங்க முடிவு செய்தாள் அருணா.

''நான்தான் வீட்டு வேலை எல்லாம் பண்றேனே, தனியா எக்ஸர்ஸைஸ் வேறு எதுக்கு?'' என்பார்கள் சிலர். வீட்டு வேலையால் கலோரிகள் பெரிய அளவில் எரிக்கப்படுவதில்லை. மூச்சு வாங்கச் செய்யும் நடைப்பயிற்சி, சைக்ளிங், நீச்சல் ஆகியவற்றினால் மட்டுமே நன்கு கலோரிகளை எரித்து கொழுப்பைக் கரைக்க முடியும். சிம்பிள் டிப்ஸ்: தொட்டதுக்கெல்லாம் டூவீலரை எடுப்பவரா?

வாக்கிங் செய்கையில் அதிக வேகமும் வேண்டாம்; நத்தைபோல் ஊர்வதும் வேண்டாம். ஒரு வாரத்தில் உங்கள் வேகத்தை அறிந்துகொள்வீர்கள். மற்றவர்கள் வேகமாக நடக்கிறார்களே என்று போட்டி போட்டுக்கொண்டு நடந்தால், கால் வலி ஏற்பட்டு நான்கு நாட்களுக்கு மேல் நடக்கமுடியாமல் போகலாம். முக்கியமாக நல்ல ஷூ அவசியம்.

குண்டாக இருப்பவர்களுக்கு, முக்கியமாக பெண்களுக்கு, நடக்கும்போது இரு தொடையும் உராய்வதால் எரிச்சல் ஏற்பட்டு, நடக்கச் சிரமப்படுவார்கள். இதற்கென சில க்ரீம்களும், பவுடர்களும் மெடிக்கல் ஷாப்பில் கிடைக்கின்றன. மிக எளிய மருந்து சுத்தமான தேங்காய் எண்ணெய். இரு தொடைகளின் உட்புறத்திலும் தேங்காய் எண்ணெயை நன்கு தடவிக்கொண்டு நடக்க ஆரம்பித்தால் உராய்வு குறையும். புடைவையைத் தவிர்த்து சுடிதார், டிராக் ஸூட் அணியலாம்.

50 Kg தாஜ்மஹால்!

சரித்திரமான

25 இலட்சம் மக்கள் தொகைகூட இல்லாத ஜமைக்காவிலிருந்து, இப்படியொரு கொண்டாடப்படக்கூடிய வீரர் கிளம்புவார் என்று ஒருவராலும் எதிர்பார்த்திருக்க முடியாது. இரு கைகளையும் விரித்துக்கொண்டு, கொண்டாட்டத்துடன் 100 மீ தூரத்தை இருபத்திரண்டு வயது உசைன் போல்ட் ஓடிமுடித்த காட்சியை, தம் வாழ்வில் இன்னொரு முறை பார்க்க விரும்பமாட்டார் அசஃபா பவல். உசைன் போல்ட், அசஃபா பவல், டைசன் கே ஆகிய மூவருக்குமான போட்டியில், பீஜிங்கின் பறவைக்கூடு அரங்கமே இரண்டாகப் பிளக்கும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது மிகையல்ல. 100 மீ போட்டியில் இந்த மூவரும்தான் நடப்பு சாம்பியன்கள். ஆனால் டைசன் கே, தகுதிச்சுற்று போட்டியில் மோசமாக ஓடி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்து, ரசிகர்களுக்குக் கிடைக்க வேண்டிய அருமையான ஒரு போட்டியைச் சீர்குலைத்தார். இறுதிப்போட்டி உசைன் போல்ட், வெர்ஸஸ் அசஃபா பவல் என்று சுருங்கிப்போனது. ஆரம்பத்தில் சிறுத்தை போலப் பாய்ந்து ஓடி, முடிவில் பறவை போலக் கைகளிரண்டையும் விரித்து ஓடி முடித்த அந்தக் கணத்தில் உலக சாதனை நிகழ்த்தப்பட்டிருந்தது. 9.69 விநாடிகள்.



வெற்றிக்கோட்டை நெருங்கும்போது வேகத்தைக் குறைத்துக்கொண்டு களிப்புடன் கேமராக்களுக்குப் போஸ் கொடுத்தபடி கோட்டைக் கடந்தார் உசைன் போல்ட். 'கிளம்பிய வேகத்தில் ஓடியிருந்தால் 9.54 விநாடிகளுக்குள் தூரத்தைக் கடந்து முடித்து பெரிய சாதனை புரிந்திருக்கலாமே' என்றால் சிறுபுன்னகையுடன், 'உலக சாதனைகளிலெல்லாம் எனக்கு ஆர்வம் கிடையாது. என் நாட்டுக்கு என்னால் ஒரு தங்கம் வாங்கிக் கொடுத்துவிட முடியும் என்று தெரிந்த கணத்தில் என்னையே மறந்துவிட்டேன்' என்கிறார். சாதனை படைத்த சில விநாடிகளில் உசைன் தொலைபேசியில் ஆர்வமாகப் பேசிக்கொண்டிருந்தார். மறுமுனையில் ஜமைக்கா பிரதமர் ப்ரூஸ் கோல்டிங்!

இப்போது யாரும் 30,40 வயது வரை காத்திருப்பதில்லை. இருபத்தைந்து வயது

முடிவதற்குள், செய்யவேண்டிய சாதனைகளையெல்லாம் செய்துமுடித்து விடுகிறார்கள். உதாரணம் அபினவ் பிந்திரா, உசைன் போல்ட்.

1972 ஒலிம்பிக்ஸில் ஸ்பிட்ஸ் என்கிற அமெரிக்க நீச்சல் வீரர், ஏழு தங்கப் பதக்கங்களை வென்றபோது அச்சாதனை மனிதகுலத்தின் ஆச்சர்யமாகப் பார்க்கப்பட்டது. ஆனால், சமீபத்திய ஒலிம்பிக்ஸில் கண்மூடி கண் திறப்பதற்குள், ஒரு வார இடைவெளிக்குள் பெல்ப்ஸ் எட்டு தங்கப் பதக்கங்களை வாங்கி, பழைய சாதனையை ஊதித் தள்ளியிருக்கிறார். பெல்ப்ஸ் மட்டும் தனி மனிதராக இல்லாமல், தனி தேசமாக இருந்தாலும் பதக்கப் பட்டியலில் அவருக்கு முதல் பத்து இடங்களுக்குள் இடம் கிடைத்திருக்கும்

சாகஸங்கள்

ச.ந.கண்ணன்

15 வயதில் சிட்னி ஒலிம்பிக்ஸில் (2000) கலந்துகொண்ட பெல்ப்ஸ் வெறுங்கையோடு நாடு திரும்பினார். அதன்பின்பு நடைபெற்ற ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸில் ஆறு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வாங்கியிருந்தார். அப்போதே பெல்ப்ஸ் பற்றிய மயக்கம் எல்லோருக்கும் ஏற்பட்டது. பீஜிங்கில் அசுரப் பாய்ச்சல். ஆறு உலக சாதனைகள் நிகழ்த்தி, எட்டு தங்கப் பதக்கங்களை அள்ளி ஒட்டுமொத்தமாக பதினான்கு தங்கப்பதக்கங்களை வென்று தன்னிகரற்ற நட்சத்திரமாகக் காட்சி தருகிறார். ஏற்கனவே, விளம்பர நடிப்பு மூலமாக வருடத்துக்கு 25 கோடி சம்பாதித்துக்கொண்டிருக்கிறார் பெல்ப்ஸ். இதற்கும் அதிகமாக டைகர் விட்ஸ் (கோல்ஃப்), டேவிட் பெக்கம் (கால்பந்து), மைக்கேல் ஜார்டன் (கூடைப்பந்து) ஆகியோருக்கு நிகராக இனி பெல்ப்ஸ் விளம்பர வருவாயைப் பெறுவார் என்று கணிக்கப்படுகிறது. சாதனைகள் படைப்பதற்கென்றே, ஒரு மனிதன் படைக்கப்பட்டிருப்பது விந்தையிலும் விந்தைதான். ○



* உசைன் போலட

அதிர்ச்சி தரக்கூடிய செய்திதான். ஆனால், இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசிய விஷயங்கள், அவ்வளவு ஆணித்தரமான உண்மை.

சமீபத்தில் கன்னியாகுமரியில், சுதேசி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதில் கலந்துகொண்ட நம்மாழ்வார், ''ஒவ்வொரு தனிமனிதனும் நிலத்தை இயற்கை அழிவிலிருந்து காக்க முன்வர வேண்டும்'' என்று வலியுறுத்திப் பேசினார்.

''5000 ஆண்டு பாரம்பரியம் கொண்டது இந்திய விவசாயம். இந்தியாவில்தான், கடந்த பத்து ஆண்டுகளில் 1,80,000 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். ஏன் இந்த நிலை?

நிலத்தை பூமித்தாய் என்றும், பசுவைக் கோமாதா என்றும் கொண்டாடுவது நம்முடைய மரபு. ஆனால், நாம் யாரை முன்மாதிரியாக இப்போது பார்க்கிறோம்?

பூமியை வெறும் தொழிற்சாலைக்கான இடமாகவும், பசுவை பால் கறக்கும் எந்திரமாகவும் பார்க்கும் அமெரிக்காவை முன்னிறுத்திப் பார்க்கிறோம். நமக்கும், அவர்களுக்கும் அடிப்படையில் உள்ள வேறுபாட்டை மறந்ததால் வந்த வினைதான் இவ்வளவும்.

✱ நம்மாழ்வார்



இரசாயன உரங்களால், பூமி வளமிழந்து போய்விட்டது. விவசாயத்தில் உயர்ந்த நான்கு நாடுகளில் ஒன்றான இந்தியாவின் நிலை, கவலைக்குரியதாக இருக்கிறது. கிராமங்களில் விவசாயத்துக்குக் கூலிப் பணியாளர்கள் இல்லை. விவசாயத்துக்கான செலவு அதிகம்; வருமானம் இல்லை. விவசாயம் நஷ்டத் தொழிலாகி நலிந்து கொண்டிருக்கிறது.

இது மட்டுமல்ல; உலகில் வெப்பம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இன்னும் நாற்பது ஆண்டுகள் இப்படியே தொடர்ந்தால், கடல் மட்டம் சுமார் மூன்று அடி வரை உயரக்கூடிய அபாயம் இருக்கிறது. உதாரணமாக, வங்கக்கடல் இப்படி உயர்ந்தால், சென்னை, மும்பை, நாகப்பட்டினம், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகள் கடலுக்குள் மூழ்கிவிடும்.

இதைத் தவிர்க்க வேண்டும் என்றால், இயற்கையை நாம் பராமரிக்க வேண்டும். காடுகளை அழிக்கக்கூடாது; மரங்களை வளர்க்க வேண்டும்; தவிர மேய்ச்சல் நிலங்கள், நீர்நிலைகள் போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டும். வெற்றிடங்களைக் கட்டடங்களாக நிரப்புவதையும், பூமியெங்கும் ஆழமாய்த் துளைபோட்டு குடிநீர் எடுப்



பதையும் தவிர்க்க வேண்டும். இவையெல்லாம், நம்மைத் தற்காத்துக்கொள்ள நாம் அனைவரும் செய்ய வேண்டிய பணிகள். அரசின் பணி என்று அலட்சியப்படுத்தக் கூடாது.

சமீபத்தில் நடைபெற்ற உலக உற்பத்தி மாநாட்டில் ஒரு செய்தி, மிகவும் அதிர்ச்சியளித்தது.

''உலக மக்கள் தொகையில் சுமார் 300 கோடி பேர் ஒருவேளை உணவுடன் வாழ்கிறார்கள். காரணம், உலகளவில் உணவு உற்பத்தி குறைந்துள்ளது' என்றவர் ஐ.நா. பொதுச்செயலாளர் பாங்கிமோர்.

அதாவது, உலக மக்களில் பாதிப் பேர் ஒருவேளை உணவுடன் வாழ்கிறார்கள் என்பதுதான் அதிர்ச்சியான விஷயம். ஏன் இந்த நிலை?

விவசாய நிலங்களில் வேறு பயிர்களை வளர்ப்பது அல்லது அவற்றை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். இதை அரசு மட்டுமல்ல; மக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்!''

நம்மாழ்வாரின் எச்சரிக்கை அனைவரும் கவனிக்க வேண்டிய ஒன்று. கவனித்து, காப்பாற்றிக் கொள்ளப் போகிறோமா நிலத்தை - நம்மை?!

- த.இ.தாகூர்



கடலில் மூழ்கும் சென்னை!

நில்... கவனி... செல்! கொல்

அருண் சரண்யா

ஷிப்ராவின் மரணத்துக்குப் பின் இரண்டாவது முறையாக, தன் வீடு தேடி வந்திருந்த விக்ரமுடன் மொட்டை மாடியில் அமர்ந்திருந்தாள் பவித்ரா.

'' 'லட்சுமி'ன்ற பெயரிலே எனக்குத் தெரிஞ்ச ஷிப்ராவுக்கு எந்த சிநேகிதியும் இல்ல விக்ரம்'' என்று அதற்கு முன்தினம் அவனிடம் கூறியது நினைவுக்கு வந்தது.

அந்த நேரத்தில் படபடவென இறக்கைகளை அடித்துக் கொண்டபடி மொட்டை மாடியில் கைப்பிடிச்சுவரின் மீது உட்கார்ந்தது ஒரு புறா. சாம்பலும் வெண்மையுமாகக் காட்சியளித்த அது தன் சிறிய தலையை எல்லாத் திசைகளிலும் சுழலவிட்டு, தனது பாதுகாப்பை உறுதி செய்துகொண்டது. பின், தன் கழுத்தை ஒருபுறமாகச் சாய்த்தபடி பவித்ராவைப் பார்த்தது.

பவித்ராவுக்குச் சிலிர்த்தது. இப்படிக் கழுத்தைச் சாய்த்தபடி பார்க்கும் பழக்கம் ஷிப்ராவுக்கும் உண்டு.

'நான் வேணும்னு அப்படி செய்வதில்லே பவித்ரா. என்னவோ, தானாக ஒட்டிக்கிட்ட பழக்கம்' என்று ஒரு முறை ஷிப்ரா குறிப்பிட்டதுண்டு.

ஷிப்ராவுக்குத் திருமணமான பிறகு முன்பளவு சந்திக்க முடிந்ததில்லை என்றாலும், தொடர்ந்து இரு நாட்களுக்கு மேல் தொலைபேசியில் பேசாமல் இருந்ததில்லை - தனது சிங்கப்பூர் பயணம் தொடங்கும் வரை.

ஒரு நீண்ட தொலைபேசி விவாதத்தின் இறுதியில் பவித்ரா, ''சொன்னா நம்பு. உன்கிட்டே நான் எதையும் மறைச்சதில்லே. நீயும் அப்படித்தானே?'' விடை தெரியாதவள் போல் வேண்டுமென்றே கேட்டாள்.

''உண்மையை எல்லாம் உன்னிடம் சொல்கிறேனோ இல்லையோ, உன்னிடம் சொல்வது எல்லாமே உண்மைதான் பவித்ரா.''

''அப்ப என்கிட்டே சொல்லாத உண்மைகளும் உன்கிட்டே இருக்கா? யாரிடமும் பகிர்ந்துக்க முடியாத ரகசியங்களா?''

''இன்னிக்கு ஏதோ வம்பு வளக்கணும்னு நீ தீர்மானிச்சுட்டே. சரி பரவாயில்ல சொல்றேன். உண்மையைச் சொல்லணும்னா உன்கிட்டே பகிர்ந்துக்காத சில விஷயங்களை குருவிடம் பகிர்ந்துக்கிட்டிருக்கேன். அப்புறம்...''

பவித்ராவிடம் ஒரு சின்ன ஏமாற்றம் எட்டிப் பார்த்தது. கூடவே 'கணவனிடம் பகிர்ந்துகொள்ளும் எல்லா விஷயங்களையும் தன்னிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? ஒரு வேளை எனக்குத் திருமணம் ஆனால், நானும் இவளைப் போலத்தான் இருப்பேனோ என்னவோ?' என்ற சமாதானமும் எழுந்தது. ஆனால், அடுத்ததாக ஷிப்ரா கூறிய வாக்கியம்தான் அவளைப் புரட்டிப்

கொண்டான். ''கவலைப்படாதே, ஷிப்ராவின் மரணம் தொடர்பான எல்லா உண்மைகளையும் நான் விசாரணை செய்து கண்டுபிடிச்சுடுவேன்'' என்றான் சமாதானப்படுத்தும் விதத்தில்.

''வேணாம் விக்ரம். ஷிப்ராவின் வாழ்க்கையில் அவளுக்குன்னு சில அந்தரங்கங்கள் இருக்கலாம். அதையெல்லாம் தோண்டி பகிரங்கமாக்கும் முயற்சி வேண்டாமே, ப்ளீஸ். ஏதோ ஒரு வேகம், என்



போட்டது.

''தப்பா எடுத்துக்காதே பவித்ரா. உங்க ரெண்டு பேரிடமும் சொல்லாததைக் கூட லட்சுமியிடம் சொல்வதில் எனக்குத் தயக்கம் ஏற்பட்டதில்லை.''

''என்னது? லட்சுமியா? யாரது? அப்படியொரு சிநேகிதியைப் பற்றி நீ சொன்னதேயில்லையே?.... ஓ! புரிஞ்சிடுச்சு. சிகப்புத் தாமரையிலே உட்கார்ந்துகிட்டு பணமாய் கொட்டுவாங்களே மிஸஸ் விஷ்ணு, அவங்களிடம் செய்யும் பிரார்த்தனையைச் சொல்றியா?''

''அதெல்லாம் இல்லை. அடுத்த முறை நேரே பார்க்கும்போது லட்சுமியைப் பற்றிய எல்லா விவரங்களையும் சொல்றேன்.''

''என்ன பவித்ரா, அந்த புறாவையே பார்த்துக்கிட்டிருக்கே?'' என்று விக்ரம் கேட்டான். பறந்து செல்லும் புறாவையே கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவைப் பார்த்ததும் அவள் எண்ண ஓட்டத்தை ஓரளவு புரிந்து

5

திக்திக் தொடர்கதை



னவோ ஒரு சோகம், அவ தற்கொலை செய்துகிட்டா. எந்த விசாரணையாலும் ஷிப்ரா உயிரோடு வரப்போறதில்லை.''

இப்படிச் சொன்னபோதே அவள் மனம் 'ஆனால் ஷிப்ரா தொடர்பான புதிர்களை நான் தனிப்பட்ட முறையில் நிச்சயம் விடுவிப்பேன். என்ன செய்ய, இந்த விஷயத்திலே உன்னைத் தவிர்ப்பதைத் தவிர வேறே வழியில்லை. தவிர, இன்ஸ்பெக்டர் என்கிற உன் வேலையே, இதிலே மேலும் தடைக்கல்லாக எனக்கு இருக்கிறது' என்றது.

ஆனால், விக்ரமின் அடுத்த கேள்வி அவளை நிமிர வைத்தது.

''எனக்கென்னவோ ஷிப்ரா தற்கொலை செய்துக்கலைன்னு தோணுது.''

''எதனாலே?''

''தற்கொலை முடிவோடு கிளம்பியவள் செல்போனை எதற்காக எடுத்துக்கணும்?''

''கடைசி நிமிடத்தில், தனக்கு வேண்டியவர்களிடம் விடை பெறணும்னு நினைச்சிருக்கலாமே.''

''ஒத்துக்கறேன். ஆனால், தோளிலே மாட்டிக்கொண்டு போன ஹாண்ட்பாக், உதட்டிலே இருந்த லேசான லிப்ஸ்டிக், கூடவே எடுத்துப்போன சின்னக் குடை - இதுக்கெல்லாம் என்ன சமாதானம் சொல்லுவே?''

சிறு மௌனத்துக்குப் பின் பவித்ரா தன் யூகத்தை வெளிப்படுத்தினாள். ''வீட்டிலே இருக்கிறவங்களுக்கு சந்தேகம் வரக் கூடாதே, அதனாலே வழக்கமா ஆபீஸுக்கு எதை எடுத்துப்பாளோ அதையெல்லாம் எடுத்துக்கிட்டிருக்கலாமே.''

''ஆனால், குடை விஷயத்தில் உன் வாதம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லே பவித்ரா. அவ கிளம்பும்போது வீட்டிலே நியூஸ் சானலில் 'மாலை பலத்த மழை பெய்யலாம்'னு சொன்னதாகவும், அதைக் கேட்டவுடன் அவள் உள்ளே போய் குடையை எடுத்துக் கொண்டதாகவும் அவ மாமனார் சொன்னாரே.''

பவித்ரா திகைத்தாள். ''இதுக்கு என்னிடம் பதில் இல்லே விக்ரம். அவளுடன் கடைசியாப் பேசினாலும், ஷிப்ரா தொடர்பான பல கேள்விகளுக்கு என்னிடம் பதில் இல்லே.''

விக்ரம் தன்னுடைய மோதிரத்தை எதற்காகவோ நான்கைந்து முறை கழற்றி கழற்றி அணிந்து கொண்டான். தான் கூற வருவதை, எப்படி வெளிப்படுத்துவது என்று யோசித்திருக்க வேண்டும். பின்னர் ஒரு வழியாக, ''ஷிப்ராவோடு கடைசியாகப் பேசியது நீ இல்லை'' என்றான்.

என்ன உளறுகிறான்? பாதிப் பேச்சில் கேட்ட எதிர்முனை அலறல், ரயில் சத்தம் ஆகியவை மீண்டும் அவள் மனதில் வந்து சென்றன.

''இன்னைக்கு காலைலே நான் அந்த குணசுந்தரியை - அதான், அந்த லெவல் க்ராஸிங் அருகே வேர்க்கடலை விற்கும் பெண்ணை விசாரித்தேன். 'அடுத்த ஜென்மத்திலே சந்திக்கலாம்'னு உன்னிடம் பேசி

முடித்தபோது பக்கத்திலே இருந்த ஒருத்தி தான் அலறியிருக்கா. சாலையைத் தாண்டிக் கொண்டிருந்த அவளது ஆறு வயது மகன் மீது கார் ஒன்று ஏறிவிடுமோ என்ற பயத்தில் எழுந்த அலறல் அது. ரயில் ஒன்று அப்போது கடந்து போனது தற்செயலாக நடந்த விஷயம்.''

விழிகள் விரிய பவித்ரா கேட்டுக் கொண்டிருக்க, விக்ரம் தொடர்ந்தான். ''உன்னோடு பேசின பிறகு ஷிப்ராவுக்கு வேறு யாரிடமிருந்தோ தொலைபேசி அழைப்பு வந்திருக்கு. அதைக் கேட்டதும் அவள் கடும் அதிர்ச்சியிலே சில நொடிகள் நின்னிருக்கா. அதுக்குப் பிறகுதான் ரயிலுக்குமுன் விழுந்திருக்கா. இதுதான் குணசுந்தரியின் வர்ஷன். இது உண்மையானால், ஷிப்ரா செய்துகொண்டது டெக்னிக்கலாக தற்கொலை என்றாலும், தொலைபேசியில் எதையோ சொல்லி அந்த முடிவை யாரோ எடுக்கச் செய்திருக்காங்க என்கிற அளவிலே இது கொலை தான்.''

பவித்ரா கலவரமானாள். இதென்ன எதிர்பாராத கோணம்! அதே சமயம் ஷிப்ராவின் மாமனார், குணசுந்தரி என்று பலரையும் விக்ரம் விசாரித்திருக்கிறான் என்ற எண்ணம் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''நல்லா யோசிச்சுப் பாரு பவித்ரா. ஷிப்ராவுக்கு லட்சுமின்னு யாராவது சிநேகிதி உண்டா? ஒரு வேளை நம்ம கல்லூரியிலே ஷிப்ராவின் பேட்ச்சிலே அந்தப் பெயரிலே யாரும்...''

அதற்கு முன்தினம், தான் அளித்திருந்த அதே பதிலை மீண்டும் கூறினாள் பவித்ரா. ''அப்படி யாருமில்லே விக்ரம். சொல்லப் போனா தனலட்சுமி, கஜலட்சுமி, ராஜலட்சுமி அப்படின்ற பேரிலே கூட யாரும் எங்க செட்டிலே படிச்சதில்லை.''

விக்ரம் மௌனமானான். பவித்ராவின் வகுப்பில் லட்சுமி என்று ஒருத்தி இருந்தது, அவனுக்கு நினைவுக்கு வந்தது. பவித்ரா நிச்சயம் இதை மறந்திருக்க முடியாது. தவிர அவள் அவசரமாக பதிலளித்த விதமே சந்தேகத்தை அளித்தது.

அடுத்த நாள், நகரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த அந்த வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினான், சாதாரண உடையிலிருந்த விக்ரம்.

''யாரது?'' என்றபடியே கதவைத் திறந்தாள் ஓர் இளம்பெண்.

''மிஸ் லட்சுமி?'' என்று சந்தேகத்துடன் கேட்ட விக்ரமைப் பார்த்ததும், அவள் முகம் மலர்ந்தது. ''நீங்க என்னோட காலேஜிலே படிச்ச விக்ரம்தானே? உள்ளே வாங்க'' என்றாள். அவள் நடவடிக்கையில் ஏதோ ஒரு செயற்கைத்தன்மை இருந்ததாக உணர்ந்தான் விக்ரம்.

(தொடரும்)



''உன் மச்சினன் 'ட்ராஃபிக் சார்ஜெண்ட்'டாமே, நீ சொன்னதே இல்லையே!''

''என்ன சொல்ல, எங்களுக்குள்ள 'போக்குவரத்து' இல்லே!''

- வெ.சீதாராமன்

பள்ளிப் பாடங்களில் ரயில்வே நியூஸ்?



'இந்திய ரயில்வேத் துறையில் பேரிடர் மேலாண்மை' என்ற தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார், மத்திய ரயில்வே துறை இணையமைச்சர் வேலு. ஆய்வு குறித்து நம்மிடம் பேசினார்!

எப்படி வந்தது ஆர்வம்?

பேரிடர் (disaster) என்பது இரு விதங்களில் நிகழ்வது. ஒன்று, இயற்கையானது; மற்றொன்று மனிதர்களால் உருவாக்கப்படுவது. இந்த இருவித நிகழ்வுகளையும் மேலாண்மை செய்த அனுபவம் எனக்கு உண்டு. நான் நெல்லை மாவட்டத்தில் ஆட்சியாளராக இருந்தபோது வரலாறு காணாத புயல், வெள்ளத்தால் மாவட்டம் பாதிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் மாவட்ட நிர்வாகத்தை முடுக்கிவிட்டு, சவால்களைச் சந்தித்து மக்களின் துயர் துடைத்தேன். பின்பு அதே மாவட்டத்தில் ஜாதி மோதல்கள் நடந்தன. அந்த நிகழ்வின் போது மிகத் துரிதமான நடவடிக்கைகள் மூலம் கலவரத்தைக் கட்டுக்குள்கொண்டு வந்தோம். இந்த இரு நிகழ்வுகளும் எனக்குக் கற்றுத்தந்த பாடங்கள் நிறைய. எந்த ஒரு பேரிடர் என்றாலும், உடனடி நிவாரணம் செய்ய வாய்ப்பு பெற்றவர்கள் அருகிலுள்ள மக்களும், தன்னார்வத் தொண்டு அமைப்புகளும்தான். அரசு நிவாரணம், கொஞ்சம் தாமதமாகத்தான் போய்ச் சேரும்.

எனவே பேரிடர் நிவாரணம் மற்றும் புனரமைப்பில் மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்ய வேண்டும். அந்த அடிப்படையில்தான், ஓய்வு பெற்ற பிறகு, 2002ல் 'பேரிடர்கள் மேலாண்மையில் சமூகத்தின் பங்களிப்பு' என்ற தலைப்பில் என் ஆய்வைத் துவக்கினேன்.

அப்புறம் ஏன் ஆய்வு ரயில்வே

துறைக்கு மாறியது?

2004ல் நான் பா.ம.க.வில் இணைந்து, பின்னர் ரயில்வே துறை அமைச்சரான போது பேரிடர் மேலாண்மை சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன் அடிப்படையில் மேலாண்மை ஆணையமும் நிறுவப்பட்டது. ஆனால், புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கை பாதிப்புகள் குறித்த மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ரயில்கள் மோதல், ஆற்றில் ரயில் கவிழ்தல், தண்டவாளம் விட்டு ரயில்கள் இறங்குதல், குண்டு வெடிப்பு போன்ற விபத்துக்களில் நூற்றுக்கணக்கில் மக்கள் இறந்து போகிறார்கள். எனவே ரயில்வே விபத்துகளையும் பேரிடர் மேலாண்மையில் இணைக்க வேண்டும் என்பது என் கருத்து. அதனால்தான் என் ஆய்வுத் தலைப்பை 'இந்திய ரயில்வேயில் பேரிடர் மேலாண்மை' என்று மாற்றி, ஆய்வைத் தொடர்ந்தேன்.

ஆய்வின் சிறப்பம்சங்கள்?

பேரிடர் மேலாண்மைக்கு ரயில்வேயில் தக்க அதிகாரம் மற்றும் நிதி ஆதாரங்களோடு, ''பாதுகாப்பு இயக்குநரகம்' அமைக்கப்பட வேண்டும். ரயில்கள் ஒன்றுடன் ஒன்று நேரிடையாக மோதிக் கொள்வதைத் தவிர்க்கவும், ஓடும் ரயிலில் ஏதாவது இயந்திரப் பிரச்னை இருந்தால், உடனே ரயிலை நிறுத்தவும், சில தொழில் நுட்ப மேம்பாடு தேவை. ஆனால், இத் துறையின் பல பிரிவுகள் இணைந்து வேலை செய்தால்தான் இவை சாத்தியமாகும். எனவே, நிர்வாக ரீதியாக தாமதங்கள், தடைகள் விளைகின்றன. இந்தப் பணிகளைப் பாதுகாப்பு இயக்குநரகத்தின் கீழ் கொண்டுவந்து நிறைவேற்றலாம். தீ அணைப்பு லாரிகள் போன்று தீ அணைப்பு வசதியுடன் ரயில்கள் உற்பத்தி செய்யலாம். விபத்து நடந்த இடத்தில் எல்லாத் துறைகளையும் விரைவில் ஒருங்கிணைக்கலாம். அந்த இடத்தில் செயற்கைக்கோள் தகவல் வசதியை உடனடியாக உருவாக்கலாம். மேலும் முக்கியமாக, விபத்து ஏற்பட்டவுடன் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை மக்களுக்கும் சொல்லிக் கொடுக்கலாம். ரயில்வே பாதுகாப்பு அம்சங்கள் குறித்து பள்ளியில் பாடங்கள் மூலம் சொல்லிக் கொடுக்கலாம். குறும் படங்கள் எடுக்கலாம்.

ஆய்வு ஏட்டளவிலேயே போய் விடுமா?

பேரிடர் மேலாண்மை ஆணையமும், இந்திய ரயில்வேயும் இணைந்து பணியாற்றத் துவங்கிவிட்டன. விபத்துகளைத் தடுப்பதற்கு, அவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமளவுக்கு நிர்வாகரீதியாகச் சில கட்டமைப்பு வசதிகள் செய்துகொண்டிருக்கிறோம். என் ஆய்வின் அடிப்படையில், இன்னமும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

- ப்ரியன்



சிவாலயங்களில் கருவறையில் இருக்கும் சிவலிங்கமும் மற்ற பரிவார தேவதைகளும் தேடிச்சென்று காண்பவர்க்கு மட்டுமே கிடைக்கும் தரிசனம். ஆனால், எல்லோருக்கும் அந்தப் பேறு கிடைப்பதில்லையே. மூப்பு, நோய் இவற்றின் காரணமாக வீட்டை விட்டு நகரமுடியாதவர்கள், இல்லப் பொறுப்பு, அலுவலக வேலை என்று ஆட்பட்டு கோயிலுக்கு என்று நேரம் ஒதுக்க முடியாமல் இருப்பவர்கள்... என்று எல்லோருக்கும் பாகுபாடின்றி காட்சி கொடுப்பதற்காக இறைவனே கோயிலைவிட்டு வெளியே வருவதுண்டு.

வருடத்தில் பத்து நாட்களுக்கு 'பிரம்மோத்ஸவம்' என்ற பெருந்திருவிழா நடைபெறும்போது, இப்படி இறைவன் வீதியுலா வந்து சகலருக்கும் காட்சியளிக்கிறான். அதற்கென்று செப்புத் திருமேனிகள் எல்லாக் கோயில்களிலும் எழுந்தருளுவிக்கப்பட்டன. இந்தச் சிலைகள், ஒவ்வொரு நாளும் காலையிலும் இரவிலும், விதவிதமாக அலங்கரிக்கப்பட்டு, பல்வேறு வாகனங்களில் வீதி வலம் வரும். அந்த விழாவைக் காண அக்கம்பக்கத்து ஊர்களில் இருந்து மக்கள் பெருந்திரளாக வருவார்கள். ஊரே கோலாகலமாக இருக்

– த.கி. நீலகண்டன்

5



. அருளின் வடிவே... அழகின் வடிவே... அருளின் வடிவே...

கும். பெருமான் கோயில் என்றால் பெருமாள் மட்டும் எழுந்தருளுவார். சிவன் கோயிலில் சுவாமி தன் பரிவாரங்களோடு எழுந்தருளுவார். இதை 'பஞ்சமூர்த்தி விதியுலா' என்று அழைப்பார்கள். இதில் பிரதானமான தெய்வத் திருமேனி சோமாஸ்கந்தருடையது.

தனியாக ஒரு அம்பாள், விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேசுவரர் என்று மற்ற நான்கு திருமேனிகளுடன் சோமாஸ்கந்தரும் சேர்ந்து பஞ்சமூர்த்திகள்.

'ஸ உமா ஸ்கந்தர்' என்பதே சமஸ்கிருத மொழி இலக்கணப்படி 'ஸோமாஸ்கந்தர்' ஆயிற்று. 'உமையொடும் கந்தனோடும் உள்ள மூர்த்தி' என்பது இதன் பொருள். இந்த வடிவத்தில் சுவாமி, அம்பிகை ஆகிய தெய்வ வடிவங்களுக்கு இடையே சிறு

உமையாளொடும் உடனாகிய ஒருவன்

குழந்தை வடிவில் முருகப் பெருமான் எழுந்தருளியிருப்பார். கணவன் - மனைவி இருவருக்கிடையில் மற்றவர் நிற்கவோ, உட்காரவோ, குறுக்கே போகவோ கூடாது என்பது ஒரு வழக்கம். ஆனால், இந்த விதிக்கு அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கு விலக்கு உண்டு. விதி விலக்கு மட்டுமல்ல! பிறப்புரிமையும்கூட! இப்படி குடும்ப சகிதராக விளங்கும் இறைவன் திருவுருவமே சோமாஸ்கந்த வடிவம்!

இந்த அழகிய கோலத்தில் மனத்தைப் பறிகொடுத்து தேவாரம் பாடிய மூவரும் அழகான பாடல்களைப் பாடி இருக்கிறார்கள்.

அப்பர் பெருமான் திருவையாற்றுக்கு எழுந்தருளியபோது வீதியில் இந்த சோமாஸ்கந்தர் உலா வருவதைக் கண்டு

'காதல் மடப் பிடியோடும் களிறு
வருவன கண்டேன்
கண்டேன் அவன் திருப்பாதம்;
கண்டறியாதன கண்டேன்'

என்று மெய்மறந்து நிற்கிறார். காண்போர் மனத்தைக் கவரும் வடிவம் சோமாஸ்கந்த வடிவம்.

சுவாமியின் திருவுருவம் நான்கு கரங்களுடன் விளங்குகிறது. இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டவாறு அமர்ந்த கோலத்தில் விளங்குகிறார் பெருமான். இடுப்பு, முதுகு, கழுத்து, சிரம் ஆகியவை ஒரு நேர்க்கோட்டில் அமைந்தவாறு நிமிர்ந்து அமர்ந்த கோலம். முடிக் கற்றையை ஜடாமகுடமாகத் தரித்திருக்கிறார். ஜடையில் சந்திரப்பிறை, மண்டையோடு, ஊமத்தைப்பூ, கங்கை, நாகம் ஆகியவை விளங்குகின்றன. நீண்ட இரு காதுகளில் இடது காதில் தோடும், வலது காதில் மகரகுண்டலமும் அணிந்திருக்கிறார். பெருமானின் இடப்பாகம் அம்பிகையினுடையது அல்லவா! அதனால் பெண்கள் அணியும் தோடு இடது காதை அணி செய்கிறது. எடுப்பான நாசியும் குறுநகை தவழும் திருவாயும் விளங்க வீற்றிருக்கிறார், மூன்று விழிகளுடன் திரிநேத்ரியாக விளங்கும் பெருமான். இடது மேற் கரத்தில் மானின் உருவமும், வலது மேற் கரத்தில் மழுவும் (கோடாலி) விளங்கு

கின்றன. வலது கீழ்க்கரம், அஞ்சேல் என்று அபயம் காட்டுகிறது. இடது கீழ்க்கரம் நம்மை 'அருகில் வா' என்று அழைக்கும் கோலத்தில் அமைந்திருக்கிறது. கழுத்தில் நாகாபரணமும், அகன்று விரிந்த மார்பில் முப்புரிநூலும், தோள்களில் 'பாகுவலயம்' என்கிற ஆபரணமும் அணி செய்கின்றன. விபூதி, ருத்திராட்சம் ஆகிய சிவச்சின்னங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. அருகில் அமர்ந்திருக்கும் அம்பிகையின் முகத்தில் பெருமிதம் பொலிகிறது. லோகநாயகனின் தேவியான சர்



வேஸ்வரியின் திருமுகத்தில் ஒரு தாயின் பரிவு தெரிகிறது. வலது பாதத்தை மடித்து, இடது காலைத் தொங்கவிட்டவாறு அமர்ந்திருக்கிறாள் அம்பிகை. ஒரு கரத்தில் தாமரை மொட்டு ஏந்தி, இடது கரம் வரத முத்திரை காட்ட, இரு கரங்களுடன் விளங்கும் எழிலார்ந்த கோலம்.

சுவாமிக்கும் அம்பிகைக்கும் இடையே குதூகலத்துடன் ஆனந்தக் கூத்தாடும் பாவனையில் குழந்தை முருகன். சுவாமி ஞான சக்தியாகவும் அம்பிகை இச்சா சக்தியாகவும் இந்த இரு சக்திகளை இணைக்கும் கிரியா சக்தியாக முருகனும் விளங்குகிறார்கள். மூவரும் சேர்ந்த வடிவம் சச்சிதானந்த வடிவம். சுவாமியும் தேவியும் சத்தும் சித்தும். முருகன் ஆனந்த வடிவம். இதுவே சோமாஸ்கந்த வடிவின் தத்துவம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

திருவண்ணாமலையில் உள்ள சோமாஸ்கந்தர் திருமேனி அளவில் மிகப் பெரியது! ஆஜானுபாகுவான பெரிய திருமேனி இது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள சோமாஸ்கந்தர் சொக்க வைக்கும் அழகர். அதனாலேயே இவருக்கு ''சொக்கர்'' என்றும் பெயர். இவர் ரொம்ப 'நாசூக்கான' பேர்வழி. வெளியே போனால் எங்கும் இரவு தங்கமாட்டார். 'சொக்கர் இராத் தங்கார்' என்ற பழமொழியே உண்டு. திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் முருகப் பெருமானின் திருக்கல்யாண வைபவத்துக்கு எழுந்தருளும் இவர், கல்யாணம் முடிந்த கையுடன் சட்டு புட்டென்று பல்லக்கில் ஏறித் திரும்பி விடுவார்! அது மட்டுமல்ல, இவர் போகும் இடம் எல்லாம் இவருக்கு வேண்டிய அபிஷேகப் பொருட்கள், நைவேத்தியம் ஆகியவற்றை மதுரையிலிருந்தே கையோடு எடுத்துச் சென்றுவிடுவாராம்! அவ்வளவு நாசூக்கான பேர்வழி!

மதுரைக்கு அடுத்த, திருப்பூவனம் என்னும் தலத்தில் உள்ள சோமாஸ்கந்தரும் 'அழகுச் சொக்கர்' என்று பேர் படைத்தவர். இவரது பொன்மேனியின் பொலிவைக் கண்டு சொக்கிப்போன 'பொன்னனையாள்' என்கிற தாசிப்பெண் உணர்ச்சிவசப்பட்டு இவர் கன்னத்தில் கிள்ளியே விட்டாளாம்! அந்த நகத் தழும்பு இன்னமும் இருக்கிறதாம்!

திருவாரூரில் உள்ள சோமாஸ்கந்தருக்குத் 'தியாகராஜர்' என்ற சிறப்புண்டு! மற்ற சோமாஸ்கந்தரைப் போல இவரது திருமேனி முழுவதும் காணக்கிடைக்காது. முகதரிசனம் மட்டுமே! மற்ற அங்கங்கள் மறைந்தே இருக்கும். சிதம்பர ரகசியம் போல, இதுவும் ஒரு ரகசியமாம். ஏன் ரகசியம்? யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள்!

(பெருகும்)


சோ
எழுதிய
மஹாபாரதம் பேசுகிறது
1304 பக்கங்களில் வியாச பாரதத்தின் சுருக்கம். 18 பர்வங்களில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள், பலரும் கேட்டிராத நுணுக்கமான தகவல்கள், பீஷ்மர் அருளிய பல உபயோகமான தகவல்கள். இவற்றுடன் முக்கிய இடங்களில் பாரத நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும், இன்றைய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கும் விதம் புதுமையானது.
இரண்டு பாகங்கள் ரூ. 600/- 9 வருடங்களில் 9 பதிப்புகள்
வால்மீகி ராமாயணம்
வால்மீகி ராமாயணத்தை சுருக்கமாகவும், எளிமையாகவும் எழுதியுள்ளார். முக்கியமான இடங்களில் வால்மீகி ராமாயணம் - கம்ப ராமாயணம் மற்றும் துளசி ராமாயணங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் எடுத்துக் காட்டியுள்ளார்.
இரண்டு பாகங்கள் ரூ.600/-
ஹிந்து மஹா சமுத்திரம்
யுகங்களின் கணக்கு, யாகங்கள், தெய்வங்கள், உருவங்கள், மரணத்திற்குப் பின்..., யோக வாசிஷ்டம், ஜடங்கள், சட்ட தத்துவங்கள், இதிகாசங்கள், புராணங்கள், நாரதர் பெற்ற உபதேசங்கள் - இப்படி ஏராளமான இந்து சமயத் தகவல்கள்.
பாகம் - 1 ரூ.200/- பாகம் - 2 ரூ.225/- பாகம்-3 ரூ. 175/-
நடிகர் சிவகுமார் தமிழகத்தின் சமூக, கலாச்சார, வரலாற்றுப் பதிவுகளைத் தன் டைரியிலிருந்து வழங்கியுள்ளார்.
விலை ரூ.300/-
டைரி
1946-1975
இப்படிக்கு சூர்யா
நடிகர் சூர்யா
விலை ரூ.250/-
இது ராஜபாட்டை அல்ல...
சிவகுமார்
விலை ரூ.220/-
எஸ். குருமூர்த்தி எழுதிய
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
அரசியல், ஆன்மீகம், கலாச்சாரம், தொழில் முன்னேற்றம், மத நம்பிக்கை, மதப் பிரச்சினை, ஹிந்து மதத் தத்துவங்கள், ஜனநாயக தத்துவம், அரசியல்வாதிகள்... இப்படி ஏராளமான விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.
(3 - பாகங்கள் - விலை ரூ.525/-)
அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(பு.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004
தொலைபேசி: 24641314 www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com

டேட் கதை-2

கண்ணுக்குள்

“மச்சி தள்ளி உட்காருடா'' வழக்கமான நாயர் கடை பெஞ்சில் அமர்ந்து டீக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுத் திரும்புகையில்தான் அவளைப் பார்த்தேன். சில்வர் பூஜைக்கூடையுடன் சென்றுகொண்டிருந்தாள். தெருவுக்குப் புதியவள். சிவப்புப் பாவாடை, இள மஞ்சள் தாவணி. உட்காரும் இடம் தாண்டி நீண்ட கூந்தல். பின்னிருந்து சூப்பர். முன்னால் எப்படி இருப்பாள்? அவள் கோயில் சென்று திரும்பும்வரை காத்திருக்க முடிவு செய்தேன்.

நண்பர்கள் 'குசேலன்' முதல், மாளவிகாவுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்பது வரை அலசிக்கொண்டிருக்க, எனக்கு அதில் ஆர்வமில்லை.

வர்றா... வர்றா...

அவளையே பார்த்துக்கொண்டு இருந்தேன். தொலைத்துவிட்டுத் தேடுபவன்போல தலை நிமிரவேயில்லை. தாண்டிப் போகையில் 'க்...க்கும்' தொண்டையைச் செருமிக் காட்ட, அவள் நிமிர்ந்தாள்; பார்த்தாள்; போய்விட்டாள்; ஆனால், அந்தப் பார்வை என்னுடனே ஒட்டிக்கொண்டது. 'தமிழ் எம்.ஏ' படத்தில் வரும் அஞ்சலி போல, 'சுப்ரமணியபுரம்' துளசி போல நூறு மடங்கு ஆழமான, அழுத்தமான பார்வை. கண்கள் பேசுகிறது என்பார்களே அப்படி... திரும்பத் திரும்ப அவள் கண்களைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றியது.

''யாருடா இந்தப் பொண்ணு?''

''நோக்கியா'வுல அவங்கப்பா சூப்பர்வைசராம்... போன வாரம்தான் நம்ம திருநாவு வீட்டுக்குக் குடி வந்தாங்க'' என்றான் செந்தில்.

அதன்பின் பெட்டிக்கடையில் கடனும், செளம்யாவுடன் காதலும் கூடியது. 'கஜா, அந்தப் பொண்ணு உனக்கு ரொம்பப் பொருத்தம்டா!' 'நேத்து அவளை மார்க்கெட்ல பார்த்தேன்டா', 'உன் ஆள் ஷால் கலர்லயே செப்பல் போட்டுட்டு வந்திருக்கே' என்று அவளைப் பற்றி என்னிடம் பேசி... காஃபி, சிகரெட், ஷாம்பு, தலைவலி தைல டப்பா வரைக்கும் என் கணக்கில் வாங்கிக்கொண்டார்கள்.

காத்திருந்தேன்.

காத்திருந்தாள்.

சந்தித்தோம் பலமுறை.

''செளமி... என்கிட்ட உனக்குப் பிடிச்சது எது?''

''திமிர்... கூடவே உன்னோட துணிச்சல்.''

''உன்கிட்ட எனக்குப் பிடிச்சது எதுன்னு கேளேன்.''

''சொல்லேன்.''

''உன்னோட கண்கள்.''

''இதைத்தான் ஆயிரம்முறை சொல்லிட்டியே.''

''ஆயிரம் என்ன ஆயுசு முழுக்க சொல்லிக்கிட்டே இருக்கலாம். ஒரு பெண்ணுக்கு வசதி, படிப்பு, அழகு இல்லாட்டியும் கண்கள் பேசினா போதும், வாழ்க்

கையே சந்தோஷமா இருக்கும்.''

''பொய்.''

''நிஜமாத்தான் சொல்றேன்.''

''கையை நீட்டுங்க'' என்றவள் தன் இரண்டு கண்களையும் எடுத்து, என் கையில் கொடுப்பது போல் செய்துவிட்டு, ''பத்திரமா மூடி வெச்சிக்கங்க. எப்பவும் பார்த்துக்கிட்டே இருங்க, நான் போறேன்.''

''சௌ, இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துட்டுப் போயேன்.''

''ம்... கம்ப்யூட்டர் கிளாஸுக்கு யாரு போறதாம்? நாளைக்குப் பார்க்கலாம்'' என்று ஸ்கூட்டியில் சென்று



நூறு நிலவா...

மறையும்வரை அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

எம்.ஜி.கன்னியப்பன்

அடுத்த இரண்டாவது நாள் திருச்சியிலுள்ள அப்பாவின் கிராமத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. அப்பாவின் பூர்வீக சொத்து கேஸ் விஷயமாக வக்கீலைப் பார்த்து சில காரியங்கள் முடிக்க வேண்டியிருந்ததால், பத்து நாட்களுக்கு மேல் தங்க வேண்டியதாக இருந்தது. பக்கா கிராமம் என்பதால் செல்லில் தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு டவர் பிராப்ளம்.

கிராமத்து வேலை முடித்து திருச்சி வந்த பின்தான் செல் சிணுங்கியது. எடுத்தேன். சுந்தர் பேசினான். ''டேய் எத்தனை தடவைடா உனக்கு ஃபோன் செய்யறது...? இப்ப எங்கடா இருக்கே...?''

''என்னடா விஷயம்?''

''நீ ஊருக்குப் போன ரெண்டாவது நாள், சௌமியா டென்னிஸ் கோர்ட்டுக்குப் போயிட்டு வர்ற வழியில, ஸ்கூட்டி



மணல்ல சறுக்கி விழுந்துட்டாடா. தலையில பலமா அடி.''

''ஐயய்யோ அப்புறம்...?''

''உயிருக்கு ஒண்ணுமில்ல... ஆனா... கண் நரம்புல ஏதோ சேதாரமாகி கண் பார்வை போயிடுச்சிடா.''

சென்னைக்கு வந்த முதல் வேலையாக சௌமி வீட்டுக்குச் சென்றேன். வீட்டில் யாருமில்லை. சௌமி மட்டும் காதில் ஹெட்ஃபோன் மாட்டிக்கொண்டு இருந்தாள்.

என் காலடி ஓசை கேட்டு... ''யாரது?'' என்றாள்.

''நான்தான் சௌமி...'' என்றதும் வாய் விட்டுக் கதறி அழுதாள். நானும் அழுதேன்.

''இந்த நிலையிலா உன்னைப் பார்க்கணும்...?''

''விடுங்க, உயிர் பிழைச்சதே பெரிய விஷயம்... ஆனா, அடிக்கடி என்கிட்ட என்ன பிடிக்கும்னு சொல்வீங்களோ அதே போயிடுச்சே. இனிமே என் கண்கள் எப்பவுமே பேசாது கஜா.''

''வீட்ல அப்பா... அம்மா...''

''உயிர் பிழைச்சேன்னா வர்றேன்னு நிறைய கோயில்களுக்கு வேண்டியிருக்காங்க... பக்கத்து வீட்டு அக்காவைத் துணைக்கு வெச்சிட்டு ஊருக்குப் போயிருக்காங்க... வர ஒரு வாரம் ஆகும்...'' என்றவள் சற்று நேரம் அமைதியானாள்.

''அப்புறம் கஜேந்திரன், ஒரு முக்கியமான விஷயம். இனிமே நம்ம காதல் சரிப்பட்டு வராது. ஒரு நல்ல பொண்ணைப் பார்த்து கல்யாணம் செஞ்சுக்கங்க... அதுதான் எனக்குச் சரியாப் படுது.''

''சௌமி... என்ன பேசற நீ...?''

''உண்மையைத்தான் பேசறேன். ஏதோ கொஞ்ச காலம் காதலிச்சோம். அதுக்காக... காலம் முழுக்க என்னோட அவஸ்தைப் படணுமா...?''

''முடியாது... இதுக்கு நான் ஒத்துக்கவே மாட்டேன்.''

''ஏதோ உணர்ச்சி வசப்பட்டு பேசறே... நல்லா உட்கார்ந்து யோசி. தனியாளா.... எல்லாத்தையும் ஆலோசனை பண்ணு. அப்பதான் உண்மை புரியும்.''

''எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை சௌமி... ரெண்டு நாள் டைம் கொடு.''

''வெரி குட்... வாங்க...''

விடை பெற்றேன்.

இரண்டு நாட்களுக்குப் பின் மீண்டும் செளம்யா வீட்டுக்குச் சென்றேன். கொடியில் துணிகளை உலர்த்தி தடவித் தடவி கிளிப் போட்டுக்கொண்டு இருந்தாள். என் குரல் கேட்டு, ஈஸி சேரில் சாய்ந்துகொண்டாள்.

''சொல்லுங்க. என்ன முடிவு செய்திருக்கீங்க?''

''உன்னையே கல்யாணம் பண்ணிக்கிற முடிவோட வந்திருக்கேன். அதுதான் நியாயமும்கூட. இப்போதைக்கு நிச்சயம் பண்ணிட்டு, ரெண்டு மூணு வருஷம் கழிச்சு கல்யாணம் பண்ணிக்கலாம்.... என்ன சொல்றே...?''

''அதாவது காதல் பிச்சை போடறேங்கறே... ஐயோ பாவம்னு வாழ்க்கை கொடுக்கறே... காதல்ங்கறது கன்ஸல்ட் பண்ற விஷயமா கஜேந்திரன்? உணர்வு பூர்வமான விஷயமில்லையா...''

''அது வந்து...''

''நான்... நாம பிரிஞ்சுடலாம்னு சொன்னப்போ... என்ன சொல்றதுன்னு தெரியலேன்னு நீ சொன்னப்பவே, நம் காதலுக்கு நூறா சிதறிடுச்சு... ஆயிரம் சம்மட்டியால அடிச்ச மாதிரி சின்னாபின்னமாயிடுச்சி... யாரையும் கேட்காம காதலிச்சிட்டு... எனக்கு ஊனம் ஆனதும் ஊரைக் கூட்டி யோசனை கேட்டிருக்கியே... நீ என்னை மறந்துடுன்னு சொன்னப்பவே, என் வாயைப் பொத்தியிருக்கணும்... அடுத்த வார்த்தை பேச விடாம, 'இப்பவே தாலி கட்டறேன்... வா..'ன்னு கூப்பிட்டிருக்கணும். அதைவிட்டுட்டு... ரெண்டு நாள் அவகாசம் கேட்டுட்டுப் போன உன்கூட எப்படி காலம் முழுக்க சந்தோஷமா வாழ முடியும் கஜேந்திரன்?''

“காதல்ங்கறது கன்ஸல்ட் பண்ற விஷயமா கஜேந்திரன்? உணர்வுபூர்வமான விஷயம் இல்லையா..?”

அவளின் ஒவ்வொரு வார்த்தையும் என் சட்டைக் காலரைப் பிடித்து வெளியே தள்ளியது... அவளைப் பார்க்க அருகதையற்றவனாக குறுகிப்போனேன்.

வாசலுக்கு வந்தேன். கதவருகே நின்று கடைசியாக அவளின் அந்தப் பேசும் விழிகளைப் பார்க்கத் திரும்பினேன். செளமி இமைகளை மூடியிருந்தாள். மூடிய இமைகளின் வழியே கண்ணீர்த் துளி, 'கண்ணுக்குள் நூறு நிலவா இதுவொரு கனவா' என்ற பாடல் தூரத்தில், காதல் வெற்று கனவானதை ஒலித்துக் கொண்டிருக்கிறது. ●




தனித்து ஒளிரும் அனுபவம்!









மணவாழ்க்கையின் வெற்றிக்குத் திறவுகோல் - கமலநாதன் - திருவரசு புத்தக நிலையம், 23 (பழைய எண் 13), தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17, விலை. ரூ.70/-

திருமணம்தான் நடைமுறையில் சமூக வாழ்வை உறுதிப்படுத்துகிறது. திருமணத்துக்குப் பிறகு நடைபெறும் குடும்ப வாழ்வு வெற்றிகரமாக அமைய என்னவெல்லாம் தெரிய வேண்டும்? அந்த வாழ்வில் எதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கட்டுரைகளாக வடித்திருக்கிறார் நூலாசிரியர்.

அனுபோக வைத்தியத் திரட்டு- அறந்தாங்கி டாக்டர் சுப.சதாசிவம் - வானதி பதிப்பகம், 23 (பழைய எண் 13), தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17, விலை ரூ.100/-

நாம் உணவில் பயன்படுத்தும் பல பொருட்களையே மருந்தாக்கும் வித்தை சித்த மருத்துவத்தின் சிறப்பு. இரைப்பிருமல், வெண்குஷ்டம், புற்று நோய் போன்ற நோய்களை முற்றிலும் குணப்படுத்தும் விதம் பற்றி விவரமாகப் பேசுகிறது இந்த நூல். தமிழக அரசின் விருது பெற்ற இந்நூலாசிரியரின் ஆழ்ந்த தேடலும், அனுபவத் தெளிவும் நூலெங்கும் பளிச்சிடுகின்றன.

ஆகியதும் ஆகாததும்- நிமோஷினி, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41 கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011, விலை ரூ.70/-

எழுத்தின் வடிவம் எப்படியிருந்தாலும், அதன் தாக்கம் ஒன்று இருக்க வேண்டும். இதோ நிமோஷினியின் எழுத்தில் உலா வருகிறது அந்தச் சூடு. கவிதையாகப் பார்த்தாலும் சரி, அனுபவத்தை நினைத்தாலும் சரி; ஒரு நிமிடமாவது யோசனையற்று நிற்கிறது மனம். வார்த்தைகளிலும், அதன் வெளிப்பாட்டிலும் தனித்து ஒளிர்கிறது நூல்.

தமிழ் சினிமாவின் ஒளி ஓவியர்கள்- அறந்தை மணியன் - விகடன் பிரசுரம் - 757 அண்ணாசாலை, சென்னை - 2, விலை. ரூ.45/-

கறுப்பு வெள்ளை காலத்திலேயே தமிழ் ஒளிப்பதிவாளர்கள் பலர் சாதனை செய்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றிப் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களின் புகைப்படங்களோடு, அவர்கள் பணிபுரிந்த திரைப்படங்களின் புகைப் படங்களும் நூலுக்கு மெருகேற்றுகின்றன.


- ஸ்ரீனிவாசன்

ஆசையும் துவேஷமும் இல்லாமல் கூடக் கொடிய காரியம் செய்யப்படுமா என்று சந்தேகம் வரலாம். திருஷ்டாந்தம் சொல்கிறேன்; ஒரு ஜட்ஜ் குற்றவாளியைச் சிட்சிக்கிறபோது அவருக்குச் சொந்த ஆசையோ துவேஷமோ இருக்கிறதா? சிட்சை தருவது கொடுமையாகத் தோன்றலாம். ஆனால் அதுவே லோக க்ஷேமத்துக்காக, அந்தக் குற்றவாளியின் ஆத்ம க்ஷேமத்துக்காகக் கூட, விதிக்கப்படுகிறது. நம் பிள்ளைக்கே பைத்தியம் முற்றிப் போனால் சங்கிலி போட்டுக் கட்டிப் போடுகிறோமே, இது பாபமாகுமா? அவன் நன்மைக்காகவும், அவனால் ஊராருக்குக் கஷ்டம் வரக்கூடாது என்ற பரோபகார எண்ணத்தினாலும் இப்படிக் கட்டிப் போடுகிறோம்.

சாஸ்திரங்கள் நம்மை எல்லாம் இப்படித்தான், 'இது இதைச் செய்' என்கிற விதிகளாலும், 'இது இதைச் செய்யாதே' என்ற நிவேஷதங்களாலும் கட்டிப் போட்டிருக்கின்றன. அவற்றால் நமக்கும் நன்மையே; லோகத்துக்கும் நன்மையே. அந்த சாஸ்திரப் பிரகாரமே நாம் காரியம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையில் அடித்துச் சொல்கிறார். "தஸ்மாத் சாஸ்திரம் பிரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ" என்கிறார். "எது செய்யத்தக்கது, எது செய்யத் தகாதது என்று நிச்சயிப்பதில் சாஸ்திரமே உனக்குப் பிரமாணம்" என்று அழுத்தமாகச் சொல்கிறார். அவனவன் தன் மனம் போனபடி முடிவு பண்ணாமல், சாஸ்திரப்படியே கருமம் செய்ய வேண்டும் என்கிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

பிரமாணம்



அருள்வாக்கு

கணக்கு வாத்தியார் துணை!

கணக்கு பல பேரைப் பயமுறுத்தும் விஷயம். எழுபது வயது தாத்தாக்கள் கூட பத்து வயசில் பார்த்த கணக்கு வாத்தியார் கனவில் வந்து மிரட்ட, அரண்டு போய் விழித்துக்கொள்கிறார்கள். பாரதிக்கு மட்டுமா 'கணக்கு மணக்கு ஆமணக்கு'?

வறட்டுக் கணிதமாக இல்லாமல் வாழ்க்கையை வளமாக்கும் கணக்கு படிக்க வாருங்கள் என்று வரவேற்கிறது அமெரிக்க கணிதக் கழகம். கேட்க நன்றாக இருக்கிறது. ஆனால், படிக்க, புரிந்து கொள்ள கஷ்டமாக இருக்கிறதே கணிதம்? அதற்கும் வழி உண்டு.

கணிதத்தை ஒரு வெற்றுக் கோட்பாடாகப் பார்க்காமல், அதில் இருக்கிற லயத்தைக் கவனியுங்கள் என்கிறார்கள். கர்னாடக இசைக் கருவிகளில் காலப் பிரமாணமும், கணக்கும்தான் பிரதானம். லயத்திலும் தாளத்திலும் அசைவிலும் இருக்கும் கணக்கின் எல்லைகளைக் கொஞ்சம் நீள வைத்து, நவீன அறிவியலான பாலிஹெட்ரல் ஜியாமெட்ரி போன்ற சிக்கலான கணிதக் கோட்பாடுகளை ஆடிப் பாடிச் சொல்லித்தர ஆரம்பித்த சோதனை முயற்சிகள் சூப்பர் சக்சஸ். நாலாம் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வரை ஆடிப் பாடி கணக்கு சொல்லித்தர இந்த முயற்சிகள் தொடர்கின்றன. மாணவர்களின் கணித ஆர்வமும் அதிகரிக்க வாய்ப்பு.

சரி, இப்படிச் சொல்லிக் கொடுத்த கணக்கு எல்லாம் வாழ்க்கையில் எங்கே பயன்படுகிறது? 'ஏ பிளஸ் பி ஹோல் ஸ்கொயர்டு' அல்ஜீப்ராவும், பித்தகோரஸ் தியரமும் எதுக்கு பிரயோஜனம்? குழந்தைகளுக்கு வீட்டுப் பாடம் எழுத ஒத்தாசை செய்வதற்கும் ('போப்பா, உனக்கு மேத்ஸே தெரியலை') மற்றபடி கணக்கு வாத்தியார் உத்தியோகத்துக்குப் போனாலும் மட்டும் தேவைப்படுகிற சங்கதிகள் இல்லையோ இதெல்லாம்? அங்கேதான் தப்புக் கணக்கு போடறீங்க சார். கணக்கு இல்லாமல் ஏது டெக்னாலஜி? முக்கியமாக அனிமேஷன் தொழில்







நுட்பம்.

ஹாலிவுட் படங்களான 'டாய் ஸ்டோரி', 'பக்ஸ் லைஃப்' போன்ற முழு நீள அனிமேஷன் திரைப்படங்கள் வெற்றி பெறக் காரணம், இவற்றில் கற்பனையோடு கூட கணக்கும் சரிவிகிதத்தில் கலந்திருப்பதே. கணக்கு தெரிய வேணும். இல்லாவிட்டால் கார்ட்டூன் தத்ரூபமாக இருக்காது. கார்ட்டூன் சினிமாவில் தத்ரூபம் என்னத்துக்கு?

தேவையாயிருக்கிறதே. பொம்மலாட்ட பொம்மைகளை அசைத்து ஆடவைப்பது போல் நகர்ந்தது பழைய கால கார்ட்டூன். சால்வையைப் போர்த்திக்கொண்டு ஒருத்தர் தெருவில் நடக்கிறதாக அனிமேஷன் செய்தால் காட்சி முடிகிற வரை அந்தச் சால்வை அலுங்காமல் நலுங்காமல் அப்படியே இருக்கும். இதையே நிஜ நடிகரை வைத்து வெளிப்புறக் காட்சியாகப் படமாக்கினால்? காற்றடிக்கும்போது சால்வை அசையும். மடியும். நழுவும். இன்றைய அனிமேஷனில் இந்த இயல்பான அசைவுகளைக் கொண்டு வர வரைகணிதமான ஜியாமெட்ரி பயன்படுகிறது.

கார்ட்டூன் பாத்திரங்கள் அசையவும் நகரவும் கரகரவென்று சுற்றிச் சுழலவும் டிரிக்னாமெட்ரி உபயோகித்துப் போட்ட கணக்குகள் பின்னணியில் உள்ளன. ஒத்த சமன்பாடுகளும் மற்ற பள்ளிக்கூட அல்ஜீப்ராவும் ஸ்பெஷல் எஃபெக்ட் கிராஃபிக்ஸ்களை உருவாக்க உபயோகமாகும். பகல், இரவு, அவுட்டோர், நாலு சுவர்களுக்கு நடுவே நடக்கிற காட்சி என்று படம் எடுக்கும்போது காட்சிக்குத் தகுந்த மாதிரி ஒளியமைக்கக் கல்லூரியில் படித்த கால்குலஸ் நிறையப் பயன்படும்.

ஒரு வினாடி நேரத்தில் இருபத்து நாலில் ஒரு பகுதி நேரம் மட்டும் இடம் பெறும் ஒரு ஃப்ரேம் அளவு காட்சியைப் படம் பிடிக்க கணக்கர்களும் கம்ப்யூட்டர்களுமாகக் குறைந்தது ஆறு மணி நேரமாவது உழைக்க வேண்டியிருந்தது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! இனி வருங்கால வாழ்க்கையைத் துவக்க முதலில், கணக்கு வாத்தியார் துணை என்று போடுவது சரிதான் போலும்!



இரா.முருகன்

சிம்பாலிக் தலைவர்

''எதுக்கு தலைவர் எப் பவும் கையில ஒரு உளி யோட திரியறார்?''

''நான்தான் சொன் னேனே, தலைவர் ஒரு சிந்தனைச் 'சிற்பி'ன்னு!''

- வி.சகிதா முருகன்



''ஆஃபீஸ் விஷயமா எந்தச் சந்தே கமானாலும் என்கிட்ட கேளுங்க!''

''ஒரே ஆள்கிட்ட ரெண்டு தடவை லஞ்சம் வாங்கலாமா சார்?''

- தேவா



''உன் வீட்டுல வரவு செலவு யார் பாக்கறா?''

''வரவை நான் பாக்கறேன்... செலவை சம்சாரம் பாக்கறா!''

- அம்பை தேவா





"அண்டை நாட்டரசன் 'சேனை'யைக் காட்டி மிரட்டுறான் மன்னா!"

""கருணை' காட்டச் சொல்லி அவனுக்கு ஓலை அனுப்புங்கள், தளபதியாரே!"

- பி.ஜி.பி. இசக்கி

"தலைவரோட கார்ல எல்லா இண்டி கேட்டரும் எரியுதே... ஏன்?"

"எப்போ, எந்தப் பக்கம் திரும்புவார்னு யாராலும் சொல்ல முடியாதே..."

- அம்பை தேவா



"கடைக்கு வர்றவங்களோட அட்ரஸ் வாங்கிக்கிட்டு, வந்த டயத்தையும் பஞ்ச் பண்ணச் சொல்றாங்களே, ஏன்...?"

"சீக்கிரமா புடைவை செலக்ட் பண்ணிட்டுப் போற 3 பெண் களுக்குத் தினமும் 'அதிவேக அரசி'ன்னு ஏதோ பரிசு கொடுக்கப் போறாங்களாம்!"

- சீர்காழி வி.ரேவதி



குயிக் செலக்ட் லேடி

அண்டங்காக்கை

மெலட்டூர். இரா.நடராஜன்


முருகேசனின் அன்றைய காலைப் பொழுது வழக்கத்துக்கு மாறாகத்தான் விடிந்தது. அலாரம் கடிகாரம் மாதிரி தினமும் விடியற்காலையில் வந்தெழுப்பும் காகம் இன்று ஏனோ வரவில்லை. மற்ற காக்கைகள் 'கா...கா' என்று கத்தினால் இந்தக் கிழட்டு அண்டங்காக்கை மட்டும் ஒரு மாதிரி 'க்ர்ர்ஹ்...க்ஹ்' என்று பால்கனி கட்டையில் உட்கார்ந்துகொண்டு அவனைப் பார்த்து அக்கறையாய்க் கத்தும். முருகு கிட்டத்தட்ட விழித்துக்கொள்வான்.

இன்று விழிப்பு வந்தபோது, காரம் கலந்த கெட்ட வாடை அவனைச் சுற்றியிருந்தது. தலையைத் தூக்க முடியவில்லை. மண்டைக்குள் தீப்பொறிகள் சிதற... விழித்துக் கொண்டான். சுற்றியிருந்த பகுதிகள் 'அவுட் ஆஃப் ஃபோக்கஸில்' மங்கலாகத் தெரிந்தன. கண்ணுக்குள் ஒரு பிடி உப்பைக் கொட்டிய மாதிரி எரிச்சலாக இருந்தது.



முருகேசனை யாருக்கும் தெரியாது. ஆனால், செந்தமிழ்ச்செல்வன் என்ற புனைபெயரைச் சொன்னதும் தமிழ்த் திரைப்படத்துறை வரலாறு சற்று பத்து வருடங்கள் பின்னோக்கிப் போய் பவ்யமாகத் தன் பக்கங்களைத் திறந்து காட்டும்.

அந்தக் காலம், முருகேசனின் வசந்த காலம். இரண்டே வருடங்களில் மூன்று மெகா ஹிட்டுகள். அதன் பிறகு ஒன்று சுமாராக ஓடி பெயரைக் காப்பாற்றியது. அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து மூன்று படங்கள் ஒரேயடியாக கவிழ்த்துப் போட்டன. அதில் கடைசியாக அவனை ஒரே வாரத்தில் 'ஊத்தி மூடியது' அவனுடைய சொந்தப்படம். கார், வீடு எல்லாம் போனது. செக் மோசடி வழக்குகள் அவனை நிம்மதியற்று ஓடஓட விரட்டின... தலைகீழ் மாற்றம். யாருமற்ற தனிமையில் குடி அவனைக் கொண்டாடத் துவங்கியது.



சினிமா பார்த்து வெளியே வந்ததும், பிரக்ஞையின்றி நழுவ விடப்படும் சினிமா டிக்கெட் மாதிரி, எழுச்சியைத் தந்த அதே வேகத்தில், வீழ்ச்சியையும் கொடுத்தது தமிழ்த் திரைப் பட உலகம்.

சட்டைப் பையில் இருக்கும் பன்னிரண்டு ரூபாய் காலை டிஃபனுக்குப் போதும். அப்புறம்? யோசிக்க யோசிக்க வெறுமைதான் மிஞ்சியது.

அனிதா அவனை விட்டுப் பிரிந்து போய் ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது.



இரண்டு தெரு தாண்டிதான் அனிதாவின் அப்பா வீடு இருக்கிறது. வீட்டை நெருங்கியபோது வாசலில் இரண்டு காகங்களைப் பார்த்தான். அதில் அவன் காகம் இல்லை.



அனிதா நைட்டியுடன் காலை நாளிதழின் சினிமாப் பக்கங்களில் மூழ்கியிருந்தாள். அவனும் அப்பனைப் போலவே நிமிர்ந்தாள். வெறுப்புடன் விடுவிடுவென போய், தன் கைப்பையைத் திறந்து நூறு ரூபாய் தாளை அருகில் இருந்த டேபிள் மீது வைத்தாள்.

''அனிதா... இதுக்குப் பதிலா என் மேல காறித் துப்பியிருக்கலாம்.''

''மானம், மரியாதையெல்லாம் போன உனக்கு காசுதான முக்கியம். எடுத்துக்கிட்டு போ.''

''எல்லாரும் கைவிட்டுட்டாங்க. நீயும் இப்படிச் செஞ்சா எப்படி?''

''மொதல்ல உன்னை மாத்திக்க முயற்சி பண்ணு. விழுந்தவன் வெறியோடு எழுந்துக்கணும். அடுத்து அடுத்துன்னு அலை பாயணும். புதுசா கத்துக்கணும். முதல்ல, தோத்தவன் குடிக்கக் கூடாது. குடிய விடு. எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடி ஒரு ஸ்டோரி டிஸ்கஷனுக்கு சான்ஸ் வாங்கிக் கொடுத்தேனே? என்ன செஞ்சே? என் மானம் போச்சு.''

''பிச்சை போடற கணக்கா என்கிட்ட நடந்துக்கிட்டாங்க. குப்பையா படம் எடுக்கறாங்க.''

''காண்டக்ட் சர்டிஃபிகேட் கொடுக்க உன்னை அனுப்பல. சொல்லச் சொல்லச் கேட்காம ஆடினதோட பலனை இப்ப அனுபவிக்கிற. இன்னிக்கு சினிமா எவ்வளவோ மாறிடுச்சு. உன்னோட ஆகாசத்தில் பறக்கறத விட்டுட்டு,

தரையில நடக்கப் பாரு. இப்ப இங்கிருந்து போ.'' அதற்குள் அவள் அப்பா செந்தமிழைத் தரதரவென கையைப்பிடித்து வெளியே இழுத்து நூறு ரூபாய் தாளைச் சட்டைப் பையில் வலுக்கட்டாயமாகச் சொருகினார்.

''இதான் கடைசி. இனிமே இந்தப் பக்கம் வராத. எங்களை நிம்மதியா இருக்கவுடு.''

கிழவனை எதிர்த்து நிற்க வலுவின்றி கையேந்திபவன் ஓட்டலுக்குப் போனால், சாப்பிடுவதற்கு முன்னாலேயே காசு கொடுத்தால்தான் சாப்பாடு என்று தெளிவாகச் சொல்லி, தான் கொடுத்த நூறு ரூபாயை, பழைய கடனுக்கு வைத்து கொண்டான் ஹோட்டல் முதலாளி.

இன்று மதிய சாப்பாட்டுக்கு என்ன செய்வது? கிளம்பினான்.

அந்த டீ.வி சீரியல் தயாரிப்பு அலுவலகம் வெறிச்சோடியிருந்தது. வாட்ச்மேன்கூட செந்தமிழை மதிக்கவில்லை. இரண்டு மணிநேரம் கழித்து சீரியல் தயாரிப்பாளர் வந்தார்.

''என்னய்யா வேணும்? ஏன் தொந்தரவு பண்றே?'' எடுத்த எடுப்பிலேயே எரிந்து விழுந்தார்.

''வெக்கத்தை விட்டுக் கேக்கறேன். அடுத்த வேளை சாப்பாட்டுக்கு வழியில்லாம இருக்கேன். ஏதாவது கொஞ்சமாவது கொடுங்க.''

திடீரென மனசு மாறி, இரண்டு ஐநூறு ரூபாய் தாள்களை அவன் சட்டைப் பையில் திணித்தார்.

மதியம் சாப்பிடாதது வயிற்றைச் சுண்டி இழுத்தது. ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த குவாட்டர், பேண்ட் பாக்கெட்டுக்குள் திமிறிக்கொண்டிருந்தது. தோள்களின் மீது இரண்டு கைகள் விழுந்தன. திரும்பியதில்...

''என்ன முருகு, ஆயிரம் ரூபாயை அப்படியே வலிச்சுக்கினு போயிடலாம்னு பார்க்கறியா? எங்களுக்கு அதிலே பங்கு வேணாம்?''

''வேணாம் சேகரு. நான் ரொம்ப நொந்திருக்கேன். உன் கணக்கைச் சீக்கிரம் செட்டில் பண்ணிடறேன்.''



முதன்முறையாக அவன் தேடிய, அவன் மீது அக்கறைகொண்ட அண்டங்காக்கை அவனுக்குள்ளே இருப்பதை உணர்ந்தான்

செந்தமிழ் சொல்வதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாமல், சட்டைப் பையிலிருந்து அத்தனை பணத்தையும் காலி செய்தான். திமிறிய செந்தமிழ் கீழே விழுந்தான். சுதாரித்து எழுந்த செந்தமிழ், இன்று ஒரு நாள் மட்டும் தான் பட்ட அவமானங்களைத் தொகுத்துப் பார்த்தான். போதையில்லா புத்தி அவனுள் இருந்த கலைஞனைக் கொஞ்சம் எழுப்பி இருந்தது.

கோடிக்கணக்கான பட்ஜெட்டில் படங்களை இயக்கிய செந்தமிழ்செல்வன் கொஞ்ச நேரம் அப்படியே நின்றிருந்தான். தேம்பித் தேம்பி அழுதான். தீர்மானமாய் குவார்ட்டர் பாட்டிலை ஓங்கித் தரையில் வீசினான். 'க்ர்ர்ஹ்... க்ஹ்' என்ற ஓசையே வெளிப்பட்டது.

அவனை எழுப்பும் காகம் எங்குமில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். முதல் முறையாக அவன் தேடிய, அவன் மீது அக்கறை கொண்ட அண்டங்காக்கை, அவனுக்குள்ளே இருப்பதை உணர்ந்தான். ●

கட்சிகள்

கோசின்ரா



கட்சிகள்
நாட்டைக் கேலி செய்கின்றன.
மதத்தின் கத்தியால் கீறி
ஒரு கட்சியின் பெயர்
இரத்தத்தால் எழுதப்படுகிறது.

ரூசோவால் பேசப்பட்ட
ஜனநாயகத்தின் முதுகில்
திரைப்பட சுவரொட்டிகள்.

தேர்தலால்
ஒரு தேசம்
கலவர பூமியாவதைத் தடுக்க முடியவில்லை.

தேர்தலால்
மனித நேயம் ஆவியாகிறது.
தேர்தலால்
கறுப்புப் பணம் இன்னொரு முகாமைக்
காலி செய்கிறது.

பதவி கிடைக்காத
கருமியொருவன்
தன் ஆசைகளின் வண்ணத்தில்
புதிய கட்சிக் கொடியை உருவாக்குகிறான்.

தியேட்டரில் திரைச்சீலை கிழித்து
கதாநாயகனொருவன்
வெளிவருகிறான் ஆக்கிரஹத்தோடு
தன் கட்சியின் பெயரைப் பதிவு செய்ய.

தீக்குளிக்கும் மனிதர்கள்
தம் கட்சியின் பலிபீடத்துக்கு
குடும்பத்தினரை இழுத்து வருகிறார்கள்.

சுனாமியால்
இழுத்துச் செல்லப்பட்டவர்களுக்காக
வெள்ளத்தில்
அடித்துச் செல்லப்பட்டவர்களுக்காக
பட்டினியால்
செத்துப் போனவர்களுக்காக
பூகம்பத்தால்
புதைந்து போனவர்களுக்காக
கட்சிக் கொடிகள்
ஒருநாளும்
அரைக்கம்பத்தில் பறந்ததில்லை.

எனது நாட்டின் தேசியக் கொடி
ஒரு கட்சிக் கொடியிடம்
தோற்றுப் போவதை
நான் பார்க்க விரும்பவில்லை.

சதா பயணித்துக்கொண்டே இருப்பதுதான் சினிமா நட்சத்திரங்களின் வாழ்க்கை. 'படிக்காதவன்' படத்துக்காக அமெரிக்காவிலிருந்து திரும்பிய தமனாவின் பயணக் குறிப்புகளில் சில:

இதுவரை விடுமுறைச் சுற்றுலான்னு எங்கேயுமே போனது கிடையாது. 'வீடு விட்டா பள்ளி, பள்ளி விட்டா நடிப்புப் பயிற்சி'ன்னே வாழ்க்கை நகர்ந்துடுச்சு. ஆனா இன்னைக்கு சினிமா தயவால நாடு நாடாச் சுத்தறேன். ஆனாலும் அதை இன்பச் சுற்றுலான்னு சொல்ல முடியாது.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பும்போது நடுவுல விமானம் பிரான்சுல நின்னது. அவ்வளவுதான். ஏதோ பிரச்னைனு ஒன்றரை நாள் வண்டியை எடுக்கவேயில்லை. 'எப்படா வீடு போய் சேருவோம்'னு இருந்த எனக்கு, பிரான்சுல கட்டாயமா தங்க வைக்கப்பட்ட அந்த ஒன்றரை நாளும், நரகமா இருந்தது. நான் இருந்த இடத்தைவிட்டு எங்கேயும் நகரலை.

விலை உயர்ந்த பொருள்களையெல்லாம் நான் எப்பவும் கையிலேயே வெச்சுப்பேன்.

விமானப் பயணத்துல இருக்கிற ஒரு பெரிய தொல்லையே, எதுவும் பண்ண முடியாது என்பதுதான். எவ்வளவு நேரமானாலும் உட்காந்துட்டேதான் இருக்கணும். இது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஆனாலும் வேற வழியில்லையே.

பெரிய பெரிய ஹோட்டல்கள்ல நான் தங்கினாலும், சென்னையில் தங்கும்போது மட்டும்தான் வீட்டுல இருக்கிற உணர்வு கிடைக்கும்.

மோசமான ஹோட்டலிலும் ஊரிலும் கூட நடிகைங்கிறதால என் மேல எல்லோரும் அதீத அக்கறை எடுத்து கவனிச்சிப்பாங்க. பார்த்துப் பார்த்து எதுவும் பண்ணும்போது, யாரையும் என்னால குறை சொல்ல முடியல.

– செந்தில்



தேவதையின்
பயணக் குறிப்புகள்!



யார் தெரியுமா? நான்தான்!

சிரஞ்சீவி...க்கு ஆசீர்வாதம். உன்னுடைய கடிதம் 'பெற்றேன்'.

பத்திரிகைகளுக்கு எழுதுவது பற்றிப் பொதுவாக யோசனை சொல்லும்படி கேட்டிருந்தாயானால் எனக்கு மிகவும் சௌகரியமாயிருந்திருக்கும். ஆனால், குறிப்பாகச் சில கேள்விகள் கேட்டிருப்பது கஷ்டம் அளிக்கிறது. உதாரணமாக,

'பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படியாக எழுதுவதற்கு வேண்டிய யோக்கியதை என்னிடம் இருக்கிறதா?' என்று கேட்டிருக்கிறாய். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று யார் கண்டது? உண்மையில், யோக்கியதையைப் பற்றிக் கவலையே வேண்டியதில்லை. எழுத வேண்டுமென்னும் ஆவல் உனக்கு இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அந்த ஆவலை அடக்கிக்கொள்ள ஆனமட்டும் முயற்சி செய்து பார். அப்படியும் அது கேளாமல் பீறிக்கொண்டு கிளம்பினால் பேனாவை எடுத்துக்கொள். அப்புறம் உன் தலையெழுத்துப் போல் நடக்கிறது!

'என்ன எழுதுவது?' என்று அடுத்தாற்போல் கேட்டிருக்கிறாய். உண்மையில், மேற்படி கேள்விக்கு இன்றைய தினம் நான் விடை கண்டுபிடித்திருந்தால், உனக்கு இந்தக் கடிதம் எழுதவே ஆரம்பித்திருக்க மாட்டேன்.

ஆனால், குறிப்பான, திட்டமான பதில் கண்டுபிடிப்பதில்தான் மேற்சொன்னவிதம் கஷ்டமே தவிர, பொதுவாகப் பதில் சொல்வதில் கஷ்டமில்லை. 'என்ன எழுதுவது?' ஏன்! எது வேண்டுமானாலும் எழுதலாம். மூட்டைப் பூச்சியிலிருந்து முஸோலினிப் பெரியார் வரையில், ஊர்வம்பிலிருந்து உலகப் பொருளாதார நிலைமை வரையில், தூக்கணாங் குருவியிலிருந்து துருவ நக்ஷத்திரம் வரையில் சின்னது பெரியது எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். எல்லாம் எழுதும் முறையில்தான் இருக்கிறது.



'எழுதி முடித்த பிறகு, நன்றாயிருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிப்பது எப்படி?':

எழுதியதை உடனே பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிடு. ஒரு வாரமோ, ஒரு மாதமோ, ஒரு வருஷமோ எவ்வளவு காலம் உன்னால் பொறுத்திருக்க முடியுமோ, அவ்வளவு நாள் பொறுத்திருந்து, பிறகு அதை எடுத்து நீயே படித்துப் பார். எவ்வளவுக்கெவ்வளவு அதிக நாள் கழித்து எடுத்துப் பார்க்கிறாயோ அவ்வளவுக்கு, 'நன்றாய் இருக்கிறது' அல்லது 'இல்லை' என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்வாய்.

வைத்திருந்து பார்ப்பதற்கு வேண்டிய பொறுமை உனக்கு இல்லா

அமரர் கல்கி

விட்டால் இன்னொரு வழி இருக்கிறது: நீ எழுதியதை உன் மனைவியிடம் வாசித்துக் காட்டு. ('இவளுக்கு என்ன தெரியும்?' என்று அலட்சியமாய் நினைக்க வேண்டாம். இவளைப் போன்ற ஜனங் கள்தான் நீ எழுதியதைப் பத்திரிகையில் படித்து மகிழவோ, துக்கப்படவோ போகிறார்கள்.) உன் மனைவி, 'நன்றா யில்லை' என்று சொன்னால், எழுதியதைச் சங்கோசப்படாமல் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடு. உன் வீட்டுக் குப்பைத் தொட்டியைவிடப் பத்திரிகால யத்தின் குப்பைத் தொட்டி எந்த விஷ யத்தில் ஒசத்தி என்று கேட்கிறேன். ஒன்றிலுமில்லை.

உன் மனைவி 'நன்றாயிருக்கிறது' என்று சொல்லிவிட்டால், இரண்டில் ஒன்று நிச்சயமாகக் கொள்ளலாம்: ஒன்று, கட்டுரை உண்மையில் நன்றாயிருக்க வேண்டும்; அல்லது உன்னிடம் அவளுக்குள்ள காதலின் புதுமை



இன்னும் குறையாமல் இருக்க வேண்டும்.

'**மு**தலில் கதை எழுதலாமா? கட்டுரை எழுதலாமா?': கதை எழுதுவதை விடக் கட்டுரை எழுதுவதுதான் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனெனில், கதை எழுதுவது கஷ்டம். கதை எழுதுவதற்கு முதலாவது கதை ஒன்று வேண்டும். அது கிடைப்பது இலேசல்ல. பிறகு அதை வைத்துக்கொண்டு சுவாரஸ்ய மாக எழுத வேண்டும். கொஞ்சம் காது, மூக்கு வைக்கலாமே தவிர, கதையின் மத்திய சம்பவத்தைவிட்டு அதிக தூரம் போக முடியாது. இன்னொரு பெரிய தொந்தரவு இருக்கிறது. கதை என்றால், 'நன்றாயிருக்கிறது, இல்லை' என்பதாகச் சுலபமாய்ப் பத்திரிகாசிரியர் தீர்மானித்து விடுவார். பத்திரிகாசிரியர் மீது பழிவாங் கும் விருப்பம் உனக்கிருந்தால் கட்டுரை எழுதுவதுதான் நல்லது. அது சுலபமுங் கூட.

'**பு**னை பெயர் அவசியமா? சொந்தப் பெயரே போட்டுக்கொள்ளலாமா?':

சாதாரணமாய், உன்னைப் போல் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பிக்கிற வர்கள் எல்லோரும் முதலில் புனைபெய ருடன்தான் ஆரம்பிக்கிறார்கள். ஏன்? முதலாவது அவர்களுக்குத் தங்களிடம் நம்பிக்கையில்லை. எழுதியது நன்றா யிருக்குமோ இல்லையோ என்று சந்தேகம். இரண்டாவது, பத்திரிகாசிரியர்களிடம் நம்பிக்கையில்லை. கட்டுரை நன்றாயில்லா திருந்த போதிலும் அவர்கள் இடத்தை நிரப்புவதற்காக வெளியிட்டுவிடுவார் களோ என்ற பயம். மூன்றாவது, தங்களைச் சுற்றியுள்ள பந்துக்கள், சிநேகிதர்களிடம் நம்பிக்கையில்லை. சொந்தப் பெயருடன் கட்டுரை வந்துவிட்டால், அவர்கள் அசூயை நோக்குடனே அதைப் பார்ப் பார்கள் என்றும், நன்றாயிருந்தாலும் சொல்லமாட்டார்களென்றும் யோசனை.

ஆனால்,. புனைபெயரில் மட்டும் தொல்லைகள் இல்லையென்கிறாயா? நிச்சயமாய் உண்டு. உன் கட்டுரை புனை பெயருடன் வெளியாகிவிடுகிறதென்று வைத்துக்கொள். அதைப் பார்த்தவுடன் உன் மனம் துடிதுடிக்கிறது. அந்தச் சந் தோஷத்தை எல்லாரிடமும் சொல்ல வேண்டுமென்று தவிக்கிறாய். முதலில் உன் சிநேகிதனிடம் அவசரமாய்ச் சென்று, ''ராமு, விகடனில் 'முந்திரிக்கொட்டை' எழுதியிருக்கிற கட்டுரையைப் படித் தாயா?'' என்று கேட்கிறாய். ''ஆமாண்டா, போடா! எவன் எவனோ எழுதுகிறதை யெல்லாம் யார் படித்துக்கொண்டிருக் கிறது?'' என்று அவன் சொல்கிறான். அப்போது உனக்கு எப்படி இருக்கும்? அவனைப் படிக்கச் செய்ய வேண்டு மானால், ''முந்திரிக்கொட்டை யார் தெரி



''ரிடையர் ஆனப்புறம் பென்ஷன் மாமூல் கேட்கறீங்களே... நியாயமா ஏட்டையா?''

- சாயம் வெ.ராஜாராமன்

யுமா? நான்தான்!'' என்று தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உனக்குத் தெரிந்தவர்கள் கட்டுரையைப் படித்துப் பாராட்டாவிட்டால், அதை எழுதியதுதான் என்னத்துக்கு?

இதைவிட நெஞ்சைப் பிளக்கும்படியான இன்னொரு நிலைமை ஏற்படக் கூடும். வெளியில் சிநேகிதர்கள் எல்லாரிடமும் தெரிவித்துவிட்டு வீட்டுக்கு வருகிறாய். உனது ஸஹதர்மிணி குதூகலத்துடன் ஓடி வந்து, ''இன்று விகடனில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ரொம்ப நன்றாயிருக்கிறது'' என்று சொல்கிறாள். உன் நெஞ்சு துடிக்கிறது; ''யார் எழுதின கட்டுரை?'' என்று கேட்கிறாய். ''வேடிக்கையான பெயர்! 'முந்திரிக்கொட்டை' என்று ஒருவர் எழுதியிருக்கிறார்!'' என்கிறாள். உடனே பரவசமடைந்து போகிறாய். சிரித்துக்கொண்டே, ''அதை யார் எழுதினது? சொல் பார்ப்போம்'' என்கிறாய். எவ்வளவோ சாடைமாடையாய்க் குறிப்பிட்டுக் காட்டியும் பிரயோசனமில்லை. கடைசியாக, ''நான்தான்'' என்று தெரிவித்துக்கொள்கிறாய். ''ஆமாம்! நீங்கள் எழுதிப் புரட்டலையா?'' என்கிறாள் உன் மனைவி. வாழ்க்கையில் இதைவிடச் சோகரஸம் பொருந்திய கட்டம் வேறு என்ன இருக்க முடியும்!

பத்திரிகாசிரியரிடமிருந்து உனக்கு வந்த கடிதத்தை எடுத்துக் காட்டி, நீதான் எழுதியது என்று நிரூபித்துவிடுகிறாய். பலன் என்ன? அவள் சந்தோஷப்படுகிறாளா? நீ எதிர்பார்த்த பரிசையளிக்கிறாளா? ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக அவள் முகத்தில் கோபம் கொதிக்கிறது. அது துயரமாக மாறுகிறது. கண்ணில் நீர் ததும்புகிறது. கலகலவென்று பொழிகிறது. விம்மி விம்மி அழத் தொடங்குகிறாள்.

அரை மணி நேரம் அவளைச் சமாதானம் செய்து அழுகை ஒருவாறு நின்ற பிறகு, ''முந்திரிக்கொட்டை என்று ஏன் பெயர் வைத்துக்கொண்டீர்கள்?'' என்கிறாள். உன்னுடைய தவறு என்னவென்று அப்போதுதான் உனக்குப் புலனாகிறது. அழகான சொந்தப் பெயரைப் போட்டுக் கொள்ளாமல் போனோமே என்று அப்போது பச்சாதாபப்படுவதில் என்ன பயன்?

'பொல்லாத பத்திரிகாசிரியர்கள் கட்டுரைகளைப் பிரசுரிக்காவிட்டால் என்ன செய்வது?'

இரண்டு முறைகளில் ஒன்றைக் கையாளலாம்:

1. நீயே சொந்தப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து விடு. அல்லது, 2. 'பத்திரிகைகளுக்கு எழுதுவதில் வெற்றி பெறுவது எப்படி?' என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதிப் பிரசுரித்துவிடு.

- ஆனந்த விகடன், 15.1.1933

''ராசிபலனைப் பார்த்ததும் இடிஞ்சுபோய் உட்கார்ந்துட்டீங்களே, ஏன்?''

'' 'உங்கள் மீது கோபம் கொண்டவர்கள் மனம் மாறுவார்கள்'னு போட்டிருக்கு!''

''அதனால் என்ன?''

''கோவிச்சுக்கிட்டுப் போன என் மனைவி திரும்பி வந்துடுவாளே!''

- ச.ஆ.கேசவன்





அனாமிகா காதலிகளும்

மைக்கேல் ஜாக்சனையும் அவரது சகோதரர்களையும் அழைத்து அடுத்த மாதம் கலிஃபோர்னியாவில் விருது கொடுக்கப் போகிறார்கள். மார்லன், ஜாக்கி, டிட்டோ, ஜெர்மைன் என்று ஜாக்சனின் நான்கு உடன்பிறப்புகளும் உடனே ஒத்துக் கொண்டு விட்டார்கள். ஜாக்சன் மட்டும் வருவேனா மாட்டேனா என்று இன்னமும் வாய் திறக்கவில்லை.



சிறு வயதிலேயே தனது சகோதரர்களுடன் சேர்ந்து அவர் ஆரம்பித்த 'ஜாக்சன் ஃபைவ்' பாப் இசைக்குழு பிரபலமாகிவிட்டது. உடனே அண்ணன் தம்பிகளைக் கழட்டிவிட்டு, தனியாகப் பாட ஆரம்பித்துவிட்டார்.

அண்ணன் என்னடா, தம்பி என்னடா? அவசரமான உலகத்திலே...

பாவலனோ? காதலனோ?

காதல் கனிரசம் சொட்டச் சொட்ட எழுதி காளையரையும் கன்னியரையும் கவர்ந்தவர் ஆங்கிலக் கவிஞர் பைரன்.

காதலித்தால் கவிதையெழுவது எல்லோருக்குமே சகஜம். கவிஞனாகவே வாழ்ந்தால்?

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் கேரின் த்ரோஸ்பி சமீபத்தில் பைரனின் சேகரிப்பில் இருந்த சில கடிதங்களைக் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார். அத்தனையும் காதல் கடிதங்கள். பெயர் குறிப்பிடாமல் எழுதியவைதான் பெரும்பாலும். படித்துவிட்டு உடனடியாக கிழித்துவிடும்படி பல கடிதங்கள் கேட்டுக் கொண்டாலும், பைரன் ஏனோ அப்படி அவசரப்பட்டு எதையும் செய்துவிடவில்லை.

மொத்தக் கடிதங்களையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்.

கறுப்பாகும் அமெரிக்கா...

அமெரிக்காவில் நிறவெறி தலைவிரித்து ஆடியதெல்லாம் ஒரு காலம். இனிவரும் காலத்தில் கறுப்பின் ராஜ்ஜியம்




தான். சமீபத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அமெரிக்காவில் வெள்ளையர்களின் எண்ணிக்கை விரைவில் குறைந்து விடுமென்று கணித்திருக்கிறார்கள். கறுப்பர்களின் பிறப்பு விகிதம் அதிகரிப்பும், வெளிநாட்டிலிருந்து சென்று தங்கியவர்களின் எண்ணிக்கை உயர்வும் முக்கியக் காரணங்கள்.

இன்று அமெரிக்காவின் சராசரி மக்கள் தொகை 305 மில்லியன். 2050ல் அது 439 மில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது அமெரிக்காவில் குடியுரிமைபெற்று வாழும் ஆசிய நாட்டினரின் எண்ணிக்கை 16 மில்லியன்.

அமெரிக்கா ஜிந்தாபாத்...

மூச்சா தானம்

சந்திரனில் உள்ள நாசாவின் விண்வெளி ஆய்வு நிலையத்தில் ஒரு டாய்லெட் கட்ட ஏற்பாடாகி வருகிறது. அதற்காக டெக்ஸாஸில் உள்ள ஜான்சன் ஸ்பேஸ் சென்டரில் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.



அசுத்தமாகும் நிலவும்



பூமியிலிருந்து மனித சிறுநீரை நிலவுக்கு அனுப்பி ஒத்திகை பார்க்கப் போகிறார்களாம். 'ஓரியன் ஸ்பேஸ் கேப்ஸ்யூல்' என்ற இந்தப் புது ஐடியாவுக்கு, தினசரி 8 காலன் அளவு சிறுநீர் தேவைப்படுகிறதாம். நாசா ஊழியர்களுக்கே முன்னுரிமை. ஒரு மணி நேரத்துக்குள் ப்ரெஷ்ஷாக கொடுக்க வேண்டும். வீட்டிலேயே வந்து சேகரித்துக் கொள்வோம். அதிகமாக தண்ணீர் குடிக்கக் கூடாது.'

இப்படி ஏகப்பட்ட கண்டிஷன் போட்டிருக்கிறது நாசா.

அவசியம்தான். மாதக் கணக்கில் தங்கி ஆராய்ச்சி செய்வதால் நிலவு சுத்தம் கெடக் கூடாது அல்லவா?

- ஸாந்த்

நடக்குமென்பார்;



மேஷம்: பேச்சு வல்லமை கொண்ட மேஷ ராசிக்காரர்களே... வேலையில் மாற்றம் வரப்போகுது. வீட்டைக்கூட மாற்றப்போறீங்க. நண்பர்களைப் பிரியப் போறீங்க. காதல் கசக்கும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். கடன் தொல்லைகள் கட்டுக்குள்ளே இருக்கும். ராகு / கேது / குரு வழிபாடு தீமையைக் குறைக்கும்.

ரிஷபம்: நட்புக்குப் பெயர் போன ரிஷப ராசிக்காரர்களே... உங்கள் 'வாக்கு' மேன்மையடையப் போகுது. புண்ணிய ஸ்தலம் சென்றுவரப் போறீங்க. திருமணப் பேச்சு கைகூடப் போகுது. நண்பரை விட்டுப் பிரியப்போறீங்க. புதிய தொழில் முயற்சியில இறங்கப் போறீங்க. சனி வழிபாடு செய்து வர நன்மை பெருகும்.

மிதுனம்: ஞானத்தில் சிறந்த மிதுன ராசிக்காரர்களே... வெளி நாடு போக அழைப்பு வரும். இல்லற வாழ்க்கையில அடிக்கடி சண்டை சச்சரவுங்க வரும். தேவையில்லாம வாக்குவாதம் செய்யாதீங்க. உடம்பைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்க. ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நன்மை உண்டாகும்.

கடகம்: தெளிந்த சிந்தனை கொண்ட கடக ராசிக்காரர்களே... மன உளைச்சல் தீரும். பணக்கஷ்டம் இருக்காது. குடும்பத்துல பிரச்னைகள் தீரும். உத்தியோகத்துல இடமாற்றம் உண்டு. வியாபாரத்துல நல்ல ஏற்றம் உண்டுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மையை அதிகமாக்குமுங்க.



சிம்மம்: பொறுமை நிரம்பிய சிம்ம ராசிக்காரர்களே... சுப காரியங்கள் நீங்கள் நினைத்தபடி நடக்கப்போகுது. பணக்கஷ்டம் இருக்காது. பாக்கிகள் வசூலாகும். உல்லாசப் பயணம் போவீங்க. உடல், மனம் நல்ல நிலையில் இருக்கும். சனி வழிபாடு இன்னும் நன்மையை

நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

24.8.2008 முதல் 30.8.2008 வரை

அதிகப்படுத்தும்.

கன்னி: கஷ்டத்துக்குக் கலங்காத கன்னி ராசிக்காரர்களே... உங்களுக்கு இட மாற்றம் ஏற்படப் போகுது. வேலைப் பளு அதிகரிக்கும். அதே நேரத்துல பணக் கஷ்டம் இருக்காது. நண்பர் வழியில பெரிய நன்மையை அடைவீங்க. செலவுகளைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வது அவசியம். ராகு / கேது / சனி வழிபாடு நன்மையைத் தரும்.

துலாம்: பழகுவதற்கு இனிய துலாம் ராசிக்காரர்களே... வெளியூர் பயணம்

அவார்ட் யோகமும் வசூல் யோகமும் என் 'மர்ம யோகி'க்கு கிடைக்குமா ஸார்?

போகப்போறீங்க. கணவன் - மனைவி உறவுகள் நல்ல நிலையில் இருக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு. வியாபாரத்தில் சாதிப்பீங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையை அதிகரிக்கும்.

விருச்சிகம்: திறமைக்குப் பெயர் போன விருச்சிக ராசிக்காரர்களே... இந்த வாரம் முழுதும் கோபம் இல்லாத மனித ராக இருக்கப் போறீங்க. புண்ணிய ஸ்த லம் போவீங்க. குடும்பத்துல இருந்த வாக்குவாதங்கள் குறையும். சுபகாரி யங்கள் நடந்தேறுமுங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையைத் தருமுங்க.

தனுசு: அன்புக்கு அடிமையான தனுசு ராசிக்காரர்களே... சுபகாரியங்கள் தடை யில்லாம நடக்கப் போகுதுங்க. தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கூட்டாளிங்க விலகி ஓடுவாங்க. வீடு, மனைங்க வாங்க நல்ல நேரம். யாரிடமும் வாக்குவாதம் செய் யாதீங்க. கல்வி ஞானத்துல பேர் வாங்குவீங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையை அதிக மாக்கும்.

மகரம்: தைரியமான மகர ராசிக்காரர்களே... உங்கள் மனக் குழப்பம் தீர்ந்துடுமுங்க. பணக் கஷ்டம் இருக்காது. எதிரிங்க தொல்லை தீருமுங்க. உங்க வார்த்தைக்குப் 'பவர்' கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டுங்க. ராகு / கேது / சனி வழிபாடு சங் கடங்களைத் தீர்க்கும்.

கும்பம்: போராட்டக் குணம் நிறைந்த கும்ப ராசிக்காரர்களே... வீடு / மனை வாங்க சூப்பரான நேரம். எதிரிகள் தொல்லை இனி இருக்காதுங்க. வியாபாரத்துல நல்ல லாபம் கொட்டும். தொழில இன்னும் விருத்தி பண்ணப் போறீங்க. குடும் பத்துல சுப காரியப் பேச்சு எழும். நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும்.

மீனம் : தளராத மனம் கொண்ட மீன ராசிக்காரர்களே... பூர்வீகச் சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். திடீர் பிரபலம் ஆவீங்க. உடல் ஆரோக்கியம் நல்லா இருக்கும். வியாபாரம் சூடுபிடிக்கும். கடன் தொல்லை கள் தீரும். தொலை தூரத்தி லிருந்து நல்ல செய்தி வரும்.













அக்கம் பக்கம்



தமிழ்நாட்டைவிட ஆந்திராவில் மின்சாரத் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது. தற்போதைய நிலவரப்படி, உற்பத்தி மற்றும் சப்ளைக்கும் தேவைக்கும் இடையிலான முறை பாடு, 2,200 மெகாவாட் அளவுக்கு உள்ளது என்கிறார்கள். கொதங்குடத்தில் மின் உற்பத்தி நிலையத்தில் இரண்டு யூனிட்களும், ராமகுண்டத்தில் ஒரு யூனிட்டும் பராமரிப்பு பணிகளுக்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கொதங்குடத்தில் இன்னும் இரண்டு யூனிட்களை நிலக்கரி பற்றாக்குறை என்று சொல்லி மூடிவிட்டார்கள். அரசாங்கமே

ஆஸ்பெஸ்டாஸ் கூரை வகுப்பில்

ஐ.ஐ.டி



பொதுமக்களை பல்புகள், ஃபேன்கள், ஏர் கண்டிஷன்கள், வாட்டர் ஹீட்டர்கள் போன்ற மின்சாதனங்களைப் பயன்படுத்தாமல் மின்சாரத்தைச் சேமிக்கும்படி அறிவுறுத்தி இருக்கிறது.

ஆந்திராவில் கடந்த முறை சட்டமன்றத் தேர்தல் நடந்தபோது, காங்கிரஸ் கட்சியுடன் தெலுங்கானாவுக்காகப் போராடும் தெலுங்கானா ராஷ்டிர சமிதி கூட்டணி சேர, காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. ஆனால், தெலுங்கானா விஷயத்தில் காங்கிரஸ் அக்கறை காட்டாததால் கடுப்படைந்த டி.ஆர்.எஸ். கட்சியினர் காங்கிரசை இப்போது எதிர்க்கிறார்கள். தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்த சந்திரபாபு நாயுடு, இப்போது டி.ஆர்.

ஆந்திரா

எஸ்.ஐத் தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறார். அது மட்டுமா? காங்கிரஸ் அல்லாத சி.பி.ஐ., சி.பி.எம்., பி.எஸ்.பி. என்று எல்லோரையும் வளைத்துப் போட்டு ஒரு மெகா கூட்டணியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.



ஆந்திராவில் புதிதாக ஐ.ஐ.டி. ஆரம்பித்திருப்பது பலருக்கும் சந்தோஷம். ஆனால், மாணவர்களுக்கோ பயங்கர ஷாக். திட்டப்படி புதிய ஐ.ஐ.டி. மேடக் நகரில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐ.ஐ.டி., ஹைதராபாத்தில் ராணுவத் தளவாட தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பள்ளிகளில்தான் இயங்குகிறது. ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த வகுப்பறைகள், பள்ளிக்கூடத்தின் பரிசோதனைகூடம், பள்ளிக்கூடத்தில் மாற்றம் செய்து அமைக்கப்பட்ட ஹாஸ்டல் என்று இருப்பது மாணவர்களை ரொம்பவே அப்செட் ஆக்கிவிட்டது.

ஆந்திர முதலமைச்சர் டாக்டர் ராஜசேகர ரெட்டியின் உத்தரவின் பேரில், மாநில போக்குவரத்துத் துறை தனியார் பஸ்கள் விஷயத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரிய பஸ் முதலாளி ஒருவர், ஹைதராபாத் ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்னால் பெரிய தர்ணா நடத்தினார். ஆனால் ரெட்டிகாரு அசரவில்லை. கடுமையான நடவடிக்கைகளைத் தொடரும்படியும், யாருக்கும் அசைந்துகொடுக்க வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்குச் சொல்லிவிட்டார். தர்ணாவில் ஈடுபட்ட பஸ் முதலாளி, ஆந்திர மந்திரி ஒருவரின் சகோதரர். அந்த அமைச்சரும், நடிகர் சிரஞ்சீவியும் ஒரே ஜாதி என்பதால் அவர் விரைவில் சிரஞ்சீவியுடன் சேருவார் என்று சொல்லுகிறார்கள்.

தற்போது ஆந்திராவின் பல்வேறு பகுதிகளிலும் யாத்திரை மூலம் மக்களைச் சந்தித்து வரும் சந்திரபாபு நாயுடு, தான் பேசும் கூட்டங்களிலெல்லாம், ''விவசாயக் கடன் ரத்து என்று சொல்லி ஏமாற்றும் காங்கிரஸ் கட்சி ஒழுங்காகக் கடனை செலுத்திய விவசாயிகளை மதிக்கவில்லை'' என்று விமர்சிக்கிறார். ''தெலுங்கு தேசம் ஆட்சிக்கு வந்தால், அனைத்து விவசாயிகளுக்கும் உண்மையான பயன் அளிக்கும் விதமாக கடன் ரத்து அமலாக்கப்படும்'' என்றும் வாக்குறுதி அளிக்கிறார். கலைஞரைப் போல அடுத்து இலவச டீ.வி. அறிவிப்பும் வருமா? என்று ஆந்திர மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நடவடிக்கையால் கட்சித் தாவலா? கட்சித் தாவலை எதிர்பார்த்து நடவடிக்கை மிரட்டலா? என்பது, சாலமன் பாப்பையாவை வைத்து நடத்தப்பட வேண்டிய பரபர பட்டிமன்றத் தலைப்பு!

தொகுப்பு : **கௌதம் ராம்**

தீமிதி

✣ வி. உஷா ✣

அரிசிப் பானையை வடிவு திறந்து பார்த்தாள். எதிர்பார்த்தது போலவே இங்கொன்றும் அங்கொன்றுமாக ஒட்டியிருந்ததை தட்டிக்கிட்டி சேர்த்துப் பார்த்தபோது அரை ஆழாக்கு தேறியது.

குழையக் குழைய வடித்துவிட்டு இரண்டு டம்ளர் நீர் சேர்த்து உப்பு போட்டு ஆற்றினாள். மூன்று குவளைகளுக்கு வந்தது.

''இஸ்கோலுக்கு டயமாவுதும்மா...'' என்று முத்துப் பயல் வந்தான்.

''இந்தாடா கண்ணு... குடிச்சுக்க...'' என்று நீட்டினாள்.

''இன்னாம்மா இது, இன்னைக்கும் கஞ்சித்தண்ணி குடுக்கற...? தோசையாச்சும் ஊத்திக்குடும்மா...'' என்றான் சிணுங்கலுடன்.

''இன்னும் அஞ்சுநாள் பொறுத்துக்கடா கண்ணு... அப்பாவுக்குச் சம்பளம் வந்துடும்... தெனம் தோசை, தக்காளிச் சட்டினின்னு செஞ்சு தர்றேன்.''

''ஆமா வந்துடகிந்துடப் போவுது...''

''சுனாமியும் பூகம்பமும்தான் வரும். அப்பா சம்பளம் வீட்டுக்கு வராது. அத்தனையும்தான் டாஸ்மாக் கடைகளுக்குப் போயிடுதே'' என்று சிரித்தான்.

வடிவு மகனை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு அவன் தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

''பெத்த தகப்பனை மரியாதை இல்லாம பேசக் கூடாதுப்பா. பாவம் அவரு, துறைமுகத்துல இந்தக் கப்பலுக்கும் அந்தக் கப்பலுக்கும் மூட்டை தூக்கிப் படற பாடு நீ பாக்கலே... ஏதோ வலி தெரியாம இருக்கட்டுமேன்னு... சரி, அத்த விடுப்பா... நீயாச்சும் நல்லா படிச்சு பெரிய ஆளா வரணும்டா தம்பி. சரி சரி... நீ கௌம்பிக்க...''

''நல்ல ஊட்டுல வந்து பொறந்தேம் பாரு, குடிகார வீடு...'' என்று முணுமுணுத்துக்கொண்டே முத்துப் பையன் கிளம்பிப்போக, கஸ்தூரி குளித்துவிட்டு வந்தாள்.

''ரெண்டு தவலை தண்ணி கொண்டாந்துட்டு ஸ்கூலுக்குக் கௌம்புறேம்மா...'' என்று கஸ்தூரி அடுப்பருகே செல்ல, வடிவு வேகமாக மகளை அழைத்தாள்.

''இங்க பாரு, உனக்கு என்ன வாங்கியாந்து வெச்சிருக்கேன்னு...'' என்று ஜவுளிக்கடை மஞ்சள் பிளாஸ்டிக் உறை எடுத்து நீட்டினாள்.

''என்னாதும்மா இது?'' கஸ்தூரி வியப்புடன் வாங்கிக்கொண்டு பிரித்தாள்.

சுடிதார், அழகான துப்பட்டாவுடன்!

''ரொம்ப அழகா இருக்குதும்மா'' என்றாள். உடனே கண்களைப் படபடத்துக் கொண்டு தாயை ஏறிட்டாள். ''அப்பாவுக்குக் குடிக்கறதுக்கே சம்பளம் பத்தறதில்லே... இதுக்கெல்லாம் காசு ஏதும்மா?''

''அதெல்லாம் ஏங்



கன்னு ஒனக்கு? கஞ்சிய குடிச்சுட்டு கெளம்பு...''

''தண்ணி எடுத்துட்டு வர்றேம்மா... அப்புறம் முதுகுவலியோட நீதானே நாள் முச்சுடும் அவதிப்படுவ?'' என்று கஸ்தூரி உள்ளே சென்றவள், இரண்டே நிமிடங் களில் திரும்பி வந்தாள்.

''தவல எங்கம்மா காணோம்?''

வடிவு காதில் விழாதவளாய் வீட்டைப் பெருக்கிக்கொண்டிருந்தாள்.

''ஒன்னத்தாம்மா கேக்கறேன்... இந் நேரத்துக்குத் தகதகன்னு தங்கமாட்டம் தேச்சு வெச்சிருப்பியே... எங்கம்மா?''

''ஓட்டை விழுந்துருச்சுடா, அடைக்கக் கொடுத்திருக்கேன். நீ மொதல்ல கஞ்சியக் குடி...''

''இல்லம்மா, ஓட்டை எல்லாம் இல்லை'' என்று தாயின் முகத்தைப் பார்த் தாள் மகள். ''சொல்லு... அடகுதானே வெச்ச? அந்தப் பணத்துலதானே சுடிதார் வாங்கியிருக்க?''

''அடா ஆமா... இப்ப என்ன அதுக்கு!'' என்று வடிவு சிரிக்க முயன்றபோது, கஸ்தூரியின் விரல்கள் அவள் கைகளைப் பற்றின.

''காதுல இருந்த கம்மலு, ஒத்தைக் கல்லு மூக்குத்தின்னு எல்லாமே அடகுக் கடைக்குப் போச்சு... கடைசில மூழ்கியும் போச்சு. பாட்டி நினைவா தானே அதை வெச்சிருந்த... உன் அம்மாவையே அந்தத் தவலை மூலமாகப் பாக்கறேன்னு சொல்லுவ... இப்ப ஏம்மா அதைக்

போட்டிக் கதை – 2



''தலைவர் ஆரம்பிக்கற ஃபேக்டரி மூலமா 10,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமாம்.''

''சம்பளம் கிடைக்குமா?''

- சி.பி.செந்தில்குமார்



கொண்டு போய் அடகு வெச்ச?'' என்றாள் கரகரப்பாக.

வடிவு சுதாரித்துக்கொண்டாள். மகளைப் பூவைப் போல அணைத்துக் கொண்டாள்.

''எங்கம்மா இருந்தாலும் இதைத்தான்டா செய்யும்... அதுக்கும் மானம்தான் முக்கியம். புது டிரஸ் போட்டுக்கிட்டுக் கெளம்பு...''

கஸ்தூரி கண்ணீருடன் நகர்ந்தாள்.

வெயில் கிளம்பிக்கொண்டிருந்தது. இன்றைக்குச் சொர்ணம்மாள் வீட்டில் பூஜை சாமான்களைத் தேய்த்துத் தர வேண்டும். அடுத்ததாக பாளையக்காரர் வீடு. பிரியாணி பாத்திரங்களை ஒரு கீத்து மாத்து இல்லாமல் வழுவழுவென்று விளக்கித் தரவேண்டும்.

''கெளம்பவா புள்ள?'' என்று மாரி வந்து நின்றான்.

''கஞ்சி குடிச்சுட்டுக் கெளம்புய்யா..'' என்று நீட்டினாள்.

மறுபேச்சில்லாமல் வாங்கிக் கொண்டான். சுத்தமாகக் குளித்திருந்தான். முன்னிரவில் அவனிடமிருந்து பீறிட்டு அடித்த மதுவின் நெடி, முகத்திலிருந்த போதை, கால்களிலிருந்த நடுக்கம் என்று எதுவுமில்லாமல் புதிதாய்ப் பிறந்தவனைப் போல இருந்தான். கூடுதலாக ஒருவித மென்மையுணர்வும் புன்னகையும்கூட வெளிப்பட்ட மாதிரி இருந்தது.

''எம் மேல கோவந்தானே புள்ள?'' என்றான் அருகில் வந்து.

''கோவமில்லய்யா... ஆனா மனசு வருத்தம்...'' என்று ஏறிட்டாள். ''பாடுபட்டு ஒழைக்கிற. வெயிலு மழைன்னு பாக்காம ஒடம்பை வருத்திக்கற. கை நெறைய சம்பாதிக்கவும் செய்யற. ஆனா, பாழாப் போன குடிப்பழக்கத்தைவிடமாட்டறியே... ஏன்யா?''

''ஆமாம் புள்ள...'' என் கையில் அவன் குரல் தழுதழுத்தது. ''நீ சொல்றது சரிதான். மூளைக்குத் தெரியுதுதான்... ஆனா சத்தியமா சொல்றேன் புள்ள... கடையைப் பாத்ததும் கை கால் எல்லாம் ஒதற ஆரம்பிச்சுடுது புள்ள... நானும் தெரு மாத்தி மாத்திதான் நடந்து பாக்கறேன். எல்லாத் தெருவுலயும் டாஸ்மாக் கடை இருக்குதே. என்னால கட்டுப்பாடா இருக்க முடியல புள்ள.''

''போனது போகட்டும்யா... என்னிக்கு வேணா நம்மளை மாத்திக்கலாம் இல்லே? இன்னில இருந்து மனசை இன்னும் திடம் பண்ணிக்க... கடைப் பக்கமே கண்ணைத் திருப்பாதே... என்னிய, புள்ளைய நெனைச்சுக்க...''

''சரி புள்ள...''

''முத்துப்பய இப்பவே வெவரமா பேசுறான்யா. உன் மேல மரியாதை இல்லாம போயிருமோன்னு அச்சமா இருக்குதுய்யா. உன்னை மாத்திக்கய்யா... அப்பதான் நாம புள்ளைங்ககிட்ட மானம், மருவாதி கெடாம பொளைக்க முடி

யும்யா...''

''சரி புள்ள... இன்னைக்குப் பாரு...''

''மனசத் திடமா வெச்சுக்கய்யா... நெருப்புல நடக்கறாங்களே... மாரியாத்தா கோயில் கொடைல... அது மாதிரி நடந்து வந்துருய்யா...''

''நிச்சயமா புள்ள... சத்தியமா...'' மாரி மனைவியின் தலைமேல் கைவைத்து சத்தியம் செய்தான்.

இரவில்... கப்பென்று மதுவின் வீச்சம். மூக்கைச் சுருங்க வைத்த நாற்றம். தொண்டைக்குள் இறங்கிய அடர்த்தி நெடி. மாரி வந்துகொண்டிருந்தான், தள்ளாட்டத்துடன்.

வடிவு மனம் சோர்ந்தாள். அழத் தொடங்கினாள்.

பாளையக்காரம்மா அவளுக்கு வேலைகளை வைத்துக்கொண்டு காத்திருந்தாள். முடித்தவுடன் உள்ளே பார்த்தாள்.

''ஏங்க... வடிவு வேலைய முடிச்சுட்டா... என்னவோ பேசணும்னீங்களே...'' என்றாள் சற்று உரக்க.

முருகேசன் தன் கரைவேட்டியின் வெண்மையால் சூழலைப் பளிச்சென்றாக்கிவிட்டு வந்தான். அவள் எழுந்து நின்றாள்.

''வடிவு... உன் வீட்டுல ரேடியோ இருக்குதா?'' என்றான் சிரித்த முகத்துடன்.

''இல்லீங்கய்யா...''

''அயர்ன் பெட்டி, கட்டில், பீரோ?''

''இல்லீங்க... நாலஞ்சு சட்டி பானைங்க, ஒரு மண்ணடுப்பு, மர பீரோ, பழைய துணிமணிங்க. அவ்வளவுதாங்க.''

''சரி, கவலைப்படாதே...'' என்று சிரித்தான்.

''உங்களுக்காகத்தான் அரசாங்கம் திட்டம் போட்டிருக்கு. எங்க தலைவரு உங்களுக்காகத்தான் ராப்பகலா உழைக்கறாரு. வர்ற அஞ்சாந்தேதி ஆத்து மைதானத்துல கூட்டம். உள்ளாட்சித் தலைவரு, அமைச்சருங்க எல்லாம் வர்றாங்க. ஆயிரம் பேருக்கு ரேடியோ, தையல் மிஷினு, சைக்கிளு, அயர்ன் பாக்ஸ்னு கொடுக்கறாரு. மிகப்பெரிய கூட்டம். டீ.வி, பத்திரிகைன்னு எல்லாரும் வர்றாங்க... அமைச்சர் கையால முத ஆளா நீதான் வாங்கப் போறே... நான்தான் எல்லாத்துக்கும் பொறுப்பாளர்... சரியா, சந்தோஷமா?''

அவள் விழித்தாள்.

''அவ என்னங்க சொல்லப்போறா? வீட்டுல நாலு சாமான் செட்டு இருந்தா கண்ணுக்குக் குளிர்ச்சிதானே? வடிவு மாதிரி சின்சியரா ஒருத்தியகூட நான் பாத்ததில்லீங்க. அவதான் தகுதியானவ. நீங்க ஆரம்பிங்க உங்க விழாவை...'' என்று பாளையக்காரம்மா ஆதரவுடன் வடிவைப் பார்த்தாள்.



தூறல் கவிதை

நேற்றுவரை நீராயிருந்து
ஊர் ஊராய் வளைந்தோடிய நதி
இன்று பெயர் மாறி
வளைந்தோடுகிறது ஊருக்குள்
மணல் லாரியாக!

- 'திருமயம்' பெ.பாண்டியன்

உண்மையிலேயே பிரமாண்ட திருவிழாவாகத்தான் இருந்தது. ஆத்து மைதானம் மக்கள் தலையால் நிரம்பி, அக்கம் பக்கத்து மரம், கட்டடங்கள் என்று கூட்டம். கட்சி ஆட்கள், பொதுமக்கள், மகளிர் குழுக்கள், கலை இலக்கிய மன்றம், கலர் நாற்காலிகள், சிவப்புக் கம்பள மேடை, மலர் அலங்காரம் என்று அந்த இடமே பெரிய இடத்துக் கல்யாண நாள் போல ஜொலித்துக்கொண்டிருந்தது. முத்துப்பயல் வாயில் கொசு நுழைவது தெரியாமல் முன்வரிசையில் இருந்தான். கஸ்தூரி தன் தோழிகளுடன் உற்சாகமாக அமர்ந்திருந்தாள். புருஷன் மாரியும்கூட சிரித்த முகமாக இருந்தான்.



''இப்போது உள்ளாட்சித் தலைவர் இலவச ரேடியோ வழங்குவார். கட்ட பொம்மன் தெரு, மூன்றாம் இலக்க எண், வடிவு என்கிற வடிவுக்கரசி அம்மாளை அழைக்கிறோம். முதல் இலவச ரேடியோவைப் பெற. அப்படியே அவருக்கு அயர்ன் பாக்ஸ், அடுப்பு, பாத்திரங்கள் எல்லாம் வழங்கப்படும். வாருங்கள் வடிவு அவர்களே...'' என்று மைக் அழைத்தது.

வடிவு எழுந்தாள். மேடைக்குப் போனாள். காமராக்கள் தயாராகின. பத்திரிகைகள் கூர்ந்து கவனித்தன.

பளீர் சிரிப்புடன் அமைச்சர் ரேடியோவை நீட்ட, அவள் நின்றாள். இரு கைகளையும் கட்டிக்கொண்டாள். 'வேண்டாம்' என்று தலையாட்டினாள்.

அமைச்சர் திகைத்தார். முருகேசன் தடுமாறி ஓடி வந்தான். மீடியாக்கள் தீனி கிடைத்த பரபரப்பில் நிமிர்ந்தன.

''ஆமாங்க அமைச்சரே... வேண்டாம் எனக்கு... இலவசமா நீங்க கொடுக்கற எதுவும் வேண்டாம்'' என்றாள். அதற்குள் அவள் கையில் மைக் திணிக்கப்பட்டு விட்டது.

''ஏன்? ஏன்? வாட்ஸ் திஸ்?'' அமைச்சர் கிசுகிசுக்க, அவள் நிதானமாகப் பேசத் தொடங்கினாள்.

''நாங்க பிச்சைக்காரங்க இல்லே... மானம், மரியாதையோட வாழ நினைக்கற மனுஷங்க. எங்க உழைப்புக்குக் கெடைக்கற ஊதியத்தை எங்களுக்கே விட்டு வெச்சிங்கன்னா அதுவே போதுமுங்க. இந்த ரேடியோ, பீரோ இதையெல்லாம் நாங்களே வாங்கிக்குவோமுங்க. எங்க கூலியை மதுபானக் கடை மூலமா நீங்களே பிடுங்கிக்கிட்டு, அதுல வர்ற கோடிகளை வெச்சுக்கிட்டு இப்படி இலவசப் பொருட்களை எங்களுக்கே கொடுக்கறீங்களே... வேணாங்க... ஒண்ணு கடைகளை மூடுங்க... இல்லே இலவசங்களை நிறுத்துங்க. ஏழைங்களுக்கும் மானம் இருக்குதுங்க. எங்க மாதிரி உழைப்பாளி குடும்பங்களை உங்க மதுபானக் கடைங்க கிட்ட இருந்து காப்பாத்துங்க. அது போதுங்க. இந்த இலவசங்கள் எதுவுமே வேணவே வேணாங்க'' - வடிவு அழுதாள்.

கூட்டம் அமைதியாக இருந்தது. அந்த அமைதியில் மெய்ம்மை உறைந்து கிடந்தது. ●

அடுத்த இலக்கு மகாபாரதம்!

இந்த வருடம் சென்னை கம்பன் விழாவின் மூன்றாவது நாளன்று, ஒரு வாண்டுப் பையன், அரங்கத்தில் கூடியிருந்த தமிழ் அறிஞர்களைத் தனது திறமையால் அசத்தி, பாராட்டுப் பெற்றான். அவன் வழங்கிய நிகழ்ச்சிக்கு 'காப்பிய மாந்தர் கவனகம்' என்று பெயர். அதாவது ராமாயணத்தில் நாம் நினைக்கும் பாத்திரம் எது? என்று மிகச் சில கேள்விகள் மூலம் கண்டுபிடிக்கும் நிகழ்ச்சி.

அரங்கத்தில் அமர்ந்திருந்த அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் ஒவ்வொருவராக மேடைக்கு வந்து நிற்க, அவர் நினைத்துக்கொண்டிருக்கும் ராமாயண கதாபாத்திரம் யார் என்பதை ஆறு அல்லது ஏழு கேள்விகள் வரை கேட்டு, சரியாகக் கண்டுபிடித்துச் சொல்கிறான் கௌதம் ராஜ். சென்னை அம்பத்தூர் டி.ஐ. பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கும் இவன், கடந்த இரண்டு ஆண்டுகளாக இதிலே திறமையை வளர்த்துக்கொண்டு மேடைகளில் இந்த நிகழ்ச்சியினை அளித்து வருகிறான். கௌதம் ராஜின் தாத்தா சாமி. சுப்பிரமணியன் ஒரு தமிழ் அறிஞர். அப்பா ரவி கணித ஆசிரியர்.

எப்படி இந்த ஆர்வம் வந்தது?

''சிறு வயதில் என் தாத்தா எனக்கு நிறைய ராமாயண, மகாபாரதக் கதைகள் சொல்வார். கதை சொல்லிவிட்டு, சில நாட்கள் கழித்து, சொன்ன கதையைப் பற்றி, கதாபாத்திரங்கள் பற்றி கேள்விகள் கேட்பார். என் தாத்தா மற்றும் அப்பாவின் பயிற்சி காரணமாகத்தான் இன்று இப்படி நிகழ்ச்சிகள் வழங்க முடிகிறது. ராமாயணத்தில் சுமார் நூறு கதாபாத்திரங்கள் வரை என்னால் கண்டுபிடித்துச் சொல்லிவிட முடியும்'' என்கிறான் கௌதம் ராஜ். வெறுமனே கதாபாத்திரங்களைக் கண்டுபிடித்துச் சொல்லுவதுடன் நிற்காமல், அந்தக் கதாபாத்திரத்தின் சிறப்பை உணர்த்தும் கம்ப ராமாயணப் பாடலையும் கூறி, விளக்கமளிக்கிறான் கௌதம்.

அடுத்த இலக்கு?

''மகாபாரதக் கதாபாத்திரங்களைக் கண்டுபிடித்துச் சொல்லுவது.''

- அர்ஜுன்



விஜய் மகன் யாரோட ரசிகன்?

விஜய்க்கு அவனோட ரசிகர்கள் வெறும் சினிமாப் பைத்தியங்களா மட்டும் இருக்கறது பிடிக்காது. அவங்க சமூக அக்கறை உள்ளவங்களா, ஏழைகளுக்கு உதவக்கூடிய இரக்க குணம்



ஷோபா சந்திரசேகர்

உள்ளவங்களா இருக்கணும்னு ஆசைப் பட்டுக்கிட்டு இருக்கான். அதுக்காக அவனே அவங்களுக்கு முன்மாதிரியா இருக்கான்.

பொதுவா, எந்தப் பிள்ளையா இருந்தாலும் தாய், தகப்பனை நேசிக்கணும். அவங்ககிட்ட மரியாதையோட நடந்துக்கணும். விஜய் அவனோட பெத்தவங்களை நேசிச்சாத்தான் அவனோட ரசிகர்களும் அவங்க அப்பா அம்மாவை நேசிப்பாங்க. இது அவனுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கு. இன்னிக்கு வரைக்கும் அவன் என்கிட்டயும் என் கணவர்கிட்டயும் காட்டுற அன்போ, மரியாதையோ துளி கூடக் குறைஞ்சதில்லை.

அவன் எப்படி ஏழைகளுக்கு உதவி பண்றானோ, அதைத்தான் அவனோட ரசிகர்களும் பின்பற்றுறாங்க. ஒவ்வொரு ரசிகரையும், அவங்க எப்படிப்பட்ட ரசிகரா இருந்தாலும், சமூக அக்கறையுள்ளவரா மாத்திக்கிட்டு வர்றான் விஜய். அவனோட ரசிகர்களும் சமூக சேவை செய்யறதுல ரொம்ப ஆர்வத்தோட இருக்காங்க.

'விஜய் அரசியல் கட்சி ஆரம்பிப்பானா?'ங்கறதுக்கு என்னால பதில் சொல்ல முடியாது. என்னுடைய ஆசை எல்லாம் ஒண்ணுதான். அவனை எல்லாக் கட்சிக்காரங்களும் நேசிக்கணும். எல்லா இனத்தைச் சேர்ந்தவங்களும் நேசிக்கணும். எல்லா வயசுக்காரங்களும்,



ஆறு வயசு சின்னப் பையன்லருந்து அறுபது வயசுக்காரங்க வரைக்கும் அவனை நேசிக்கணும்.

நிறையபேர் என்கிட்ட 'விஜய் எதிர்காலத்துல அரசியல்ல நுழை வாரா?'ன்னு கேக்கறாங்க. அதுக்கும் என்னால பதில் சொல்ல முடியாது. அவன் கைக்குழந்தை இல்லை. அவன் இப்படித்தான் இருக்கணும், இந்த வழிலதான் போகணும்னு என்னால அவனைக் கட்டுப்படுத்த முடியாது. அவனுக்குன்னு தனிப்பட்ட அபிப்ராயங்கள், விருப்பு வெறுப்புகள் இருக்கும் இல்லையா? அது என்னன்னு எனக்குத் தெரியாது. ஆனா, எப்படி இருந்தாலும், அவன் தன் மனசாட்சி சரின்னு சொல்றதைத்தான் செய்வான். அதையும் ஒண்ணுக்குப் பத்து தடவை யோசிச்சுட்டுத்தான் செய்வான். அது மட்டும் எனக்குத் தெரியும்.



சினிமா உலகம் ஒரு பக்கம், பேரையும் புகழையும் கொடுத்தாலும், தனிப்பட்ட வாழ்க்கைல இருக்கற சந்தோஷம் மொத்தத்தையும் வாரிக்கிட்டுப் போயிடும். இந்த வலி, அனுபவிச்சவங்களுக்குத்தான் தெரியும். விஜய் வீட்டுல இருக்கற நேரம் ரொம்பக் குறைவு. அவனுக்கு எத்தனையோ ஆசைகள் இருக்கு. அதுல ஒண்ணு, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் குடுக்கறது. அதுக்கு நேரம் வேணுமே?

ஆனா, விஜய்யோட மனைவி சங்கீதா குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் குடுக்கற வேலையை ரொம்பப் பொறுப்பா செய்யும். அதை ஒரு கடமையா, அதே நேரத்துல ரொம்ப ஆசையா, அர்ப்பணிப்பு உணர்வோட சங்கீதா செய்யறதாலதான் விஜய் நிம்மதியா தன் வேலையைப் பாக்க முடியுது.

விஜய்யோட மகன் ஜேசன் சஞ்சய் யாரோட ரசிகன்? இந்தக் கேள்வியை

நானே அவன்கிட்ட கேட்டிருக்கேன். ஆனா, அவன் ரொம்ப கில்லாடி. படத்துல நடிச்ச நடிகர் பெரிய நடிகரா, சின்ன நடிகரான்னுல்லாம் பாக்க மாட்டான். அந்தந்த பீரியட்ல எந்தப் படம் பிடிக்குதோ, எந்தப் படம் ஹிட்டாகுதோ அந்தப் படத்துல நடிச்ச ஹீரோவுக்கு ரசிகனாயிடுவான்.



விஜய்க்கு ஒரு காலத்துல டைரக்ஷன் பண்ணணும்னுகூட ஒரு யோசனை இருந்துச்சு. 'ஒரு நல்ல படம் பண்ணணும்மா' அப்படின்னு சொல்லிக்கிட்டு இருப்பான். ஆனா, அவனும் அவனோட அப்பாலருந்து பல டைரக்டர்களைப் பாத்துட்டான் இல்லையா? அவங்க படற அவஸ்தையையெல்லாம் பாத்துட்டு, இப்போ 'அந்த டென்ஷனே நமக்கு வேணாம்மா'ன்னு சொல்லிக்கிட்டு இருக்கான்.

விஜய்க்கு இசைன்னா ரொம்ப உயிர். அவனோட படத்துல வர்ற பாட்டைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப ஆர்வம் காட்டுவான்.

ஒரு பாட்டுல பின்னணி இசை எப்படி இருக்கு, ஆடறதுக்கு என்னென்ன வாய்ப்பு இருக்குன்னு ஒவ்வொண்ணையும் ரொம்ப ஆழமாப் பார்ப்பான். பாட்டு தயாரானதும் அப்படியே அதுல இன்வால்வ் ஆயிடுவான். இப்படி அவன் இசைல ரொம்ப ஈடுபாட்டோட இருக்கறதுக்கு என்ன காரணம்?

அவன் என் வயித்துல இருந்தப்போ மாசத்துல முப்பது நாளும் நான் மேடைக் கச்சேரிகள்ல பாடிக்கிட்டு இருந்தேன். அவனைச் சுமந்த அந்தப் பத்து மாசமும், அவன் கருவாகி, இந்த உலகத்துல காலடி எடுத்து வைக்கற முதல் நாள் வரைக்கும் நான் மேடையில பாடிக்கிட்டு இருந்தேன். அதனாலதான் 'இசை உறவு' அவனுக்குக் கருவுலயே வந்துடுச்சுன்னு நான் நினைக்கிறேன்.

இப்பவும் அவன் நடிக்கற படத்துல ஏதாவது ஒரு டியூனைக் கேட்டுட்டு, 'அம்மா! இந்த பாட்டு ஹிட்டும்மா'ம்பான். நிச்சயம் அது ஹிட்டாயிடும்.

இந்த இடத்துல என்னோட இசைப் பயிற்சியைப் பத்தியும் கொஞ்சம் சொல்லித்தான் ஆகணும். நான் ஸ்கூல்ல படிச்சுக்கிட்டு இருந்தப்பவே எங்க அப்பா என்னையும் என் கூடப் பிறந்தவங்களையும் கர்நாடக சங்கீதத்தோட அடிப்படைப் பாடத்தைக் கத்துக்க அனுப்பி

வைச்சிட்டார். மீனாட்சி சுந்தரம் பிள்ளைன்னு ஒரு வித்வான். ஜி.என். பாலசுப்ரமணியத்தோட சிஷ்யர். அவர் கிட்டதான் நாங்க சங்கீதத்தோட அரிச் சுவடியைக் கத்துக்கிட்டோம். அப்போ அவர் வால்மீகி தெருவுல இருந்தார்.

நான், சுரேந்தர் அண்ணா, என் சகோதரி ஷீலா- மூணு பேரும் சுருதிப் பெட்டியைத் தூக்கிக்கிட்டு, வடபழனி யிலருந்து பஸ் பிடிச்சு போய் பாடம் படிச்சோம். ஆனா, அப்போ எங்களால அவ்வளவு ஆழமா சங்கீதத்தை அவர் கிட்ட கத்துக்க முடியல. ஏன்னா, நாங்க எல்லாருமே அப்போ மெல்லிசைக் கச்சேரிகள்ல ரொம்ப பிஸியா இருந்த காலகட்டம் அது.

அதுக்கப்புறம் நான் சாரதா வித்யால யாவுல எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சிட்டு, மியூசிக் காலேஜ்ல 'வித்வான்' கோர்ஸ்ல சேர்ந்தேன். அப்பக்கூட என்னால கர்நாடக இசையில முழு கவனத்தையும் செலுத்த முடியல. படிச்சுக்கிட்டு இருக் கும் போதே எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. அதுக்கப்புறம் எனக்கும் கர்நாடக இசைக்கும் நடுவுல கொஞ்சம் இடைவெளி. மனசுக்குள்ள 'இந்த கிளாசிக்கல் மியூசிக் தெரியாமலேயே நம்ம வாழ்க்கை முடிஞ்சு போயி டுமோ'ன்னு ஒரு வருத்தம் இருந்துக் கிட்டே இருந்தது.

இந்த சந்தர்ப்பத்துலதான் அது நடந் தது. என்னோட உறவினர் ஒருத்தங்க தி.நகர்ல இருக்காங்க. அவங்க ஒரு டாக் டர். பேரு லக்ஷ்மி. அவங்களும் ஒரு வாத்தியார்கிட்ட கர்நாடக இசை கத்துக் கிட்டு இருந்தாங்க. ஒரு நாள், ரெண்டு நாள் இல்ல. பத்து வருஷமா. திடீர்னு ஒரு நாள் அவர் தவறிப்போயிட்டார்.

நான் டாக்டர் லக்ஷ்மிகிட்ட, 'இனிமே என்ன பண்ணப் போறீங்க? யார்கிட்ட கத்துக்கப் போறீங்க'ன்னு கேட்டேன். 'தெரியலம்மா. உனக்கு யாராவது தெரிஞ்சா சொல்லேன்'னு சொன்னாங்க. நான் அவங்ககிட்ட 'நீங்க புதுசா யார்கிட்டயாவது பாட்டு கத்துக்க சேர்ந்தீங் கன்னா எனக்கும் சொல்லுங்க'ன்னேன். அவங்க என்னை விநோதமா பாத்தாங்க. கடைசியில என்னை ஒரு இசை ஆசிரியர் கிட்ட கூட்டிக்கிட்டு போனாங்க. அது ஆகஸ்ட் 5, 2002. அந்த நாளை என்னால மறக்கவே முடியாது.

எழுத்து வடிவம்: **பாலு சத்யா**




விஜய் வின்னர்ஸ் 14

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...


1. அ.முரளிதரன், மதுரை - 3
2. லெக்ஷ்மி ஸந்தானம், ஸ்ரீரங்கம்
3. ஏ.ஆர்.வலம்புரி நாகராஜன், ஈரோடு
4. துரை.ராமகிருஷ்ணன், திருச்சி
5. ஆர்.அருள்செல்வி, தஞ்சாவூர்
6. ம.மணிகண்டன், அரியலூர்
7. எஸ்.ராமபத்ரன், கும்பகோணம்
8. எம்.அந்தோணி பாக்யராஜ், சென்னை - 21
9. ஆர்.கல்யாண், மதுரை - 9
10. கி.வே.சீனிவாசன், ஆரணி - 12

* *முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.*
* *குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.*



நூற்றுக்கணக்கான முட்டைகளும், அதிகளவு எஸ்ஸென்ஸ்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன் முறையாக உலக அதிசயங்களைக் கேக்குக்குள் கொண்டு வந்த பெருமை, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களையே சாரும்.


''சென்னையைத் தாண்டி இந்த நாற்பது வருஷத்துல நான் எங்கேயுமே



ஏழு அதிசயங்களையும்

அதிசயங்கள் சென்னை வாசிகளைத் தேடி வந்து 'கேக்' வடிவத்தில் சமீபத்தில் தரிசனம் கொடுத்துச் சென்ற அதிசயத்தைப் பற்றி சென்னை மக்கள் அசராமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை தீவுத்திடலில் சமீபத்தில் பிரமாண்டமாக நடந்து முடிந்த ICE mega expo வில்தான் கேட்க கேட்க இனிக்க வைத்த, பார்க்க பார்க்க பிரமிக்க வைத்த கேக்குகளின் அணிவகுப்பு நடந்தேறியது.

இந்த அதிசய கேக்குகளை உருவாக்க மட்டுமே 330,422 டாலர்கள் செலவிடப்பட்டுள்ளன. உலக அதிசயங்களை ஆற அமர கேக்கில் செதுக்க எண்பது தொழிலாளர்கள் இடைவிடாமல் பணியாற்றி இருக்கிறார்கள். ஒவ்வொரு கேக்கையும் வடிவமைக்க கிலோ கணக்கில் ஐஸிங் சர்க்கரைகளும்,



கேக் எக்ஸிபிஷன்

போனதே இல்லீங்க. தாஜ்மஹால கூட சினிமாவுல தாங்க பார்த்திருக்கேன். சீனப் பெருஞ்சுவர் முதற்கொண்டு உலக அதிசயங்களைப் பார்த்ததே எனக்குக் கிடச்ச பெரிய அதிர்ஷ்டம்தாங்க'' என சிலாகிக்கிறார் தனம்மாள்.

கேக்குகளைப் பார்த்தால் நாக்கில் மட்டுமல்ல பிரமிக்க வைக்கிற அழகால் கண்களிலும் ஜலத்தை வரவழைத்தது. புதுமையான சிந்தனை, தளராத உழைப்பு இரண்டும் இருந்தால் ஏகோபித்த வெற்றி நிச்சயம் என்று உணர்த்தின இந்த கேக் அதிசயங்கள்.

- நளினி சம்பத்குமார்







நட்சத்திரமா?

சுமார் நாற்பத்தி யோரு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அந்தச் சம்பவத்தால், தமிழகத்தை ஆட்சி புரிந்து கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி, பெரும் தோல்வியைச் சந்தித்தது. எம்.ஜி.ஆர்., எம்.ஆர். ராதாவால் சுடப்பட்ட சம்பவம்தான் அது!

1967, ஜனவரி 12ஆம் தேதி நடைபெற்ற அந்தச் சம்பவத்தை, அதே பெயரில் தொடராக மக்கள் தொலைக்காட்சிக்காக இயக்கி வருகிறார் கவிதாபாரதி.

தனக்கென நடிப்பில் தனி பாணியை வகுத்துக்கொண்ட, நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் நூற்றாண்டைத் தமிழக அரசு கொண்டாடும் இந்நேரத்தில் இந்தச் சம்பவத்தைப் படமாக்க முனைந்தது ஏன்? என்ற கேள்வியுடன், இயக்குநர் கவிதா பாரதியைச் சந்தித்தோம்.

''ராதாவைப் பற்றி எந்தவிதமான புதிய கருத்துக்களையும் நாங்கள் இந்தத் தொடரில் ஏற்படுத்தப் போவதில்லை. அவரது செயலை நியாயப்படுத்தவும் இல்லை.

ஏனென்றால், எம்.ஜி.ஆரைச் சுட்ட வழக்கில் எம்.ஆர்.ராதா ஐந்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்று நன்னடத்தை காரணமாக, நான்கு ஆண்டுகளில் விடுதலையானார்.

ஆக, வரலாற்றுப் பதிவுகளை மாற்றுகிற எந்தப் பணியிலும் நிச்சயமாக நாங்கள் ஈடுபடவில்லை.''

ஏன் இந்தச் சம்பவத்தைத் தொடராக்க விரும்பினீர்கள்?

பத்திரிகை, சினிமாவைப் போல தொலைக்காட்சி ஓர் ஊடகம். அதை இங்கே இருக்கும் எந்தத் தொலைக் காட்சியும் தெரிந்து கொள்ளவில்லை. முழுக்க முழுக்க சினிமாவைச் சார்ந்த நிகழ்ச்சிகளோடுதான் இயங்குகின்றன. அதிலிருந்து மாறுபட்டுத் திகழ்வது மக்கள் தொலைக் காட்சி.

சரி; ஏன் இந்தச் சம்பவத்தை கதைக்

எம்.ஆர்.ராதாவாக நடிக்கும் கலைமணி, இசை நாடக நடிகர். சங்கரதாஸ் சுவாமிகளின் பல்வேறு நாடகங்களை அரங்கேற்றியவர்.

''நான் முழுநேர நாடக நடிகன்தான். என்றாலும், நடிகவேளைப் போல நடிப்பது என்பது சுலபமாயில்லை. அவருடைய வசன உச்சரிப்பை, கரகரப்பான குரலை கவனமாகச் செய்து வருகிறேன். இந்த வாய்ப்பு, எனக்கு அமைந்ததுதான் மிகப்பெரிய சந்தோஷம்!''

களனாகத் தேர்வு செய்தோம் என்ற விஷயத்துக்கு வருகிறேன். இது, தனிப்பட்ட இருவருக்குள்ளும் நடந்ததாகத் தோன்றலாம். ஆனால், தமிழக அரசியலைப் புரட்டிப் போட்டதும், தி.மு.க.வின் வெற்றி சதவிகிதம் கணிசமாக அதிகரிக்கக் காரணமானதும் இந்தச் சம்பவம்தான்!

சூரியனா?



இன்றைக்கும் அதைப் பேசுபவர்கள் பலருண்டு. வரலாற்றுப் பதிவான இந்தச் சம்பவத்தை நினைவு கூர்கிறோம். அவ்வளவுதான்.''

இந்தத் தொடருக்கான தேடல்களில், நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்?

''எம்.ஜி.ஆர். சுடப்பட்டது 1967ல் என்றாலும், அதற்கு முன்பே இருவருக்குமிடையே கசப்புணர்வு இருந்துள்ளது. 1964ஆம் ஆண்டு 'தொழிலாளி' படப்பிடிப்பில் இருவருக்குள்ளும் மோதல் ஏற்பட்டது.

ஒரு புதிய பேருந்தைக் காட்டி, 'தொழிலாளர்களின் வாழ்வை மாற்றப்போகும் நம்பிக்கை நட்சத்திரம்' என்று எம்.ஜி.ஆர். வசனம் பேச வேண்டும். எம்.ஜி.ஆரோ, 'நம்பிக்கை நட்சத்திரம்' என்பதற்குப் பதிலாக 'உதயசூரியன்' என்று சொல்கிறார். ராதாவுக்கு கடுங்கோபம்.

'உன் கட்சி சின்னத்தைப் பேசும் இடம் இதுவல்ல' என்று கோபிக்கிறார். பிறகு சமரசம் ஏற்படுகிறது. 'நம்பிக்கை நட்சத்திரம்' என்றே சொல்கிறார் எம்.ஜி.ஆர்.

இது ஒரு உதாரணம்தான். ஏனென்றால், நாங்கள் இதைப் போன்ற எல்லாச் செய்திகளையும் கவனித்தோம். அதற்கான ஆதாரங்களோடுதான் தொடரை அணுகினோம். வரலாற்றுப் பதிவுகளை ஊடகத்தின் வழியே நாங்கள் சுவாரஸ்யமாகச் சொல்கிறோம். அவ்வளவுதான்'' என்கிறார் கவிதாபாரதி.

- ராகவ்குமார்



★ கவிதாபாரதி

எழுத்தில் ஒலிக்கும் குரல்!



பெருமைக்குரிய மகசேசே விருது பெற்ற பத்திரிகையாளர் பி.சாய்நாத் 'பல்கிவாலா ஃபவுண்டேஷன்' ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் சொற்பொழிவாற்ற அண்மையில் சென்னை வந்திருந்தார். அப்போது, அவர் கல்கிக்கு அளித்த சிறப்புப் பேட்டி:

''2001ஆம் ஆண்டு சென்சஸ் படி இந்த நாட்டு ஜனத்தொகையில் 72% பேர் கிராமங்களில்தான் வாழறாங்க. அவங்க மிகவும் ஏழைங்க. தங்களுக்காக குரல் கொடுக்கத் திராணி இல்லாதவங்க. அவங்க வறட்சியால படற கஷ்டத்தை, அதன் தீவிரத்தைப் புரிய வைக்கணும்னுதான் எழுத ஆரம்பிச்சேன். இருந்தாலும் நான் கண்ணால் பார்த்த வறட்சியின் தீவிரத்தை என்னோட எழுத்துல என்னால கொண்டு வர முடியலை. காரணம் அந்த எழுத்தில் என் குரல்தான் ஒலிச்சதே தவிர, பாதிக்கப்பட்ட ஏழை மக்களோட குரல் ஒலிக்கலை. தவறு எங்கேன்னு எனக்குப் புரிஞ்சது. இப்போது ஏழை, கிராமத்து மக்களோட வாழ்க்கையை, துயரங்களை அவர்கள் குரல் ஒலிக்கும்படி எழுதறேன்.

'மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகள், அடிப்படை வசதிகள்கூட சுதந்திரம் வாங்கி இத்தனை வருஷங்களாகியும் கிடைக்கவில்லை.'

''இப்படிப்பட்ட கட்டுரைகளை எழுத நீங்க மிகவும் சிரமப்பட வேண்டியிருக்குமே?''

கிராமப்புறங்களில் நான் அனுபவிக்கிற சௌகரியக் குறைவுகளைச் சிரமமாக நினைக்கறதில்லை. தமிழ்நாட்டுல, புதுக்கோட்டை மாவட்டத்து கிராமங்களுக்குப் போனபோது, நானும் கிராமத்து மக்களோட குடிசைகள்ல தங்கி இருக்கேன். போக்குவரத்து இல்லாத கிராமங்களுக்கு நடந்துதான் போகணும் என்றால், நான் நடக்கத் தயங்கினது கிடையாது. நாம யாரு? எதுக்காக வந்திருக்கிறோம்? என்பதைத் தெளிவா அவங்களுக்கு விளக்கிச் சொல்லிடணும். அப்புறம் ஒத்துழைக்கறதும், ஒத்துழைக்காததும் அவங்க கையில இருக்கு. ஆனால், எனக்கு கிராம மக்கள்கிட்டே இருந்து அற்புதமான ஒத்துழைப்பு கிடைக்குது. அவங்களோட விருந்தோம்பல் இருக்கே... அது நகரத்து மனிதர்களுக்குக்கூட வராது. மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகள், அடிப்படை வசதிகள்கூட சுதந்திரம் வாங்கி இத்தனை வருஷங்களாகியும் கிடைக்கவில்லை என்பதைப் பார்க்கிறபோது, ஆரம்பத்துல எனக்கு பலமுறை தார்மீகக் கோபம் வந்திருக்கு. ஆனால், நாளாவட்டத்துல, கோபம் என்பது உடல்நலத்தைப் பாதிக்கிற ஒரு நெகடிவ் சக்தி என்று புரிஞ்சது. என் கடமை

உணர்வுக்கு முக்கியத்துவம் தர ஆரம் பிச்சேன்.''

''உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஏதும் சொல் லுங்க?''


''90களில் ஒருமுறை ஒரிசாவுல ஒரு குக்கிராமத்துக்குப் போயிருந்தேன். ஊரை விட்டுப் புறப்படும்போது, என்னுடைய கேமராவின் ஃப்ளாஷை யும், லென்ஸையும் அங்கேயே மறந்து போய் விட்டுட்டேன். அந்தக் காலத் திலேயே ரெண்டும் சேர்ந்து சுமார் முப்பத் தைந்தாயிரம் ரூபாய். அந்தக் கிராமத்துப் பஞ்சாயத்து தலைவர், எப்படியாவது என்னைத் தேடிக் கண்டுபிடித்து, என்னிடம் அவற்றை ஒப்படைச்சிட்டு வரும்படி அந்தக் கிராமத்துப் பையன் ஒருவனை அனுப்பி வெச்சார். அந்தப் பையன் இரண்டு பஸ் மாறிவந்து, என்னைத் தேடிக் கண்டுபிடிச்சு, ஃப்ளாஷையும், லென்ஸையும் கொடுத்து விட்டுப் போனான். இதுபோல நிறைய சொல்லலாம்.

இன்னிக்கு செய்திகளில் பரபரப்பு நிறைய இருக்கு; ஆனால் ஜீவன் - ஆத்மா இல்லையே! இன்றைக்கும் நல்ல பத்திரிகைகள் இருக்கு. ஆனா அவை மைனாரிடிதான்.

கிராமத்து இளைஞர்கள், தங்களு டைய அப்பாக்களும், தாத்தாக்களும் கிராமத்தில், விவசாயத்தில் படுகிற கஷ்டங்களைப் பார்த்துட்டு, விவசாயத் தில் நாட்டமில்லாமல் இருக்காங்க. வேலை தேடி நகரத்துக்கு வர்றாங்க. இது நாட்டுக்கு நல்லதில்ல.''

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**

படம்: **ராம்**



'கிராமத்து இளைஞர்கள், வேலைதேடி நகரங்களுக்கு வருவது, கிராமத்துக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல!'

இயக்குநர் சிம்புதேவன்


படம்: ஸ்ரீஹரி

ஆரம்பிப்பேன்.

சித்தன் எனது மாமா! எனக்கு மூன்று தாய் மாமன்கள் - சித்தனாதன், ஆறுமுகம், பாலகிருஷ்ணன். மூவருமே என்னைப் பொறுத்தவரை பூச்சாண்டியை விட ஒரு படி மேல்! அவ்வளவு பயம்! எனக்குள் இருக்கும் டைனோசரின் அலப்பறை எல்லை மீறும்போதெல்லாம், இவர்கள் நேரடி தரிசனம் கொடுத்து என்னைத் 'திகிடு தம்பாக' அடி துவைத்துத் தொங்கப் போட்டு விடுவார்கள்.

எனது மூன்று, நான்கு வயதுகளில் சாப்பிடத்தரும் தோசை சற்று பிய்ந்திருந்தாலும் ஏற்க மாட்டேன். ''எனக்கு கிழிஞ்சது வேணாம். புதுத்தோசைதான் வேணும்!'' என எடுத்த எடுப்பிலேயே ஜுராசிக் பார்க் டைனோசர் போல பிளிறுவேன். முதலில் அன்போடு சொல்வார்கள். பிறகு கோபப்படுவது போல் நடிப்பார்கள். அப்போதும் அடம் பிடிப்பேன். பின் நம்மை ஏதோ அப்பாவி என நினைத்து, ''இங்க பாரு! பூச்சாண்டி வந்து பிடிச்சிட்டுப் போயிடுவான்!'' என்பார்கள். அப்படியும் தொடர்ந்து அலறுவேன். வெளி வாசலில் அமர்ந்திருக்கும் என் அப்பா, ''இந்தா சித்தன் வந்துட்டான்!'' என்பார். அவ்வளவுதான். அந்நியன் விக்ரம்போல் சடாரென பொட்டிப் பாம்பாக அடங்கி விடுவேன்! அதே கிழிஞ்ச தோசையை அன்போடும் காதலோடும் சிரித்த முகத்தோடும் மடியில் வைத்து, சாப்பிட

பெரிய மாமா (சித்தனாதன்) BSNL-ல் செக்ஷன் சூப்பர்வைசராக உள்ளார். மூன்று பேரில் இவர்தான் என்னைக் குறைவாக அடிப்பார். குடும்பத்தில் மூத்தவன் என்பதால், இவருக்குப் பொறுப்புணர்ச்சி அதிகம். இவரைக் கவனிப்பதே ஒரு சுவாரஸ்யம். விதவிதமான வேலைகள் செய்வார். ஆடும் சேரை நிப்பாட்டுவது, கம்பி கட்டி ரேடியோவைப் பாட வைப்பது, பிடிமானம் இல்லாத இடத்தில் கொடி கட்டுவது, வெள்ளத்தில் சிக்கியவனைக் கண்டுபிடித்துத் தூக்கி வருவது, ஒரே நேரத்தில் மூன்று குடம் தூக்குவது... இதுமாதிரி அசாதாரணமான வேலை நிறைய. பல விஷயங்களை நானும் செய்து பார்ப்பேன். எங்களுடன் சேர்ந்து கிரிக்கெட், சில்லாக்கு, சீட்டு என்றெல்லாம் விளையாடுவார். ஆனால், முடிவில் ''இதுல இருக்கற சந்தோஷம் படிப்புலயும் இருக்கணும். ரேங்க் கார்டு வரட்டும், அப்ப வச்சுக்கிறேன்!'' என உறுமி விட்டுப்

போவார். பள்ளியில் ஏதாவது பிரச்னை, வீட்டிலிருந்து ஆட்களைக் கூட்டி வா என்றால் பெரிய மாமாதான் வருவார்.

மூன்றாவது படிக்கையில் ஒரு கல்யாணத்துக்கு லீவு சொல்வதற்காக வந்தவர், வாத்தியாரோடு திடீரென்று அன்யோன்யமாகப் பேச ஆரம்பித்துவிட்டார். எனக்கு வயிற்றில் புளியைக் கரைக்க... நினைத்தது போலவே திடீரென மாமா, ''நல்லா அடிச்சு படிக்க வையுங்க சார். இவன் சுமாராத்தான் படிக்கிறான்'' என்றார். வாத்தியாரோ, ''என்ன நீங்க? வாய்க்கு வந்தபடி பேசறீங்க! இவன் சுமாருக்கும் மோசமால்ல படிக்கிறான். ஒரு நிமிஷம்! அந்த ரேங்க் கார்டுகளை எடுத்துட்டு வாப்பா!'' என்றார் இன்னொரு பையனிடம்.

நல்லா மார்க் எடுத்துட்டு, சேத்து காட்டலாம்னு நினைச்சேன்!'' என்றேன் பயத்தோடு. வாத்தியார் கடும் கோபமாக, ''ரேங்க் கார்டு தராதவங்களைக் கை தூக்கச் சொன்னப்ப ஏன் தூக்கல?'' என்றார். நான் கேனத்தனமாக, ''நீங்க சொன்னது சரியா காதுல கேட்கலை'' என்றேன். ஒரு டைனோசரை இரு தரப்பினரும் மாறி

முப்படைத் தளபதிகளும்... ஒரு சுண்டெலியும்!

அதற்குள் நான் மாமாவிடம், ''இனி நல்லா படிப்பேன் மாமா'' என்றேன். திரும்பி ஒருமுறை முறைத்தார். ரேங்க் கார்டுகள் வந்தால் எனது கார்டை மட்டும் காணோம். தேடு தேடு எனத் தேடினார்கள். எப்படி இருக்கும்? ஒரு மாதத்துக்கு முன் தந்த ரேங்க் கார்டு என் புத்தகப் பையிலேயேதான் இருந்தது. குறைந்த மார்க் என்பதால் வீட்டிலும் காட்டவில்லை; வகுப்பிலும் தரவில்லை. நாடகத்தை நீட்டிக்க விரும்பாமல் நானே பையிலிருந்து எடுத்துக் கொடுத்தேன். ''ஏன் வீட்ல காட்டலை?'' என்றார் மாமா. ''அடுத்த தடவை

மாறி வெளுத்தார்கள்.

நான் கஷ்டப்பட்ட சமயங்களில் என் தோள் பிடித்து நின்றவர். பத்தாவதிலும் பன்னிரண்டாவதிலும் சுமாரான மார்க்தான் (அறுபது பர்ஸன்ட்) எடுத்தேன். அடுத்து, சீட் வாங்க சிரமப்பட்டு நிற்கும் இடங்களில் அவர்தான் உடன் இருந்தார். ''எதுக்குடா முகம் இப்படியிருக்கு? படிப்பு மட்டும் வாழ்க்கையில்லை. இருந்தாலும் படிக்கிற காலத்தில் உன் கடமையை நல்லா செய்! பின்னால பாத்துக்குவோம்!'' என்பார் நம்பிக்



* ஆறுமுகம்



* சித்தனாதன்

கையோடு. இந்த மாதம் வேலையிலிருந்து ரிடையர்ட் ஆகிறார். ஆனால், எனக்கு வழி காட்டுவதிலும் உற்சாகமூட்டு வதிலும் என்றுமே ரிட்டையர்ட் ஆகாதவர்.

கலையும் கலை சார்ந்த பகுதி களிலும் ஆர்வமுள்ளவர் இரண்டாவது மாமா ஆறுமுகம். என்னை அடிக்கும் விஷயத்திலும் இவருக்கு இரண்டாம் இடம்தான். இவரும் BSNL-ல் டி.எம். ஓ.வாக உள்ளார். கலை ஆர்வலர் என்பதா லேயே இவருடன் எனக்கு நெருக்கம் அதிகம்.

ஒருமுறை வீட்டுக்கு வந்தவரிடம் என் அம்மா, ''இவனை என்ன பண்றதுன்னே தெரியலை ஆறுமுகம். எப்பப்பாரு படிக் காம வரைஞ்சுட்டே இருக்கான். அலமாரி பூராவும் படம்தான். நீயே சொல்லு!'' என்றதும் மாமா முறைப்பு குறையாமல் படங்களை எடுத்துப் பார்த்தார். பார்த்து ரசித்தவர், ''விடுக்கா! ஒரே குடும்பத்துல எல்லாரும் கலெக்டர் ஆகி என்ன பண்ணப் போறோம்? அவனாச்சும் பிடிச்சதப் பண் ணட்டும்'' என்றவர், சிலோன் சிட்டி ஸ்டோருக்குக் கூட்டிப் போனார். ''என்ன கலர் பாக்ஸ்டா வேணும்?'' எனக் கேட்க, நான் பயத்தோடு, ''வாட்டர் கலர் வேணும்'' என்றேன். வாங்கிக் கொடுத்தவர் உடனே, ''ஆனா ஒழுங்கா படிக்கவும் செய் யணும்... இல்லாட்டி அப்பிரு வேன்!'' என்றார்.

இரண்டாவது படிக்கும் போது பரமேஸ்வரி தியேட் டரில் 'படகோட்டி' படத்துக்குக் கூட்டிப் போனார். விசில்களை முழுங்கிவிட்டார்களோ என நினைக்கும் அளவுக்கு ரசிகர்கள் விசில் அடித்தார்கள். படம் முழுக்க சிகரெட் அட்டைகளைக் கிழித்து சூறை விட்டார்கள். ''படம்னா திரும்பத் திரும்பப் பார்க்க வைக்கணும்! நான் பதினாறாவது தடவை பார்க் கறேன்டா!'' என அவர் அலட்சியமாகச் சொன்னபோது எனக்கு அதிர்ச்சி! சில நாள் கழித்து குல்லா போட்ட ஒருவரையும் எம்.ஜி.ஆர். என்றபோது, 'என்ன மாமா இவரு பேரும் எம்.ஜி.ஆரா?' என்றேன். ''முண்டம், அவரேதான்டா இவரும்... அது இருபது வருஷத்துக்கு முன்னால வந்த படம்!'' என்றார்.

சிறுவர்மலரில் என் ஓவியம் பிரசுர மானபோது என்னைவிட துள்ளிக் குதித் தவர். பரிசுகள் வாங்கும் போதெல்லாம் 'பின்னுடா! சூப்பர்!' என்பார். நிறைய புத்தகம் படிப்பார். என் அண்ணனும் நானும் வாசிப்பதற்கு பெரிய இன்ஸ் பிரேஷனாக இருந்தவர். ஆங்கிலப் படங் களைப் பார்த்துவிட்டு வந்து கதை சொல்லு வார். ''வாழ்க்கைய ரசிச்சு என்ஜாய் பண் ணணும்டா! உலகம் பத்தின எக்ஸ்பீரி யன்ஸ்தான் உண்மையான சொத்து!''

மூன்றாவது மாமா பாலகிருஷ்ணன். இப்போது ரயில்வேயில் கெஸடட் ரேங்கில் (மானேஜர்) உள்ளார். என்னை வெளுப்பதில் இவருக்குத்தான் முதலிடம்.



படிப்பில் நிறைய ஆர்வம் உள்ளவர். என் அண்ணனும், தம்பியும் (சித்தி பையன்) நன்கு படித்துவிடுவார்கள். நான் மட்டும் தான் இவரிடம் மாட்டுவேன்.

இங்கிலீஷ் கிராமரில் இவரிடம் மாட்டி நான் தெருத்தெருவாக ஓடியிருக்கிறேன். பாவம், உயிரைக் கொடுத்துச் சொல்லித் தருவார். நான் கவனிக்கவே மாட்டேன். நடு ரோட்டில் என்னைப் பார்த்துவிட்டால், வழி மறைத்து, "Present Perfect Tense-க்கும் Past Perfect Tenseக்கும் என்ன வித்தியாசம்?'' என்பார். எனக்கு முழுதாக ஃபியூஸ் போய்விடும். ''வீட்ல வந்து சொல்றேன் மாமா!'' என்பேன். விடாமல் வீட்டுக்கும் வந்து என்னை நொறுக்கி எடுப்பார். "தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் சொல்ல வேணாமா?'' என்பார். என்னைக் கலெக்டர் ஆக்கியே தீருவது எனத் துவைத்து எடுத்தார். நானும் மாய்ந்து மாய்ந்து படிப்பேன். பார்ப்பவர்கள் பரிதாபத்துடன், ''இவன் கலெக்டர் ஆகலைன்னாலும் சப்-கலெக்டராவாச்சும் ஆயிடுவான்பா'' என நினைத்திருப்பார்கள். என் லட்சணம் எனக்குத்தானே தெரியும்.

அவ்வளவு லாகவமாக ஆங்கிலம் பேசுவார். பயங்கர கம்யூனிகேஷன் பவர் உண்டு. எதுவும் புரியாத அம்மாச்சி, அத்தை, குழந்தைகளிடம் தன் ஆஃபீஸ் பிரச்னையை (ரயில்வே சிக்னல் பற்றிய படு டெக்னிக்கல் பிரச்னை) 'அடுத்து என்னவாகும்... என்னவாகும்...' என அவர்களை எதிர்பார்க்க வைத்துச் சொல்லி முடிப்பார். இவரிடம் இருந்துதான் நான் கதை சொல்லக் கற்றுக்கொண்டேன் எனலாம். ''மக்கள் தொடர்புதான் முக்கியம். எப்படி நாம மத்தவங்ககிட்ட பேசுறோம்ங்கறதுலதான் ஒரு மனுஷனின் அடிப்படை வெற்றி இருக்கு!'' என்பார்.

சென்னைக்கு இவர் மாற்றலாகி வந்தபோது, சில வருடங்கள் இருவரும் ஒரே வீட்டில் தங்கினோம்.

படிப்பு மட்டும் வாழ்க்கையில்லை. இருந்தாலும் படிக்கிற காலத்தில் உன் கடமையை நல்லா செய்! பின்னால் பார்த்துக்குவோம்!

அப்போது நான் உதவி இயக்குநர். நிறைய தத்துவார்த்தமாக, நண்பர்களாகப் பல இரவுகள் பேசினோம். உற்சாகமான தருணங்கள் அவை.

உறவுகள் இனியவை. இந்த முப்படைத் தளபதிகள்தான் ஒரு அடங்காத பக்கியை ஆற்றுப்படுத்தியது எல்லாம்! என் பாதையைத் தீர்மானிக்க உண்மையாகப் பிரியப்பட்டவர்கள். குடும்ப உறவின் கடமையைப் புரிய வைத்தவர்கள். 'புலிகேசி' பட வெற்றி விழாவின்போது, சென்னை வந்திருந்து மிக சந்தோஷப்பட்டார்கள். இப்படி மாமாக்கள் கிடைத்த நான் பாக்கியவான்!

(பேசுவேன்)

காம்ப்ளான் கதை

'தலை'க்கு மேல்

எபிசோடு 1: மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் உள்ள சிறிய கிராமம் மேலப்பாதி. அந்தக் கிராமத்தில் வசித்த முடிவெட்டும் தொழிலாளி ஒருவருக்கு ஏழு குழந்தைகள். சொற்ப வருமானத்தில் கஷ்ட ஜீவனம்தான். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த மூத்தமகன் பாண்டியனுக்குப் படிப்பு ஏறவில்லை. ''உனக்கோ படிப்பு வரலை. பேசாம பள்ளிக்கூடம் இல்லாத நேரத்துல என்கூட கடைக்கு வந்து தொழில் கத்துக்க. அது உனக்கு என்னிக்கும் சோறு போடும்'' என்று அப்பா புத்திமதி சொன்னார். மகனுக்கும் அது சரியாகப்பட்டது.

எபிசோடு 2: அந்தக் கிராமத்தில் அம்பாஸிடர் கார் நுழைந்தபோது, ஊரே ஆச்சரியமாகப் பார்த்தது. பாண்டியன் மட்டும் விதிவிலக்கா என்ன?



காரிலிருந்து இறங்கிய மனிதர் பட்டணத்து ஆஃபீஸர் போல நேர்த்தியாக உடை அணிந்திருந்தார். பாண்டியன் தன் அப்பாவிடம், ''யாருப்பா?'' என்று கேட்க, அவர், ''நம்ம சொந்தக்காரருதான்! மெட்ராஸில் சலூன் வெச்சிருக்கார்'' என்றார். பையனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அடுத்தமுறை கையில் கத்தரிக்கோலை எடுத்தபோது, கனவு கண்டான் பாண்டியன். தானும் பட்டணத்தில் சலூன் நடத்தி, நிறைய பணம் சம்பாதித்து, சொந்தக் கிராமத்துக்கு காரில் வந்து இறங்குவது போல.

எபிசோடு 3: சென்னையில் சலூன் நடத்திவந்த மேலப்பாதி கிராமத்துக்காரர் ஒருவர் திடீரென்று மரணமடைந்துவிட, அவருடைய மனைவி, 'ஊரிலிருந்து நம்பிக்கைக்குரியவராக யாரையாவது சலூனைப் பார்த்துக் கொள்ள அனுப்பி வைக்கமுடியுமா?' என்று கடிதம் எழுத, உடனே பாண்டியன் சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் இருந்த அந்த சலூனுக்கு வந்து சேர்ந்தான்.

* வடிவேலுக்கு சிகையலங்காரம்...




எபிசோடு 4: பாண்டியன் வேலை பார்த்த சலூனில் சிறு பிரச்னை. அங்கே வேலையை விட்டு விட்டு, எதிரே இருந்த பெட்ரோல் பங்க்கில் ரெகுலராக காருக்கு பெட்ரோல் போட வரும் ஒரு பிரபல சலூன் கடைக்காரரிடம் வேலை. முந்தைய சம்பளத்தைவிட நூறு ரூபாய் குறைவு. ஆறு மாதத்துக்கு எடுபிடி வேலைதான். இருந்தும் பாண்டியன் பொறுமை இழக்கவில்லை.

எபிசோடு 5: ''வேலை இல்லாமல் சும்மா நின்றுகொண்டிருந்தாலும் மற்றவர்

கள் முடிவெட்டுவதைக் கூர்ந்து கவனித்தேன். கஸ்டமரது அருகில் நின்று முடி வெட்டும்போது நமது மூச்சுக் காற்று அவர் மீது படக்கூடாது. அவர்கள் ஏதாவது கேட்டால் பதில் சொல்ல வேண்டும் என்பது போன்ற சின்னச் சின்ன விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். ஆறு மாதங்களில் கத்திரி பிடித்தேன். எனது திறமையைக் காட்டி, நல்ல பெயர் எடுத்தேன்'' என்கிறார் பாண்டியன்.

எபிசோடு 6: பாண்டியனுக்குத் திருமணமானது. சொந்தமாகத் தொழில் தொடங்க சென்னை தி.நகர் பாண்டி பஜாரில் உள்ள ஒரு கமர்ஷியல் காம்ப்ளெக்சில் இடம் கிடைத்தது. அட்வான்ஸ், உபகரணங்கள், உள் அலங்காரம், குளிர்சாதனம் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் தேவைப்பட்டது. கடன் வாங்கினார். ''என்னை மிகவும் பிடித்த ஒரு கஸ்டமர்தான் ''கவலைப்படாதே!'' என்று கடையில் ஏ.சி. பொருத்தி, ஆறாயிரம் ரூபாய்க்கு பெரிய சைஸ் கண்ணாடி வாங்கிக் கொடுத்தார். 'ராஜ் பாண்டியன் ஹேர் ஸ்டைலிஸ்ட்' உதயமாயிற்று.''

* நடிகர் குணாலுக்கு...



வெற்றி!

எபிசோடு 7: இன்று தி.நகர் தவிர, வேளச்சேரி யிலும் ஒரு கிளை இருக்கிறது. கே.எஸ்.ரவிகுமார், அகத்தியன், ஆர்.வி.உதயகுமார், சுந்தர் சி, சேயார் போன்ற திரைப்பட இயக்குநர்கள் இவருடைய பெருமைக்குரிய கஸ்டமர்கள். இது தவிர பல்வேறு நடிகர்களுக்கும் திரைப் படங்களில் அவர்கள் ஏற்று நடிக்கும் கேரக்டர்களுக்கு ஏற்ப, வித்தியாசமாகவும், ரசிகர்கள் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் ஹேர் ஸ்டைல் அமைத்துத் தருகிறார் ராஜ் பாண்டியன். வேதம் - அர்ஜுன் முதல் சுப்ரமணியபுரம் - ஜெய் வரை.

எபிசோடு 8: ''நான் கடந்துவந்த பாதையை இன்று நினைத்துப் பார்க்கிறபோது, முன்னுக்கு வர வேண்டும், சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று முயற்சித்த போது, என்னைவிட என் மீது அதிக நம்பிக்கை வைத்த கஸ்டமர் நண்பரைத் தான் நினைவு கூர்வேன். கடையில் இருக்கும் கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கிறபோதெல்லாம் எனக்குத் தெரிவது அவருடைய முகம்தான்!''



* 'பேரழகன்' படப்பிடிப்பில்...

- எஸ். சந்திரமௌலி

அமெரிக்காவில் ஹாலிவுட் இயக்குநராக இருக்கும் தமிழரான சுவாமிகந்தனுடன் தங்கர்பச்சான் சந்தித்துப் பேசிய உரையாடல்...



சுவாமிகந்தனுடன் தங்கர்பச்சான்...

தங்கர்: தமிழகத்தில் பிறந்த நீங்கள், ஹாலிவுட்டில் எழுத்தாளராக, இயக்குநராக இருப்பது எங்களுக்கு மிகப்பெரிய கௌரவம். உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.

சுவாமி: என்னுடைய சொந்த ஊர் சேலம் மாவட்டம் மேட்டூர். விவசாயக் குடும்பம்தான். படிச்சது திருச்சி. 81ல் அடையாறு ஃபிலிம் இன்ஸ்ட்டியூட்டில் சேர்ந்தேன். இப்ப டீனாக இருக்கிற லோகநாதன், அப்ப சவுண்ட் டிபார்ட்மென்ட்டில் இருந்தார். அவருடைய மாணவர்கள் ஒரு மலையாளப்படம் ஸ்டார்ட் பண்ணினாங்க. லோகநாதன் சொன்னதால, அதில் நான் ஆபரேட்டிவ் கேமராமேனாக வொர்க் பண்ணினேன். அந்தப் படம் சரியாகப் போகலை. அப்புறம் சில படங்களில் உதவிஇயக்குநராக வொர்க் பண்ணினேன். எல்லாம் தோல்விதான். தோல்வி என்னை ரொம்ப சிந்திக்க வைச்சது. திரும்பவும் திருச்சிக்கே போய், எம்.எஸ்.சி முடிச்சுட்டு அமெரிக்காவுல எம்.பி.ஏ. ஃபிலிம் மார்க்கெட்டிங் படிச்சேன். பிறகுதான் முடிச்சிட்டு முதல் கதையை எழுதினேன். அது சயின்ஸ் ஃபிக்ஷன்.

தங்கர்: என்ன மாதிரியான படம்??

சுவாமி: ப்யூர் த்ரில்லர். சயின்ஸ் ஃபிக்‌ஷன் அண்ட் த்ரில்லர் காம்பினேஷன்தான் பார்த்திருப்பீங்க. அல்லது த்ரில்லராகத்தான் பார்த்திருப்பீங்க. இரண்டும் கலந்த கலவை அது. ஆனால், என்னுடைய முதல் படம். கேச் யூவர் மைன்ட். குடும்ப சம்பந்தமான கதை அமைப்பை உடையது.

தங்கர்: இந்தப் படத்தோட கருத்தை சுருக்கமாகச் சொல்லுங்க?

சுவாமி: உன்னோட டீன் ஏஜ் பருவத்துல கேர்ஃபுல்லா இருக்கணும். இல்லைன்னா லைஃப் போயிடும். மனத்தைக் கட்டுப்படுத்த தெரிஞ்சுக்கணும். இந்த மெஸேஜ்தான் படத்தோட கருத்து. உங்கள் கேமரா திறமையைப் பார்த்துட்டு, இந்தப் படத்துல ஒர்க் பண்ண உங்களைக் கேட்டேன். நீங்க டேட் ஒதுக்க முடியாம மறுத்துட்டீங்க. அதுல எனக்கு வருத்தம்.

தங்கர்: அண்மைக்காலத் தமிழ் சினிமா பார்த்தீங்களா?

சுவாமி: எனக்கு தமிழ் சினிமா பார்க்க டைம் இல்லை. ஒன்று இரண்டு இங்கிலீஷ் அல்லது ஹாலிவுட் படங்கள்தான் பாத்திருக்கேன். என்னோட பையனும் பொண்ணும் கட்டாயப்படுத்தி கூட்டிட்டுப் போனாங்க. 'சொல்ல மறந்த கதை' ஒரு பீஸ் பார்த்தேன். அருமையான படம். நான் பார்த்தவரையில் என்னுடைய மனசுக்குள்ள உட்கார்ந்து பஞ்ச் பண்ணின படம்.

தங்கர்: உங்களுடைய எதிர்காலத்

ஒட்டம் பற்றிச் சொல்லுங்க?

சுவாமி: அடுத்து த்ரில்லர் படம் பண்ணப் போறேன். படத்தோட பேரு 'ரூட் ஐ 95'. நம்ம ஊர்ல ரூட்னு சொல்வாங்க. இந்த ஊருல ரவுட் ஐ 95. பாஸ்டன்லருந்து மியாமி வரையும் அதாவது ஃப்ளோரிடாவை இணைக்கிற சாலை. அந்தச் சாலையைத் தலைப்பா வைச்சிருக்கேன். கெஷன்பேக்ன்னு ஒரு ஆக்டர் 65, 70 படம் பண்ணியிருக்கார். கிறிஸ்டியன்ஸ் லாரல் அப்படிங்கிற ஆர்டிஸ்ட். வாக்ல்மேட் பேட்மேன், அந்தக் காலத்துல நிறைய படம்

ஹாலிவுட்டில் தங்கர்பச்சான்?



பண்ணியிருக்கார். இந்த மூணு பேர்க்கிட்டயும் டிஸ்கஷன் நடந்துக்கிட்டிருக்கு. மூணு பேருமே ரொம்ப ஆர்வமா இருக்காங்க.

தங்கர்: தமிழ் சினிமாவுல ஒவ்வொரு படத்துக்கும் புதிய படம் மாதிரியே போராடி வர வேண்டியிருக்கு. ஹாலிவுட் புதுசா வர்றவங்களுக்கு எப்படி இருக்கு?

சுவாமி: ஹாலிவுட்ல இந்தியர்களுக்கு மரியாதை இருக்கு. இப்ப நிறைய சீனர்கள் இருக்காங்க. ஆஸ்கர்வரை போயிருக்காங்க. நம்ம இந்தியன் சினி இன்ஸ்டியூட் எவ்வளவோ அச்சீவ் பண்ணிருக்கோம். சேகர் கபூர் வந்திருக்காரு. இங்க ஆஸ்கார் வரைக்கும் ரெகககனைஸ் கிடைக்கல. அந்த இடைவெளியை நிரப்பப் பாக்கறேன். சொல்லப்போனா அடுத்து சயின்ஸ் ஃபிக்ஷன் முடிச்சவுடனே, டாப் இந்தியன் ஆக்டர்ஸ், இந்தியன் டெக்னீஷியன் எல்லாத்தையும் ஒருங்கிணைச்சு, என் சயின்ஸ் பிக்ஷன் படத்துல பயன் படுத்தப் போறேன். இதுல நீங்க கேமரா ஒர்க் பண்ணனும். இது என் நீண்ட நாள் ஆசை!

தங்கர்: தமிழ் மண்ணுலேர்ந்து ஹாலிவுட் திரைப்படத்துறையை நோக்கி வருகிற இளைஞர்களுக்கு உங்களுடைய செய்தி என்ன?

சுவாமி: ஹாலிவுட்ல என்ன மாதிரி ஏரியாவுல நிக்கணும்னு திட்டமிடுங்க, ஆக்டரா வரணும்னா யூ ஹேவ் லாட் ஆஃப் ஒர்க். என்னா உங்களுக்கு மொழி பிரச்னை கண்டிப்பா இருக்கும். கேமராவுல வரணுமா? எடிட்டரா வரணுமா? இயக்குநரா வரணுமாங்கறத முதல் ஃபிக்ஸ் பண்ணிக்கணும். இங்க நிறைய கோர்ஸ் இருக்கு. ஃபிலிம் இன்ஸ்டிடியூட்லயும் சரியான கோர்ஸ் எடுத்துக்கங்க. வெற்றி நிச்சயம்!

- ஜானகிராமன்

அஞ்சுகுடிக்கொரு சந்ததி!

மஹாவிஷ்ணு வராஹப் பெருமானாக அவதரித்து, பூமியில் பல அக்கிரமங்களை நிகழ்த்திய ஹிரண்யாக்ஷன் என்கிற அசுரனை முடித்தான். பூமிப் பிராட்டியை ரக்ஷித்தான். அவளைத் தன் மடியிலே அமர்த்தி, அவள் திருமேனியை அணைத்துக்கொண்டான். பிராட்டிக்குப் பயம் நீர்ந்தது; நடுக்கம் அடங்கிற்று. ஆனாலும் அவள் மனத்திலே ஓர் ஆசை. ''ஹிரண்யாக்ஷனாலே நான் மறைக்கப்பட்டேன். ஸமுத்திரத்திலே ஒளித்து வைக்கப்பட்டேன். நீ வராஹப் பெருமானாக அவதரித்து என்னை ரக்ஷித்துவிட்டாய். ஆனால், என்னை மட்டும் காத்தால் போதுமா? நம்முடைய அடியார்கள் அத்தனை பேரையும் ரக்ஷிக்க வேண்டாமா? உன்னை அடைவதற்கு வழி தெரியாமல் துன்பப்படுகிறார்களே?'' என்று பெருமானிடம் கேட்டாள்.



பெருமானும் அவர்களுக்கு ஏற்றாற் போன்றதொரு எளிய உயர்ந்த வழி, கலியுகத்திலும் பின்பற்றத் தக்க வழியை, பூமிப்பிராட்டி மூலமாக உலகத்தாருக்கு வழங்கினான். உள்ளத் தூய்மையுடன் அவனை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து, கைகளால் தூமலர்த் தூவித்தொழும் அந்த மார்க்கத்தைத்தான் பூமிப்பிராட்டி ஆண்டாளாகத் திருஅவதாரம் செய்து, நடத்திக்காட்டினாள். மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் கடைப்பிடிக்கவேண்டிய எளிய வழியையே, தனது திருப்பாவை முப்பது பாசுரங்களிலும், 143 பாசுரங்கள் கொண்ட நாச்சியார் திருமொழி மூலமும் விளக்கினாள்.

ஆண்டாள், பூமிப்பிராட்டியாக உபதேசம்பெற்ற ஊரே ஸ்ரீவில்லிபுத்தூர். வராஹக்ஷேத்திரம். ஆண்டாளுடைய திருஅவதார ஸ்தலமும்கூட.

இரண்டு ஆழ்வார்கள் அவதரித்தனர் என்பதே ஸ்ரீவில்லிபுத்தூரின் தனிச் சிறப்பு. பெரியாழ்வாரும் இங்குதான் பிறந்தார்; அவருடைய திருக்குமாரத்தியாக ஆண்டாளும் இங்குதான் தோன்றினாள். ஒரு தாயின் கர்ப்பத் தொடர்பு இல்லாமல் *'துளஸீகானனோத்பவா'* என்று சொல்கிற படிக்கு, துளஸிவனத்தில், துளஸிச் செடியருகே கண்டெடுக்கப்பட்டாள்.

இன்றும் நாம் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்

கண்ணனைத் தேடி... 19

வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் ஸ்வாமிகள்

றால், அந்தத் துளஸிவனம் இருந்த இடத்தையும் துளஸிச் செடிகளையும் பார்க்கலாம். அந்தத் துளஸிச் செடியையும் அவதார ஸ்தலத்தையும் ஸேவித்துக் கொள்வதே ஒரு பாக்கியம்.

ஆண்டாளுடைய ஆஸ்தானமான ஸ்ரீவில்லிபுத்தூரில், வடபெருங் கோயிலுடையான் திருக்கோயில் இருக்கிறது. வடபத்ரசாயி என்றும் வடமஹாதாமன் என்றும் இப்பெருமானுக்குத் திருநாமம். இவர்தான் மூலமூர்த்தி. இவருடைய ஏற்றம் என்ன என்பதைப் பார்ப்போம்.

சரகர் என்று ஒரு முனிவர். விதி வசத்தாலே அவர் வேடனாகப் பிறந்து, வழிப்போக்கர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார். அப்போது அந்த வேடனை



அடித்து ஒழிப்பதற்காக இரண்டு பேர் வந்தார்கள். தன் தவறை உணர்ந்த அவ்வேடன், அச்சமயம் தன் குருவினிடத்திலே சென்று பேசினான். அவர் அவனிடம், ''கவலைப்படாதே! உன்னை நான் காக்கிறேன். இவ்விருவரும் அடுத்த பிறவி எடுப்பார்கள் - வில்லி, கண்டன் என்கிற பெயர்களுடன் பிறப்பார்கள்'' என்றார்.

அதேபோல் வில்லி - கண்டனாக அந்த இருவரும் பிறந்தனர். காட்டில் வேட்டையாடச் சென்றபோது, ஒரு புலியைத் துரத்திக்கொண்டு போனார்கள். ஒரு கட்டத்தில் வழி திகைத்துப் பிரிந்து போனார்கள். வில்லி ஒருபுறம், கண்டன் ஒருபுறம் பிரிந்தார்கள். கண்டனைப் புலி இழுத்துப் போய் அடித்துப் போட்டுவிட்டது. வில்லி, 'எவ்வளவு தேடியும் கண்டன் கிடைக்கவில்லை' என்கிற வருத்தத்துடனேயே இரவு கண்ணுறங்கினான். அப்போது பகவான் அவனுடைய ஸ்வப்பனத்திலே வந்து, நடந்தவற்றைச் சொல்லி, ''கண்டன் அதோ இருக்கிறான். அவனுக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளைச் செய்துவிட்டு, நீ இந்த இடத்திலேயே ஓர் ஊரை உருவாக்குவாயாக. எனக்கென்று ஒரு கோயிலை ஏற்படுத்துவாயாக'' என்று சொன்னார்.



வில்லி காட்டைத் திருத்தி நாடாக்கினான். அவன் புதிதாக நிர்மாணித்த ஊர் வில்லி-புத்தூர். 'ஸ்ரீ' என்கிற நாச்சியாருடைய ஊராக இருப்பதனாலே ஸ்ரீவில்லிபுத்தூர் என்கிற பெயரோடு விளங்குகிறது.

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில்,

'மென்னடையன்னம் பறந்து
விளையாடும் வில்லிபுத்தூர்
உறைவான் தன்
பொன்னடி காண்பதோர் ஆசையினால்
என்பொரு கயற் கண்ணினை துஞ்சா'

என்கிறாள்!


அன்னப் பறவைகள் களித்து ஆடும் இவ்வூரில் எம்பெருமான் பச்சை நிறத்தில் ஸேவை சாதித்துக்கொண்டிருக்கிறானாம்! பல திவ்யதேசங்களிலே கருத்த திருமேனியுடைய எம்பெருமானைக் காணலாம். ஆனால், இங்கேதான் வடபெருங்கோயிலுடையானுக்கு வர்ணக் கலவையான திருமேனி. சிவந்த உதடுகள், வெளுத்தும் - கருத்தும் சிவந்துமிருக்கிற கண்கள். பல வர்ணங்களில் ஆபரணங்களோடு, நீண்ட கிரீடத்தோடு, பச்சைமாமலை போல் மேனியனாகக் காட்சி தருகிறான். அவனுடைய திருவடிப் பக்கத்தில் வில்லி - கண்டன் ஆகிய இருவரும் இருக்கிறார்கள். மிக உயர்ந்த திருத்தலம். திருப்பாற்கடலில் எப்படி சயனித்துக்கொண்டிருக்கிறானோ, அதே போன்ற திருக்கோலம்.

'ஆலம் பேரிலை அன்னவசம் செய்யும்
அம்மான்;'

'ஆலமாமரத்தின் இலைமேல் ஒரு
பாலகன்'

என்றெல்லாம் ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்களே, அந்தப் பாடல்களுக்கு ஏற்பத்தான் இந்த ஸேவை உள்ளது!

ஸேவிக்க ஸேவிக்க, பாலகனாகவும் நமக்குக் காட்சி தருகிறான்; பரம்பொருளாகவும் பிரமிப்பூட்டுகிறான். அந்த



வடபத்திரசாயி உறைகின்ற கோயிலின் ராஜகோபுரம் நெடிதுயர்ந்தது. அதுவே இன்று நமது தமிழக அரசின் சின்னமாக விளங்குகிறது.

ஆலிலை பாலகனின் திருக்கோயிலில் ஆலமரத்தையும் இன்று காண முடிகிறது. மேலும், திருமுக்குளம் என்ற பெயருடைய திருக்குளத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமிப்பதாக ஐதிஹ்யம். பெருமாள், காலநேமி என்கிற அசுரனை ஸம்ஹாரம் செய்துவிட்டு, குருதி படிந்த தனது சக்ராயுதத்தை சுத்தி செய்ய, இம்மூன்று புனித நதிகளையும் அழைத்தானாம். அவர்கள் இங்கேயே கூடி இருந்துவிட்டார்கள்.

கோதா விலாஸ மண்டபம் - இந்த மண்டபத்தில்தான் மார்கழி மாதத்தில் அத்யயன உத்ஸவத்தின்போது பகல்பத்துத் திருவிழா நடைபெறும்.

'அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்' என்று மணவாள மாமுனிகள் போற்றிய ஆண்டாள், கண்ணனை அடைய ஒரு முக்கியமான வழியைப் பின்பற்றினாள். மார்கழி மாதம் முப்பது நாட்களும் நோன்பு நோற்றாள்.

ஆய்ப்பாடி கோகுலத்தில் இருந்த எல்லாப் பெண்களும், கண்ணனை அடைய வேண்டும் என்ற ஆசையோடு, துவாபர யுகத்தில் மார்கழி நோன்பு நோற்றார்களாம். ''காத்யாயனி தேவியே! கண்ணனை எங்களுக்குக் கணவனாகக் கொடு'' என்று வேண்டினார்களாம். அன்று, துவாபர யுகத்தில் அவர்கள் செய்ததை ஆண்டாள், ஸ்ரீவில்லிபுத்தூரில், கலியுகத்தில் செய்திருக்கிறாள். அதையெல்லாம் நினைவுகூர்ந்து இங்கே ஸ்ரீவில்லிபுத்தூரில் இன்றைக்கும் மார்கழி உத்ஸவம் நடைபெறுகிறது.

ஆண்டாள் சொன்ன திருப்பாவை முப்பதையும் யார் பாடினாலும், இவ்வாலயத்துள்ளே கிடந்துறங்கும் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலின் திருவருள் பெற்று இன்புறுவர்.

ஏகாதசி மண்டபமாகவும் கண்ணாடி அறையாகவும் விளங்கும் மற்றோர் இடத்தினைக் காண்பது பரவசமான அனு



வடபத்திரசாயி உறைகின்ற கோயிலின் ராஜகோபுரம் நெடிதுயர்ந்தது. அதுவே இன்று நமது அரசின் சின்னமாக விளங்குகிறது.

பவம். இக்கோயிலில் பிரதான சன்னிதியில் ரங்கமன்னாரும் ஆண்டாளும், கருடனும் எழுந்தருளி ஸேவை சாதிக்கிறார்கள். அவர்கள் ஏகாதசி தோறும் இந்தக் கண்ணாடி அறையிலே உத்ஸவம் கண்டருள்கிறார்கள்.

பங்குனி மாதத்திலோ திருக்கல்யாண உத்ஸவம். உத்திர நட்சத்திரத்தன்று இதே கண்ணாடி மண்டபத்தில் ஆண்டாள் - ரங்க மன்னார் எழுந்தருள்கிறார்கள்.

ஆண்டாள் - ரங்கமன்னார் உறையும் சன்னிதியின் மேல் உள்ள விமானத்துக்குத் திருப்பாவை விமானம் என்றே பெயர். இந்த விமானத்தைச் சுற்றி இருக்கிற சிற்பங்கள், திருப்பாவை முப்பது பாசுரங்களின் பொருளையும் நம் கண்முன்னே நிறுத்துகின்றன.

ஆண்டாளின் சன்னிதியில் அவளை வணங்கி உருகுகிறோம். இந்தச் சன்னிதிக்கு எதிரே ஒரு தட்டொளி - அதாவது வெண் கலத்திலான ஒரு கண்ணாடி- இருக்கிறது. தினப்படி இரவுப் பொழுதில் ஆண்டாள் மாலை மாற்றிக்கொள்கிறாள். எதிரே உள்ள தட்டொளியில், தன் அழகைப் பார்த்துக் கொள்கிறாள். அதே மாலைதான் மறுநாள் காலை ரங்கமன்னாருக்குச் சார்த்தப்படு கிறது. ஆண்டாள் வாழ்க்கை வரலாற்றிலே வரும் இந்நிகழ்ச்சி இன்றும் தினமும் நடைபெறுகிறது.

சூடிக்கொடுத்த நாச்சியார் என்று பெயர் பெற்றவள் ஆண்டாள்! பெரியாழ்வார், பெருமாளுக்கு மாலை கைங்கர்யம் செய்துவந்தார். பெருமானுக்காக அவர் தொடுத்து வைத்திருந்த மாலையை ஒருநாள் ஆண்டாள் எடுத்தணிந்து அழகு பார்த்துக்கொண்டாள்! அதைத் திரும்பவும் பூக்குடலையிலேயே வைத்துவிட்டாள். அதை எடுத்துச் சென்ற பெரியாழ்வார் அதிலே ஒரு தலைமுடி இருக்கக் கண்டு, அபசாரமாகி விட்டதே என்று மாலையைச் சமர்ப்பிக் காமல் வைத்துவிட்டார். ஆனால், பெருமாள், ஆழ்வாரின் ஸ்வப்பனத்திலே எழுந்தருளி, ''அவளுடைய (ஆண்டாள்) சூடிக்களைந்த மாலை தான் நமக்கு மிகவும் பிடித்தமானது'' என்று சொல்ல, ஆழ்வார் ஆச்சர்யப்பட்டார்; ஆனந்தப்பட்டார்.

அவ்வாறு ஆண்டாள் சூடி அழகு பார்த்த கண்ணாடியைத்தான் அவள் சன்னிதியின் திருமுன்பு நாம் இன்றும் காண்கிறோம்.

இன்னும் காண்பதற்கரிய விஷயங்கள் நிறைந்த இவ்வாலயம் குறித்து மேலும் அடுத்த வாரம் பார்ப்போம்.

(தேடுவோம்)

படங்கள் : **ஸ்ரீஹரி**

சித்திரம்: **வேதா**

அஸ்திவாரம்... அபாரம்...



வட்டமேஜை

எல்லாரும் உன்னிப்பாக தமிழகத்தில் கவனிப்பது, காம்ரேடுகளின் நடவடிக்கைகளைத்தான். கலக்குவது யார்? கலங்கப் போவது யார்? பாணியில்தான் உள்ளது, அவர்கள் பேச்சு.

- ஆர்.பழனிக்குமார், மதுரை - 14

'சொந்த சகோதரர் மீது போர்' தலையங்க செய்தியைப் படித்தவுடன் என்னை அறியாமலேயே கண்ணீர் வந்துவிட்டது.

- த. புகழேந்தி, கூகூர்

இளைய தலைமுறையினரை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு புது இரத்தம் செலுத்தும் நீல ரத்தம் அமைப்பினருக்குப் பாராட்டுகள்.

- ரேவதி ப்ரியன், ஈரோடு

ஆழமான நட்பு, நேர்மையான வியாபாரம், மத ஒற்றுமை மூன்றும், கருத்துள்ள கதையம்சத்துடன் இணைந்து, மனநிறைவைத் தந்த 'அஸ்திவாரம்' சிறுகதை அபாரம்.

- துரை. சுப்பிரமணியன், அவிநாசி

'ஜாலி ஸ்டோர்ஸ்', செம ரகளை! மற்றவர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் போட்டி மட்டும் ஒலிம்பிக்கில் இருந்திருந்தால், அதில் உங்களுக்குத்தான் தங்கப்பதக்கம்.

- வி.என்.கதிர்வேல், வேலூர் - 6

'தி ஐ பவுண்டேஷன்' பற்றிய செய்திகள் வியக்க வைத்தது! நன்றி.

- அ.முரளிதரன், மதுரை - 3

செய்யும் தொழிலில் ஈடுபாடும் உற்சாகமும் கொண்ட விஜய்யின் வெற்றி தொடரட்டும்!

- ஆர். பிரகாஷ், பொன்மலை

'கல்கி' எல்லாக் கடையிலும் கிடைப்பதில்லையே' என்ற என் நண்பனுக்கு, 'வைரம் எல்லாக் கடைகளிலும் கிடைக்காது' என்றேன்.

- ச.நாகரத்தினம், திருப்பூர்

அமரர் கல்கியின் 'அலைஓசை' இரண்டு வாரங்களாக ரேடியோவில் அஞ்சல். மிகவும் நன்றி. இதுபோல் டி.வி.யில் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பு செய்தால் இந்தத் தலைமுறை மக்கள் பார்க்க வாய்ப்பு ஏற்படும்.


- காமாட்சி, சென்னை

'பேராண்மை' கதை உளவியல் முறையில் ஒரு அலசல். அதற்கு வடிவம் தந்ததுபோல் கதை! கல்கியின் தேர்வுக்குப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

- எஸ்.ஜானகி, உடுமலை

நூறு சதவிகித 'நெசவு கட்டணத் தொகை' உயர்வு கோரி, தொடர் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் கோவை மாவட்ட விசைத்தறியாளர்கள். இதனால், கோவை மாவட்டத்தில் மட்டும் தினசரி கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான ஜவுளி உற்பத்தி முடங்கிப் போயுள்ளது. நான்கு லட்சம் விசைத்தறி தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழந்துள்ளனர்.

''ஜவுளி உற்பத்தியாளர்கள், சைஸிங் பிராசஸ் ஆன நூல் கண்டுகளை எங்களைப் போன்ற விசைத்தறி உரிமையாளர்ட்ட கொண்டாந்து தருவாங்க. அதை நாங்க துணியா நெய்ஞ்சு தரணும். இதுக்கு அவங்க ஒரு குறிப்பிட்ட தொகையை 'நெசவுக்குரிய கட்டணத் தொகை'யா எங்களுக்குத் தருவாங்க. அதில் எந்திரப் பராமரிப்பு, மின் கட்டணம், போக்குவரத்துச் செலவு, விசைத்தறி தொழிலாளர் கூலின்னு எல்லாத்துக்கும் பார்த்தாகணும்.



''கடந்த பத்துப் புதினஞ்சு வருஷமா விசைத்தறி நெசவுத் தொழிலைக் கத்துக்க, புதுசா யாரும் வர்றதே இல்லை.''

மூணு வருஷத்துக்கு முன்னாடி தந்து வந்த கட்டணத் தொகையைத்தான், ஜவுளி உற்பத்தியாளர்கள் இப்பவும் தர்றாங்க. அதான் எங்களுக்குக் கட்டுப்படியாகலை. கட்டணத் தொகை உயர்வு கேட்டுத்தான் இந்தப் போராட்டம்'' என்கிறார் விசைத்தறி உரிமையாளர் கருப்பசாமி.

''விசைத்தறி உரிமையாளர்களுக்கு நெசவுக் கட்டணம் உயர்த்தி தந்தாத்தான், அதனை அடிப்படையா வைச்சு எங்களோட கூலியும் அதிகமாகும். விசைத்தறி தொழிலாளி மூணு வருஷத்துக்கு முன்னாடி என்ன கூலி வாங்கினானோ, அதையே தான் இப்பவும் வாங்கி வர்றான். மூணு வருஷத்துக்கு முன்னாடி அரிசி, புளி, என்ன விலை? இன்னைக்கு என்ன விலை? இது விசைத்தறி உரிமையாளர் போராட்டம் மட்டுமல்ல; விசைத்தறி



❋ ப.முத்துசாமி



❋ கருப்பசாமி



லாட்டி எங்களோட முடிஞ்சு போயிடும்!'' என்கிறார் விசைத்தறி தொழிலாளியும், மங்கலம் ஊராட்சிமன்ற வார்டு உறுப்பினரு மான முருகேசன்.

''ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும், விசைத்தறி உரிமையாளர்களுக்கும் இடை யிலான நெசவுக் கட்டண உயர்வு போராட் டம் இது. நெசவுக் கட்டணம் உயர்ந் திச்சுன்னா இயல்பாவே விசைத்தறி தொழி லாளியோட கூலியும் உயர்ந்து போகும். இப்ப இந்த நாலஞ்சு நாட்கள்ல அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி சார்பாகவும், இரு

விசைத்தறிக்கு விடிவு பிறக்குமா?

தொழிலாளர்கள் போராட்டமும் கூட!'' என்கிறார் விசைத்தறி தொழிலாளி வேலு சாமி.

கோவை மாவட்டத்தில் இரண்டு லட்சம் விசைத்தறிகள் உள்ளன. இவற்றில் சுமார் நான்கு லட்சம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். விசைத்தறி உரிமை யாளர்கள், விசைத்தறி தொழிலாளிகள் என இரு பிரிவினரும் ரயில் தண்டவாளம் போல. இதனால் இரு தரப்பினரும் இணைந்தே போராடி வருகின்றனர்.

''விசைத்தறி தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு நூத்தி இருபது ரூபாய்க்கு மேல கூலி கிடைக்காது. கடந்த பத்துப் பதி னைந்து வருடங்களாக விசைத்தறி நெசவுத் தொழிலைக் கத்துக்க, புதுசா யாரும் வர்றதே இல்லை. விசைத்தறி கூலிய அதிக மாக்கினாத்தாங்க, இந்த வேலைக்கும் இனிமே புதிய ஆட்கள் வருவாங்க. இல்

தரப்பினரிடையே இரண்டு முறை பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. தற்போது பிரச்னைக்குச் சுமுக தீர்வும், நெசவுக் கட்டண உயர்வும் செய்து தரப்பட வேண்டியது ஜவுளி உற்பத்தியாளர்கள் வசம்தான் உள்ளது!'' என்கிறார் கோவை விசைத்தறி தொழிலாளர்கள் சங்க பொதுச் செயலாளர் ப.முத்துசாமி.

செய்தியும், சித்திரங்களும் :
ஸ்ரீரங்கம் திருநாவு



* முருகேசன்



* வேலுசாமி

ஜாலி ஸ்டோர்ஸ்

"நயன்தாராவுக்குக் கோயில்"

('காசு கொடு... காசு கொடு... கொடுத்த காசைத் திருப்பிக் கொடு' என்று ஒரு கல்யாணமண்டபத்தில் கோஷம் எழுகிறது. அங்கே 'படம் பார்த்து நொந்து போகும் ரசிகர் மன்றங்கள் சங்கம்' என்ற பேனரும் வைக்கப்பட்டிருக்கிறது.)

ரஜினி ரசிகர்: இங்க பாருங்க நம்மளை மாதிரி ரசிகர்களை நம்பித்தான் பூஜையே போடறாங்க.

விஜய் ரசிகர்: டிக்கெட் காசு மட்டும் இல்லாம பாலாபிஷேகத்துக்குப் பத்து வட்டிக்கு வாங்கிப் பட்டையைக் கிளப்பறோம். ஆனா பாலெல்லாம் 'பாழாப்' போகுது!

விஜய்காந்த் ரசிகர்: நஷ்டம் அடைந்த விநியோகஸ்தர்கள் மாதிரி நம்ம டிக்கெட் பணத்துல பாதியைக் கேட்போம்.

அஜித் ரசிகர்: ஆமாங்க... இவங்களை நம்பி 'சூப்பர் படம் வந்து பாரு'ன்னு என் ஃபிகரைக் கூட்டிட்டுப் போனேன். படம் செம ஊத்தல். அன்னையோட என் காதலே கசங்கிப் போச்சி.

விஜயகாந்த் ரசிகர்: நாங்களும் எங்க கேப்டன் கிட்ட 'படமெல்லாம் வேணாம். அரசியல் மட்டும் போதும்'னு சொன்னா கேக்கறாரா... இன்னும் பயமுறுத்திக்கிட்டேதானே இருக்காரு.

ரஜினி ரசிகர்: சூப்பர் ஸ்டார் அரசியல் ஆசையெல்லாம் துடைச்சித் தூரப் போட்டுட்டு பேரன்கூட கொஞ்சறதைத் தான் பெரிசா எடுத்துக்கிட்டு இருக்காரு.

உத்தமபுத்திரன்

அவருகிட்ட 'குசேலன்' படம் பார்த்ததுக்கான பணத்தைக் கேட்கப் போறோம்.

விஷால் ரசிகர்: நாங்க 'சத்யம்' படத்துக்குச் செலவழிச்ச பணத்தை வாங்காம விடமாட்டோம்.

தனுஷ் ரசிகர் : அதான் கொடுத்த காசுக்கு நயன்தாரா கிளாமர் காட்சி இருந்ததுல்ல...

விஷால் ரசிகர்: யோவ்... கடுப்பைக் கிளப்பாதய்யா... அப்படித்தான் உள்ளே போனோம். ஆனா ஒரு சீன் கூட எதிர்பார்த்த மாதிரியில்லை. எடுத்த எல்லா காட்சியும் வந்திருந்தா, நயன்தாராவுக்கு கோயிலும், எங்கப்பனுக்கு மொட்டை அடிக்கிறதாவும் வேண்டிகிட்டேன். எல்லாம் போச்சு.

(அப்போது கூட்டத்திலிருந்து சிலர் எழுந்து போகின்றனர்)

விஜய் ரசிகர்: யோவ்... எங்க போறீங்க? இன்னும் கூட்டம் முடியலையே?

ரித்தீஷ் ரசிகர்: நாங்க இந்தச் சங்கத்துல கலந்துக்க முடியாது. நாங்கெல்லாம் வீரத் தளபதி ரித்தீஷ் ரசிகர்கள்.

அஜீத் ரசிகர்: அவரு படம் பிச்சுக்கிட்டா ஓடுது?

ரித்தீஷ் ரசிகர்: அதில்லைங்க... அவர் படத்துக்கு, க்யூவுல நின்னா ஒரு காசு... படம் பார்த்தா ஒரு காசு... விசிலடிச்சா ஒரு காசு...தெரியாதா உனக்கு?

விஜய்காந்த் ரசிகர்: பேசாம நாமளும் ரித்தீஷ் ரசிகனா சேர்ந்துடலாமா?!

(இந்தக் கூட்டத்தைக் கேள்விப்பட்டு மண்டபத்துக்கு கே.எஸ். ரவிக்குமார்,



ப்பனுக்கு மொட்டை..!”

ஷங்கர், பிரபுதேவா வருகின்றனர்.)

ஷங்கர்: என்ன திடீர்னு கூட்டம்?

கே.எஸ் : ஏதோ டிக்கெட் காசையெல்லாம் திருப்பிக் கேட்டீங்களாமே... கொடுத்துடுவமா என்ன?

(அப்போது ஷங்கர் 'ரோபோ'வுக்கு எடுத்த ரஜினியின் புது கெட்டப் ஸ்டில்களையும், 'ஜக்குபாய்' பட புதிய ஸ்டில்களை கே.எஸ்.ரவிக்குமாரும், 'வில்' படத்தோட விஜய் ஸ்டில்களை பிரபுதேவாவும் காட்ட...)

ரஜினி ரசிகர்: ஐயோ... தலைவா... ரோபோன்னா சும்மாவா.. ரஜினியின்னா சும்மாவா...

(அவரவர் ஹீரோக்களின் ஸ்டில்களை ரசிகர்கள் கையில் வைத்துக்கொண்டு குத்தாட்டம் போடுகின்றனர்.)

ஷங்கர்: இவனுங்களுக்கு இப்படித்தான் வலிக்காம ஆப்பு அடிக்கணும். இல்லேன்னா நாம கதையே இல்லாம படம் பண்ண முடியுமா?

கே.எஸ்: சரியா சொன்னீங்க ஷங்கர்.

(அப்போது ரித்தீஷ் அடுத்த படமான 'தளபதி' படத்தின் மண்டப உயரத்து அவரது ஸ்டில்லைக் கொண்டு வந்து)

ரித்தீஷ்: என்னோட புதுப் பட ஸ்டில்லை அஞ்சு நிமிஷம் இமைக்காம பார்க்கிற ஒவ்வொருத்தருக்கும் மூவாயிரம் பணம் தருவேன்.

(கடுப்பான மூவரும் காரில் ஏறிச் செல்கின்றனர். மண்டபத்துக்குள் 'உலக சூப்பர் அல்டிமேட் தளபதி' ரித்தீஷ் வாழ்க... வாழ்க... கோஷம்.)

ப்யூர் கோல்டு புடைவைகள்!



தலைமுறை தலைமுறையாக, சில வகைப் புடைவைகளைப் பேணிக் காக்க முடியும். ட்ரங்க் பெட்டியில் பழைய மென்மையான வேட்டியிலோ பருத்திப் புடைவைகளிலோ சுற்றி, அதை அவ்வப் போது கண்கள் பனிக்க, தொட்டுத் தட விப் பார்க்கும் பெண்கள் ஏராளம். அவ்வகைப் புடைவைகளைப் பார்ப் போமா...

பைட்டனி சில்க் : மகாராஷ்ட் ராவின் கௌரவம் இப்புடைவை! இது பட்டு அல்ல பட்டான கவிதை...' என நெகிழ்ந்து போகும் பெண்கள் பலர்! பைட்டனி சில்க் அதன் வேலைப்பாடு, ஜரிகை, உயர்தரமான எம்ப்ராய் டரிக்கெனவே வாங்கப் படுகிறது. இன்றும் குஜ ராத்தி, மராத்திய மணப் பெண்கள் கண்டிப்பாக பைட் டனி சில்க் அணிகிறார்கள்.

ஒரிஜினலான பைட்டனி புடைவைகள், ப்யூர் பட்டில் நெய்யப்பட்டு, பார்டர் மற் றும் முந்தியில் தங்கம் + வெள்ளி ஜரிகை யில் வேலைப்பாடு செய்யப்பட்டு வந்தன. ப்யூர் கோல்ட் இதன் ஸ்பெஷாலிட்டி! இன்று தங்கம் விலை மிக அதிகமாக விண்ணை நோக்க, நெசவாளர்கள் வெள்ளி ஜரிகைகளைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

இப்புடைவைக்கெனவே சில ப்ரத்யேக வண்ணங்கள் உண்டு. காலி சந்திரகலா (கறுப்பு), உடானி (மங்கலான கறுப்பு), ஃபிரோஸ் (பச்சை, வெள்ளை, சிவப்பின் கலவை), நீலிகுங்கி (நீலம்)... என்ற நிறங் களில் வந்த பைட்டனியில் இன்று காலத் துக்கேற்றவாறு நிறங்களும் டிஸைன்களும் போடப்படுகின்றன.

மகேஷ்வரி சில்க்: மத்தியப் பிர தேசத்தின் பிரபலமான புடை வைகள் சந்தேரியும் மகேஷ்வரியும். மென் மையான மகேஷ்வரி புடைவைகள் சில்க், காட்டன் இரண்டிலும் வருகின்றன. டெலிகேட் டான இப்புடைவைகள் சோனியா காந்தியின் முதல் சாய்ஸ்! வித்யாசமா சேலை கட்டி அசத்தணும் என நினைக்கும் பெண்கள் கண் டிப்பாக மகேஷ்வரி சேலை களை வாங்கி அணியவும்.

மகேஷ்வரி சேலைகளில் ரிவர்ஸபிள் பார்டர்தான் ஸ்பெஷாலிட்டி. எப்படி மாற்றியும் கட்டலாம். பொதுவாகக் கட் டம், கோடுகள் அல்லது ப்ளெய்னில் வரும் இப்புடைவைகளில், தலைப்பு மற்றும் பார்டர் சூப்பர்... பார்டரில் சன்னமான ஜரிகை வேலைப்பாடு இருப்பதால் எந்த வித நிகழ்ச்சிக்கும் கட்டலாம்.


படோலா புடவைகள்: குஜராத்தில் மிகப்

பிரபலமான சில்க் புடைவைகள் படோலா! 'இக்கத்' ஸ்டைலில் இருக்கும் இப்புடைவைகளில் இருவகை; ராஜ்கோட் படோலா, பட்டான் படோலா. பளிச் கலர்கள் மற்றும் ஜியோமெட்ரிக் டிஸைன்களினாலும் படோலா புடைவைகள் பெண்களைக் கவர்கின்றன.

பட்டான் படோலா புடைவைகளில் போடப்படும் 'டபுள் இக்கத்' டிஸைன்கள் உலகிலேயே, புடைவைகளில் போடப்படும் மிக அதிகக் கஷ்டமான டிஸைன்களாம். சிக்கலான டிஸைன்களை மிகத் திறமையாக வடிவமைக்க சூரத்திலிருந்து மாஸ்டர் நெசவாளர்கள் வருகிறார்கள். இப்புடைவைகளில் டிஸைன்கள் மேல்பக்கமும் கீழ் பக்கமும் ஒரே மாதிரியாக இருக்குமாம். அந்த அளவு நேர்த்தி. எப்படி நம் தமிழ் நாட்டு மணமகள் காஞ்சிப்பட்டு உடுத்தி மணமேடையில் அமருகிறாளோ, அதே போல் படோலா சில்க் புடைவைகளை அணிந்துதான் குஜராத்தி மணமகளும் மணமேடைக்குச் செல்கிறாள்.

- லதா சேகர்





உடையழகு... நடைபழகு...



சத்யம்

உயிரும் உறவுகளும் பணயம் வைக்கப்பட்டாலும் உருக்குலைந்து போகாத ஓர் உதவி கமிஷனரின் கதை. பல அசிஸ்டென்ட் கமிஷனர்களை நாம் பார்த்திருந்தாலும், இதில் விஷால் காட்டும் முறுக்கு விறுவிறுப்பானது. சினிமாவுக்காக மொட்டைபோடும் அளவுக்கு உழைத்துள்ள அவரின் ஆர்வத்துக்கு சல்யூட். அபார்ட்மென்ட் குழந்தைகளிடம் குறும்பு காட்டி நயன்தாராவிடம் காதல் கொஞ்சும் விஷால், போலீஸ் உடை அணிந்ததும் வெளிப்படுத்தும் ஃபேஸ் எக்ஸ்ப்ரஷன் அவர் கேரியரில் புதுசு. என்கவுன்ட்டர் குறித்துப் பேசும் வசனங்கள் ஷார்ப் நைஃப். கச்சித உடற்கட்டில் சண்டைக் காட்சிகளில் பிரமிக்க வைக்கிறார். க்ளைமேக்ஸில் ஆவேசம் பொங்க அவர் நிகழ்த்தும் ஆபரேஷன், திகுதிகு என பரவும் தீ!

நயன்தாரா ஸ்வீட் ஊறுகாய். அழகுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவது அவருக்கு எப்போது உறைக்குமோ தெரியவில்லை! பிரேம்ஜி அமரன் நிகழ்த்தும் சேட்டைகள் சகிக்கவில்லை. விஷாலின் அம்மாவாக வரும் சுதாசந்திரன் நம்மிடம் எந்தப் பரிதாபத்தையும் ஏற்படுத்தவில்லை. செந்தில் - பிரமானந்தம் காமெடி அரதப் பழசு. வில்லனாக வரும் கோட்டா சீனிவாசராவ், இன்னும் எத்தனை படத்தில் இதே மாதிரி கொடூரச் சிரிப்பைக் காட்டப் போகிறார்; நாம் பார்க்கப் போகிறோம்? அலட்சியமாக வந்து மூன்று கொலைகள் செய்துவிட்டுப் போகும் உபேந்திரா, விஷாலுக்கு அடுத்தபடியாக ஸ்கோர் செய்கிறார்.

ஹாரிஸின் இசையா இது? ஆர்.டி.ராஜசேகர் ஒளிப்பதிவு, காட்சியின் அதிரடிகளை நம் எலும்பு வரைக்கும் உணர வைக்கிறது. அழகாக பேக் செய்யப்பட்டு உள்ளே பேப்பராக இருக்கும் பலவீனமான திரைக்கதை. இயக்குநர் பெரிதாக நம்பிய குழந்தைகளின் உலகம் சுவாரஸ்யமாகச் சொல்லப்படவில்லை. அம்மா - மகன் உறவிலும் ஒன்றக்கூடிய அளவு உயிர்ப்பில்லை. விஷால் மட்டுமே எவ்வளவுதான் தாங்குவார்! பல வருடங்களுக்கு முன்னே விஷாலால் ஓ.கே. செய்யப்பட்ட கதை என்கிறார்கள். அப்போதே வந்திருந்தால், ஒருவேளை சத்யம் ஜெயித்திருக்கலாம்.

– நிஷா




கல்கி
தீபாவளி மலர் 2008
விலை ரூ.100/-
பெற
புத்தக விலையுடன்
ரூ.30/-சேர்த்து
அனுப்பவும்
ஒவ்வொரு பக்கமும் ஒரு கலைச் சித்திரம்;
ஒட்டுமொத்தமாக ஒரு பெரும் பொக்கிஷம்!
• பயணம்
• இலக்கியம்
• சிரிப்பு
• சிறுகதைகள்
• ஆய்வு
• அழகியல்
• ஆன்மிகம்
• தத்துவம்
• ஓவியக்கூடம்
• வண்ணப்படத் தொகுப்பு
• கவிதை
• கற்பனைக் காட்சிகள்
இப்போதே உங்கள் உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். அல்லது
மானேஜர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை 600 032.
தொலைபேசி: 4343 8888 தொடர்புகொள்ளுங்கள்
* படம்: ஸ்ரீஹரி

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.